Digitization by Hindu Heritage Foundation of America. HHFA (USA)

தேவாரதம் - ஓர் அறிமுகம்



ஸ்தபதி திரு கே. இராஜாமணி
டாக்டர் சுசில்பாணி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



பிரம்ம தேவன் இதர சாரதியாக அமர்ந்திருக்கும் தோற்றம்
வாசுகி அடித்தளத்தில் காணப்படுகிறார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவரதம்
ஓர் அறிமுகம்

ஆசிரியர்கள்
ஸ்தபதி திரு கே. இராஜாமணி
டாக்டர் சுசில் பாணி

மொழிபெயர்ப்பாளர்
டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி

பதிப்பகத்தார்
ஸ்ரீ கீத கோவிந்த பிரதிஸ்தனா,
புதுச்சேரி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் தலைப்பு:
தேவாரதம் - ஓர் அறிமுகம்

மொழி:
தமிழ்

பதிப்பு ஆண்டு:
முதல் பதிப்பு ஆகஸ்ட் 2010

உரிமை:
ஸ்ரீ கீத கோவிந்த பிரதிஸ்தனா

ISBN NO - 90404709

புகைப்படங்கள் மற்றும் வரைபடங்கள் திருத்தம்:
டாக்டர் சுசில் பாணி

அட்டைப்படம்:
புதுவை ஸ்ரீ மணக்குள விநாயகர் கோயில் தங்கரதம்

பதிப்பகத்தார்:
ஸ்ரீ கீத கோவிந்த பிரதிஸ்தனா,
டி-பிளாக், முதல் தளம்,
சின்னயாபுரம்,
புதுச்சேரி.
E-Mail : geetagovinda@hotmail.com

கணினியில் அச்சு அமைப்பு:
நியூ ஸ்சாப்ட்
Tel : 0413 - 4508119

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னுரை

ஒரு இரதம் என்பது முழு பிரபஞ்சத்தையும் குறிக்கிறது. ஆனால், பிரபஞ்சம் முழுவதும் ஒரு சில வார்த்தைகளின் மூலம் விளக்கிட முடியாதது. பிரபஞ்சமாகிய இறைசக்தி எங்கும் நிறைந்து உள்ளது. அந்த இறைசக்தியின் வெளிப்பாட்டை எடுத்துரைக்கும் சிறிய முயற்சியே இந்நூல் ஆகும். நான், மதுரையில் பட்டமேற்படிப்பு பயின்ற காலத்தில் அவ்வப்போது புதுச்சேரி வந்து போவதுண்டு. அப்பொழுது, புதுச்சேரி, வில்லியனூரில் அமைந்துள்ள அருள்மிகு திருக்காமேஸ்வரர் சிவன் கோயிலில் கலை அம்சத்துடன் கூடிய அழகிய திருத்தேரைக் கண்டு வியந்து போனேன்.

பிறகு, ஒரு சமயம், நான் சிதம்பரத்திற்கு சென்ற போது அங்கு நடராஜப் பெருமானுடைய ஐந்து திருத்தேர்களை தரிசித்து மகிழ்ந்தேன். அதன்பிறகு, கடந்த 1996ம் ஆண்டு முதல், திருக்கோயில்கள் மற்றும் திருத்தேர்களை புகைப்படம் எடுக்க ஆரம்பித்தேன். கும்பகோணம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், ஸ்ரீரங்கப்பட்டினம், ஸ்ரீரங்கம், திருச்சி, மதுரை என பல ஊர்களுக்கு சுற்றுப்பயணம் செய்து திருக்கோயில்கள் மற்றும் திருத்தேர்களை புகைப்படம் எடுத்தேன். தற்போது என்னிடம் கணிசமான அளவுக்கு கோயில் தேர்களின் புகைப்படங்கள் உள்ளன. மேலும், கூடுதல் முயற்சியாக 2004ம் ஆண்டு ஒரிஸ்ஸாவில் நடந்த பூரி ஜெகந்நாதரின் ரத உற்சவத்திற்கு சென்று புகைப்படங்கள் எடுத்து, அவற்றை "கடவுளின் இரதங்கள் – கோயில் இரதம்" என்ற பெயரில் கடந்த 2004ம் ஆண்டு நவம்பர் மாதம் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தின் கண்காட்சி அரங்கில், பொதுமக்களின் பார்வைக்கு வைத்தேன். திருத்தேர்களின் நேர்த்தியான அமைப்பையும், அழகையும் காட்டும் அந்த புகைப்படங்களை பார்வையிட்டு உளம் மகிழ்ந்த என் நண்பர்களும் நல விரும்பிகளும் இவற்றை எல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அச்சிட வேண்டும் என்று என்னிடம் விரும்பி கேட்டுக்கொண்டார்கள். (அடிப்படையில், நான் ஒரு எழுத்தாளனே அல்ல, எனக்கு ஒரு புத்தகம் எழுத வேண்டுமானால் நீண்ட நாட்கள் ஆகும்). ஆகையினால், நான் கோயில் திருத்தேர்கள் சம்மந்தமாக ஏதேனும் விபரங்கள், எழுத்தோலைகள், படிவங்கள் கிடைக்குமா என்று பலவாறு தேடிக்கொண்டிருக்கையில், இது சம்மந்தமாக பேராசிரியர் ராஜூ காளிதாஸ் என்பவர் எழுதிய "இடைக்கால தமிழகத்தின் கோயில் தேர்கள்" என்ற ஒரே ஒரு நூல் காணக் கிடைத்தது. இது கோயில் தேர்களைப் பற்றி தமிழில் வெளிவந்திருக்கும் ஒரே நூல் என்பதறிந்து நான் திகைப்படைந்தேன். இதனிடையில், ஸ்தபதி திரு. புவனசுந்தரம் என்பவரை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இவர், கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் திருவதிகையில் உள்ள தலைசிறந்த சிற்பக்கலை வல்லுனர் ஸ்தபதி குரு ஸ்ரீ இராஜாமணி அவர்களின் புதல்வர் ஆவார். இவரை சந்தித்த பிறகுதான் கோயில் இரதங்களைப் பற்றிய பல விபரங்களை நான் தெளிவாகவும், திறம்படவும், நுணுக்கமாகவும் அறிந்து கொள்ள எனக்கு வாய்ப்பு கிடைத்தது. மேலும், ஸ்தபதி இராஜாமணி அவர்கள் அளித்த கோயில் இரதம் பற்றிய பல மிக முக்கிய குறிப்புகள், பென்சில் வரைபடங்கள், படிவங்கள் போன்றவையே இந்நூலை எழுத அடித்தளமாக இருந்தன.

எல்லையற்ற கருணையுள்ள இறையருளால், என் உற்ற நண்பர் மருத்துவர் திரு ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆங்கிலத்தில் நான் எழுதிய திருத்தேர் பற்றிய விபரங்களை தமிழாக்கம் செய்து உதவினார்.

இந்நூல், நம் பாரத நாட்டின் பாரம்பரியத்தையும், பெருமையையும், கலாசாரத்தையும் கட்டிக்காக்கும் ஆர்வமுடைய வாசகப் பெருமக்களின் திருத்தேர் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தையும் அறிவுத்திறனையும் மேன்மேலும் தூண்டும் என நம்புகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நன்றி

இந்நூலின் முதல் பாதிக்குத் தேவையான தகவல்களை எழுதி அளித்ததற்காக ஸ்தபதி திரு கே. இராஜாமணி அவர்களுக்கு முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், கோயில் தேர், அதன் அமைப்பு, அவற்றில் உள்ள சிற்பங்கள் பற்றிய பென்சில் வரைபடங்களை அளித்ததற்காக ஸ்தபதி திரு. புவனசுந்தரம் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

கடின பணியாகிய இந்நூலை எழுத எனக்கு ஊக்கம் அளித்து, திருக்கோயில் தேர்களில் உள்ள தேவர்கள், தேவதைகள், சிற்பங்கள் பற்றி எனக்கு பல விபரங்களை கொடுத்து உதவிய மருத்துவர் திரு. விஜயவேணுகோபால் அவர்களுக்கு என் நன்றி.

இந்நூலை பிழை திருத்தி, அச்சிடுவதற்குரிய வகையில், அது தற்போதைய தன் இறுதி வடிவம் பெற உதவிய, தமிழ், ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதத்தில் மிகப்புலமை பெற்ற ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தில் உள்ள முதுநிலை ஆசிரியர் திருமிகு பாலசுப்ரமணியம் அவர்களுக்கு என் சிரம் தாழ்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலை கணினியில் சிறந்த முறையில் அச்சுக்கோர்த்தும், அவ்வப்போது ஏற்படும் சிற்சில திருத்தங்களை நன்முறையில் பிழை திருத்தியும் கொடுத்த திரு. தா. சரவணன் அவர்களுக்கு என் நன்றி.

எனக்கு வழிகாட்டியாகவும், கடினமான சூழ்நிலையில் எனக்கு ஆதரவளித்தும், இப்பணியை செவ்வனே நிறைவேற்ற என்னுடனே எப்பொழுதும் உடன் இருக்கும் என் ஆருயிர் நண்பர் திரு ஆர். என். தாஸ் அவர்களுக்கு நன்றி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இத்திருப்பணியை திறம்பட செய்து முடிக்க எனக்கு ஆக்கபூர்வமாகவும், அமைதியான முறையிலும் ஒத்துழைப்பு நல்கிய என் குடும்ப அங்கத்தினர்களுக்கும் நன்றி.

மேலும், இத்தருணத்தில், அமைதியான முறையில் எனக்கு ஊக்கமளித்து, ஒத்துழைப்பு கொடுத்து இந்நூல் சிறந்த முறையில் வெளிவர உதவிய என் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

அன்பன்
டாக்டர் சுசில் பாணி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாராட்டுரை

கவிஞர் “வடுகை” கு. கண்ணன், மு. க
உதவிப் பதிவுத்துறைத் தலைவர் (ஓய்வு) தமிழ்நாடு அரசு
இருப்பு: புதுவை

“தேவ இரதம்; ஓர் அறிமுகம்” என்னும் இந்நூலின் கணினி அச்சில் பிழைகள் ஏதும் ஏற்பட்டிருந்தால், அதனை செப்பமிட்டுத் தரும்படி எனக்கு அளிக்கப்பட்டு, என்னால் ஆழ்ந்து படிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் (புதுவை உட்பட) தேர்களையும், தேர்க்கலையையும் பற்றி, புராண, இதிகாச, வரலாற்று ஆதாரங்களுடனும், தக்க புகைப்பட விளக்கங்களுடனும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இது ஓர் அரிய முயற்சி மட்டுமல்ல; ஒரு மாறுபட்ட முயற்சியும் கூட. இதற்காக என் பாராட்டுகள்.

இதில் போற்றத்தக்கது என்னவெனில், இதை எழுதி இருப்பவர், ஒரு தமிழரோ அல்லது ஒரு தென்னாட்டவரோ அல்ல. அல்லது ஒரு சமய வல்லுநரும் அல்ல. இதனைப் படைத்தவர் ஒரு மருத்துவர் என்றும் அறியும் பொழுது ஏற்படும் வியப்பை விட, அவர் ஒரிய மொழி பேசும் ஒரிஸ்ஸா மாநிலக்காரர் என்பதை அறியும் போது ஏற்படும் வியப்பு பன்மடங்காகும். அவருக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகள். அவருக்கு உதவியாக இருந்த சிற்பி இராஜாமணி அவர்களை நான் நன்கு அறிவேன்; அவர் மரச்சிற்ப கலையில் மிகவும் வல்லவர். அவருக்கும் எனது பாராட்டுகள்.

இந்நூலின் இரண்டாம் பாகம் வெளியிட விரும்பும் அவரது விழைவுக்கு என் வாழ்த்துக்கள்!

பாராட்டுகளுடன்
கு. கண்ணன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நடமாடும் தெய்வம் திருத்தேர்கள்

திருக்கோயில்களில் அமைந்துள்ள நடமாடும் தெய்வம் திருத்தேர்கள். அவ்வழகிய தெய்வத்தேர் பற்றிய பண்டைய வரலாறு, உருவாக்கம், வடிவமைப்பு, பண்பாட்டு நிலை, அறிவியல் ஏற்றம், ஆன்மீக அன்பளிப்பு, பொருளாதார பயன்பாடு, மரபுவழி சிற்பக் கலைஞர்களின் திறமை மற்றும் பல அரிய செய்திகளை உள்ளடக்கிய நூல் திருத்தேர் நூல்.

இந்த சிறந்த புத்தகத்தை எழுதிய மருத்துவர் சுசில் பாணி - சிறந்த கண் மருத்துவர் மட்டுமல்ல, பல்வேறு கலைத்திறன் உடைய கலைஞரும் கூட. குறிப்பாக ஒளிப்படக் கலைஞர். ஆலயங்களில், தெய்வத்தேர்களில் காணப்படும் ஓவியங்கள், சிற்பங்கள், வான் உயர் கோபுரங்கள், இயற்கை எழில் வண்ணங்கள் ஆகியவற்றை தன் புகைப்பட கருவி மூலம் மின்னச் செய்யும் ஆற்றல் பெற்றவர்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள அழகிய படங்கள் திருத்தேர் பற்றியும், அவற்றில் அமைந்துள்ள சிற்பக் கலையழகு பற்றியும் சிறப்பாக எடுத்து கூறுவன. அழகிய வண்ணப் புகைப்படங்கள் ஆலயத்தேரை நமது கண் முன்னே நடமாடச் செய்து மகிழ்விக்கின்றன.

பல ஆண்டுகள் முயற்சித்து, இவ்வரிய நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழில் தேர் பற்றிய மிகச் சில நூல்களே உள்ளன. அந்த நூல்களுக்கெல்லாம் மகுடம் வைத்தது போல் இந்நூல் அமைந்துள்ளது. தமிழகத்தின் தேர்கலை வரலாற்றை அறிய விரும்பும் அன்பர்களுக்கு இந்நூல் ஒரு பெரிய வரப்பிரசாதம் ஆகும்.

திருத்தேர் அமைப்பு, அதன் பல்வேறு வகைகள், பயன்பாடு, தேர் - ஆலயம் இவற்றுக்கிடையே உள்ள தொடர்பு, தேர்த் திருவிழா, தேரோட்டம், சமூக ஒற்றுமை, கிராமியப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளாதாரம், கலாச்சார பண்பாட்டுத் தொடர்பு ஆகியவை இந்நூலில் விரிவாக அழகிய வண்ணப்படங்களுடன் தரப்பட்டுள்ளது பெரும் பாராட்டுக்குரியது.

நமது பண்பாடு, சிற்பக்கலைத் திறன், சமூக அமைப்பு, வாழ்வியல் கலை, ஆன்மீக இணக்கம், மரபு வழி சிற்பக் கலைஞர்களின் அன்பளிப்பு, பொருளாதார கண்ணோட்டம் மற்றும் பல தகவல்களை எழில்மிகு வண்ணப் படங்களுடன் வடிவமைக்கப்பட்ட ஓர் அரிய பொக்கிஷம்.

திருத்தேர் தேரோட்டத்தை நேரில் சென்று காணும் இன்பத்தை, இந்த நூலைப் படித்து சுவைப்பதன் மூலம் கிடைக்கும் என்பது திண்ணம்.

இது போன்ற பல நூல்களை மருத்துவர் சுசில் பாணி படைக்க வேண்டும். மக்கள் படித்து நமது பண்பாட்டு கலைத்திறனைப் போற்ற வேண்டும்!

வாழ்க தேர்கலை! வளர்க சிற்பக்கலை!

அன்பன்

டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



தங்க இரதம்

தங்க இரத வரைபடத்தின் குறுக்குத் தோற்றம். பிரம்மா கையில் கடிவாளம் மற்றும் சாட்டையுடன் தேர் சாரதியாக அமர்ந்திருக்கிறார். கையில் விளக்கேந்திய பெண்ணின் சிற்பங்கள் முன். பின் பக்கங்களில் உள்ளன. மலரின் தோற்றத்தில் செதுக்கப்பட்ட தளம். தேரின் முன்னும் பின்னும் அலங்கரிக்கப்பட்ட திரைச்சீலைகள். அலங்கரிக்கப்பட்ட தூண்கள், இரண்டு அடுக்கு சிம்மாசனம் ஆகியவை காணப்படுகிறது. விநாயகப்பெருமாள் தன் வாகனத்துடன் விமானத்தின் மேல் உள்ள தோற்றம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

பக்கம்

1. தேர் பற்றிய வரலாறும், வேத, இதிகாச,புராண இலக்கியக் குறிப்புகளும் ... 1
   - 1.1 விநாயகர் துதி ... 1
   - 1.2 தமிழகத்தில் புகழ் பெற்ற ஆலயங்களும், உருவாக்கப்பட்ட குறிப்புகளும் ... 1
   - 1.3 தமிழகத்தில் புகழ் பெற்ற தேர்களும், உருவாக்கப்பட்ட குறிப்புகளும் ... 2
   - 1.4 தேர்கலை வளர்க்கும் திருவதிகை சிற்பிகளின் பெருமையும் – திறமையும் ... 2
   - 1.5 ராஜ ஸ்தபதி ராஜாமணி ... 3
2. இலக்கியத்தில் தேர் பற்றிய குறிப்புகள் ... 6
   - 2.1 மனுநீதி சோழன் ஆட்சியில் தேர் பற்றிய குறிப்பு ... 6
   - 2.2 பாரியின் வள்ளல் தன்மையை உரைத்த தேர் பற்றிய குறிப்பு ... 7
   - 2.3 ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் தேர் பற்றிய அறிவிப்பு ... 7
   - 2.4 நளவெண்பாவில் தேர் பற்றிய குறிப்புகள் ... 8
   - 2.5 ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியில் தேர் பற்றிய குறிப்பு ... 9

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பக்கம்

2.6 இறையனார் களவியல் அகப்பொருளுரையில் தேர் பற்றிய குறிப்பு ... 9

2.7 யஜூர் வேதக்குறிப்பு ... 10

2.8 தேர் வளர்ச்சியும் - வரலாறும் ... 11

2.9 திருவாரூர் மரத்தேர் ... 13

2.10 வில்லியனூர் வெள்ளித்தேர் ... 13

2.11 தேர் செய்யப் பயன்படும் மரங்கள் ... 13

2.12 தேர் அளவுகள் ... 14

2.13 தேர் அச்சு ... 14

2.14 தேரின் ஆயுள் ... 14

2.15 முடிவுரை ... 16

3 அறிமுகம் ... 18

4 கோயிலும் இரதமும் ... 25

5 கோயில் தேருக்கான சடங்குகள் ... 33

5.1 தரு சங்க்ரஹா ... 33

5.2 இரத பிரதிஷ்டை ... 34

6 தேர்த் திருவிழாவும் இரத யாத்திரையும் ... 38

7 இரத உத்ஸவமும் இரத யாத்திரையும் ... 40

7.1 சமூக பிணைப்புகள் ... 44

8 திருக்கோயில் தேர் அமைப்பு ... 46

9 தரம் பிரித்து வகைப்படுத்துதல் ... 51

9.1 சக்கரங்கள் ... 51

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பக்கம்

9.2 அளவு ... 52

9.3 சக்கரங்களின் அமைப்பு ... 52

9.4 பீடம் ... 53

10 உபபீடம், அதிஷ்டானா மற்றும் படா ... 54

10.1 விமானம் ... 57

10.2 இரத முகம் ... 59

10.3 சிற்பங்கள் ... 59

10.4 தென்னிந்திய கோயில் தேர்களில் உள்ள நடன உருவங்களைப் பற்றிய சுருக்கமான குறிப்பு ... 61

10.5 நடராஜர் - பேரண்டத்தின் ஆடலரசர் ... 62

11 ஊர்த்தவ தாண்டவம் ... 65

11.1 அர்த்தநாரீஸ்வரர் ... 67

11.2 சதுர தாண்டவம் ... 68

11.3 கஜாசுர சம்ஹார மூர்த்தி ... 68

11.4 சிவகணங்கள் ... 69

11.5 சிவனின் அபூர்வ வடிவங்கள் ... 69

11.6 நிர்த்த கணபதி ... 70

11.7 விஷ்ணு - நடன தோரணைகள் ... 71

11.8 கலியதமனா ... 72

11.9 பக்தர்களின் களியாட்டம் ... 72

11.10 யாழ் வாசிப்போர் ... 72

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பக்கம்

11.11 சரஸ்வதி, கங்கை மற்றும் பார்வதி ... 73

12 திரிபுர தகனச் சருக்கம் ... 75

13 காளையார் கோவில் ரதம் ... 81

14 குப்பமுத்து ஆசாரியின் கதை ... 89

15 முடிவுரை ... 104

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆலயமும் இரதமும்

காமாட்ஷியம்மன் கோயிலின் அலங்கரிக்கப்படாத நிலையில் உள்ள இரதம். இரதத்தில் இரண்டு அடுக்கு சிம்மாசனம், மூன்று அடுக்கு விமானம், எட்டு பக்க சுற்றுப் பாதையுடன், சக்கரங்கள் மற்றும் கயிறு இணைந்துள்ளது. இரதத்தின் பின்புறத்தில் கோயிலின் கோபுர தரிசனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ மகா விஷ்ணுவின் திருநாமம், தங்க கலசம்,
துவஜம் ஆகியவற்றை தாங்கி நிற்கும் இரத விமானம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவரதம் - ஓர் அறிமுகம்

தேர் பற்றிய வரலாறும், வேத, இதிகாச, புராண இலக்கிய குறிப்புகளும்

வினாயகர் துதி

திருவாக்கும் செய் கருமம்கை கூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவார் தங்கை.

வேத கால கோவில் சிற்ப சாஸ்திரங்கள் பற்றி கூறுவது: மயநூல்

தமிழகத்தில் புகழ் பெற்ற ஆலயங்களும், உருவாக்கப்பட்ட குறிப்புகளும்

துவாபரயுகத்திலே உள்ள ஜெய வருடம் கார்த்திகை மாதம் 8ம் தேதி திங்கட்கிழமை திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயம் முகூர்த்தம் செய்யப்பட்டது. மேற்படி மாதம் 12ம் தேதி வெள்ளிக்கிழமை சிதம்பரம் நடராஜர் ஆலயம் முகூர்த்தம் செய்யப்பட்டது. மேற்படி வருடம் சித்திரை மாதம் 10ம் தேதி திருவாரூர் தியாகராஜர் ஆலயமும், மேற்படி வருடம் வைகாசி மாதம் 21ம் தேதி திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் ஆலயமும், ஜெய வருடம் ஆவணி மாதம் 6ம் தேதி திருவானைக்காவல் ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் ஆலயமும் முகூர்த்தம் செய்யப்பட்டது. மரசிற்ப சாஸ்திரங்கள்படி தேர், கலை வளர்க்கும் தேவ விஸ்வகர்மா சிற்பிகளால் உருவாக்கப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழகத்தில் புகழ் பெற்ற தேர்களும், உருவாக்கப்பட்ட குறிப்புகளும்

துவாபரயுகத்தில்தான் முதன் முதலாக தேர்கள் தேவாலயங்களுக்கு செய்யப்பட்டு தேர்த் திருவிழாக்கள் உருவாக்கப்பட்டன. வாகனங்களிலும், பல்லக்கிலும், சகடையிலும் பவனி வந்த சுவாமி ஊர்வலங்கள், தேர்களில் சுவாமி, அம்மன் மற்றும் உற்சவாதி சிலைகள் அலங்கரிக்கப்பட்டு தேர்களில் அமர்த்தப்பட்டு ஊர்வலமாக வந்தன. சுவாமிகள் தேர்களில் வீதிவலம் வந்ததே தேர்த்திருவிழாவாக அமைந்தது.

தேவாலயங்களும், கர்ப்பகிரகங்களும், தேர்களும் முழங்கோல் அளவை பயன்படுத்தி செய்யப்பட்டன என சிதம்பரம் நடராஜ சுவாமியின் கர்ப்பகிரகத்தை அடுத்த வாசற்காலில் குறிக்கப்பட்டு உள்ளது. இந்த தேவாலய தேர் அமைப்புகள் அனைத்தும் தேவ விஸ்வ கர்மாக்களால் உருவாக்கப்பட்டன. கிருத யுகத்திலும், திரேதா யுகத்திலும் போர்க் காலங்களில் நான்கு படைகளில் தேர்ப் படை சிறப்பாக இருந்ததாக சிற்ப, இதிகாச வரலாறு கூறுகிறது. பௌத்த சரிதங்களிலும் தேர்த் திருவிழாக்களுக்கு முக்கியத்துவம் பிற்காலத்தில் உருவாக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

தேர்கலை வளர்க்கும் திருவதிகை சிற்பிகளின் பெருமையும் - திறமையும்

திரிபுரமெரித்த விரிசடை கடவுளை
அதிகை அட்ட வீரட்டானேஸ்வரர் என்பர்!
தேவ தச்சனான தேவ விஸ்வகர்மனே
தேவ வீரட்டானேஸ்வரனுக்கு,
தேர் செய்து தந்த முதல் சிற்பியாவர்!
தேர் சிற்பக்கலைக்கே இலக்கணம் தந்தவர்
திருவதிகை சிற்பிகளே என்பர்!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திக்கெட்டும் புகழ் விரிந்த
திருவதிகை பிச்சாசாரி குடும்பமென்பர்!
திருப்பதி திருமலையானுக்கு தேர் செய்து
திருவதிகைக்கு புகழ் சேர்த்தனர்!
கலைமகளின் அருளினாலும்
மலைமகன் ஈசன் கருணையாலும்
திருமகளின் கடாட்சத்தாலும்
சிற்பக் கலையில் ஸ்தபதி பட்டம் பெற்றனரே!
தேர் செய்வதும் தெய்வப்பணி என்பர்;
தேவாலயங்கள் தோறும்
தேர்த்திருவிழா தழைத்தோங்க
திருவதிகை சிற்பிகள் உதவுவரே!
காலங்கள் தோறும் கலைஞர் புகழ்
கலங்கரை விளக்காக ஒளிரும்! ஒளிரும்!!

ராஜ ஸ்தபதி ராஜாமணி

தேர் என்ற சொல்லுக்கு
தேர்ந்தெடு என்ற பொருளுமுண்டு;
தேர்ந்த வாகனங்களில்
தேர்வாகனமே சிறந்ததென்பர்;
தேவாலயத் திருவிழாவில்
தேர்த்திருவிழாவே தேர்ந்ததென்பர்;
தேசமாண்ட மன்னர்களும்
தேர்ப்படையே உயர்ந்ததென்பர்;
தேர்ந்த சிற்பியின் திறமை
தேர் சிற்பத்தில் தெரியுமென்பர்;
வானுயுயர்ந்து புகழ் பரப்பும்
வண்ணத்தேர் செய்ததாலே
மணியான சிற்பிகளுக்கு
ராஜா என்பர்;
ராஜாமணி சிற்பியையே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ராஜ ஸ்தபதி என்பார்;
பிச்சாசாரி குடும்பத்தவர்க்கு
பெரும் புகழ் பரப்புவதற்கு
பேரன் ராஜாமணி சிற்பப் புகழ்
பிரம்மசிற்ப சாஸ்திரம் கலையால்தானே!
தென்னாடுடைய சிவனே போற்றி!
திருவதிகை ஈசா போற்றி! போற்றி!!
ஸ்தபதி புகழ் போற்றி! போற்றி!!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



தங்கம் அல்லது வெள்ளி இரதம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இலக்கியத்தில் தேர் பற்றிய குறிப்புகள்

மனுநீதி சோழன் ஆட்சியில் தேர் பற்றிய குறிப்பு

தமிழக தேர்களில் சிறப்பு வாய்ந்தது திருவாரூர் தியாகேசர் கோயில் தேர். மனுநீதி சோழனின் மகன் திருவாரூர் வீதிகளில் தேர்வலம் வரும்போது அந்த தேரில் பசுக்கன்று ஒன்று எதிர்பாராதவிதமாக அடிபட்டு இறந்து போனது. இதைக் கண்ட தாய்ப் பசு நீதி கேட்டு மனுநீதி சோழனின் அரண்மனையில் உள்ள ஆராய்ச்சி மணியை நடுநிசி இரவில் ஓங்கி அடித்து ஒலிக்கச் செய்தது. மஞ்சத்து அறையில் ஆராய்ச்சி மணி ஒலியை கேட்ட மனுநீதிச் சோழன், அமைச்சரை உடனே அழைத்து, ஆராய்ச்சி மணி அர்த்த ராத்திரியில் ஒலித்ததற்கான காரணம் அறிந்து வரச் செய்தார். அமைச்சர் உடனே ஆராய்ச்சி மணி அடித்த பசுவைக் கண்டார். அதன் கண்களில் கண்ணீர் வடிவதைக் கண்டார். அந்த பசு அமைச்சரைக் கண்டதும் விழி நீரோடு வீதியில் ஓடியது. அந்தப் பசுவைத் தொடர்ந்த அமைச்சர் வீதியில் மாண்டு கிடந்த பசுங்கன்றைப் பார்த்தார். பசுவின் கண்ணீருக்கான காரணத்தை அறிவால் உணர்ந்து அறிந்தார். அமைச்சர், பசுவின் கண்ணீருக்கான காரணத்தை அரசரிடம் எடுத்துக் கூறினார். மாலை நேரத்தில் மனுநீதிச் சோழனின் ஒரே மகன் தேர்வலம் வரும்போது, அத்தேரில் பசுங்கன்று அடிபட்டு இறந்த உண்மையை அரசர் அறிந்தார். உடனே பசுவுக்கு நீதி வழங்க மனுநீதிச் சோழன் தன் ஒரே மகனை பசுங்கன்று இறந்த இடத்திலேயே படுக்கச் செய்து, மனுநீதிச் சோழனே தேரைச் செலுத்தி மகனுக்கு மரண தண்டனை வழங்கினான். மனுநீதிச் சோழனின் நீதி தவறாத ஆட்சியை உலகிற்கு உணர்த்தியதில் தேர் வாகனம் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இறுதியில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவாரூர் தியாகராஜப் பெருமானே, மனுநீதிச் சோழன் அவையில் நேரில் தோன்றி மனுநீதிச் சோழனின் நீதி தவறாத ஆட்சியை உலகுக்கு உணர்த்துவதற்காக தான் சோதித்ததாக கூறி ஈசன் ஜோதியில் மறைந்தார். இவ்வாறாக தேரின் புகழை ஈசன் நேரில் வந்து காட்டியதை இலக்கியத்தில் காணலாம்.

பாரியின் வள்ளல் தன்மையை உரைத்த தேர் பற்றிய குறிப்பு

கடையேழு வள்ளல்களில் புகழத்தக்க பெருமையை உடையவன் பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன் பாரி. பாரியின் புகழ் பரப்பியது அவனது தேர்வலமே. ஒருநாள் பறம்பு மலையைச் சுற்றி வர மாலையில் புறப்பட்டான் பாரி மன்னன். பறம்பு மலையின் அழகை ரசித்துக் கொண்டு தேரில் சென்ற பாரி மன்னன், முல்லைக்கொடி ஒன்று பற்றிப் படர கொழு கொம்பு இன்றி ஓரிடத்தில் ஆடிக்கொண்டு இருந்ததைக் கண்டான். உடனே, அந்த மன்னன் முல்லைக்கொடி படர்வதற்காக தான் பவனி வந்த தேரையே விட்டுவிட்டு நடந்தே தன் அரண்மனைக்கு சென்றடைந்தான்.

இலக்கியத்தில் பாரிமன்னனின் வள்ளல் தன்மையை எடுத்துக் காட்டியது தேர் பவனியே என்பதை இதன் மூலம் அறியலாம்.

ஐம்பெரும் இலக்கிய காப்பியமான மணிமேகலையில் தேர் பற்றிய அறிவிப்பு

ஐம்பெறுங் காப்பியங்களில் சிறப்பு வாய்ந்தவை இரட்டை காப்பியமாய்ப் புகழ் பெற்ற சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை. சிலப்பதிகார காப்பியத்தின் ஆசிரியர் இளங்கோ அடிகள்.

சிலப்பதிகாரத்தில் இந்திர விழா சிறப்பு வாய்ந்ததாக கூறப்படுகிறது. அந்த சிலப்பதிகார காப்பியத்தில் கண்ணகியின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கற்பு மாண்பு புகழப்பட்டுள்ளது. அதே போன்று மணிமேகலையின் துறவுக் கோலத்தை சிறப்பிக்க வந்த சீத்தலைச் சாத்தனார் என்ற புலவர் மணிமேகலை காப்பியத்தில் விழா அறை காதையில் பூம்புகாரில் நடக்கும் இந்திரவிழாவை வாழ்த்துகையில் தேர் பற்றிய குறிப்பு தருவதை ஆராயலாம். ***ஒளிருவோர் மாவரும் தேரும் மேவும் களிரும் சூழ்தரக் கண்முரசியம்பிய பசியும், பிணியும் பகையும் நீங்கி வகியும் துனாவனும் சுரக்க*** என வாழ்த்தும் அணிவிழா அமைந்துள்ளது. அந்நகரத்திற்கு வருவோர் பூம்புகாரில் நடைபெறும் இந்திர விழாவில் ஒளிரும் வாள் ஏந்திய வீரரும் யானைப் படையுடன் தேர்ப் படையில் வருவதைக் காண்பர் என குறிப்பிட்டுள்ளார்.

நளவெண்பாவில் தேர் பற்றிய குறிப்புகள்

நளவெண்பாவில் சங்கப்புலவர் நாற்படையும் நாற்குணமாய் தமயந்தியின் குணத்தை கூற வந்த புலவர், பெண்களின் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களையே நான்கு வகைப் படைகளாக, தேர்ப் படை, யானைப் படை, குதிரைப் படை, காலாட் படையாக வருணித்துள்ளார்.. இதில் பெண்ணின் பெருமையை கூறும் அச்சம் என்ற குணத்தையே தேர்ப்படையாக புலவர் கூறுவது தேர் என்பதை முதல் தன்மையான படையாகவோ, வாகனமாகவோ கருதாமல் பெண்ணின் தலைமைக் குணமாக கருதுவதை காண்கிறோம்.

நளவெண்பா புலவரே கலித்தொகை காண்டத்தில்,

நால்வகைப் படையும் தோன்றல்
பல்லாயிரம் பரியும் பத்து நூறாயிருந்தாலும்
சொல்லார் மணித்தேரும் தோற்றதன்பின்
முன்தோற்று வானின் முதல்தோற்றமும் பின்தோன்றும்.

என்று கூறுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியில் தேர் பற்றிய குறிப்பு

அகில்வெற்பும் இன்று ஆனை ஆனதோ!
அணியும் மாருதம் புரவியானதோ!
முகில் அனைத்தும் அத்தேர்கள் ஆனவோ!
முரிவேலை போர் வீரர் ஆனதோ!

கலிங்கமன்னர் படைகளை புகழ வந்த ஜெயங்கொண்டார், அகில்புகை யானைப்படை ஆனதோ, அலையும் வசந்தகாற்று குதிரைப்படை ஆனதோ, மேகங்கள் அனைத்தும் தேர்ப்படையானதோ, பகைவரை வெல்லும் வேல் எல்லாம் வீரர் ஆனதோ என்று புகழ்கிறார். வானில் உள்ள மேகங்கள் எல்லாம் தேர் ஆனதோ என்று புகழ்வதில் இருந்தே தேரின் புகழ் வான்மேகத்தைப் போன்றது என்கிறார்.

'வம்பு மரந்தேர்' என்று பதிற்றுப் பத்து இலக்கியத்தில் உள்ளது. 'இரும்புதேர் கெடித்த தோன்றல்' என்று பதிற்றுப்பத்தில் தேரின் பெருமை கூறப்பட்டுள்ளது.

இறையனார் களவியல் அகப்பொருளுரையில் தேர் பற்றிய குறிப்பு

பாண்டிய மன்னர் பத்தினிப் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையான மணம் உண்டு என்பதை கனவில் கண்டார். அக்கனவு பற்றியும் அக்கனவின் பொருள் பற்றியும் கூறுவோர்க்கு 1000 பொற்காசுகள் பரிசாக தருவதாக கூறுகிறார்.

கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத்தும்பி
காமம் செப்பாது காண்பது மொழிமோ
பயலியது கெழியியலின் நட்பின் அறியும்
அறியவும் உளவோ நீயறியும் பூவே!

என்ற பாட்டு மூலம் உயரிய நெறியுடைய பத்தினிப் பெண்களின் வாழ்க்கையைக் கூற வந்த புலவர், தேரின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உயர்வை, பத்தினிப் பெண்களின் கற்புக்கு உவமையாகக் கூறுவதில் இருந்தே தேரின் உயர்வும் பெருமையும் தெரிய வரும்.

பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்ற ஈசனார் வாதத்தை, பாண்டிய மன்னரின் அவைக்கள தலைமைப் புலவரான நக்கீரர், பெண்களுக்கு உள்ள கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை என்று மறுத்து வாதிட்டார். ஈசனார், பத்தினிப் பெண்கள் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என வாதிட்டார். இல்லவே இல்லை என நக்கீரர் வாதிட்டார். ஈசனார், 'நீ வணங்கும் ஈசனின் இடப்புரம் உள்ள பார்வதிதேவி கூந்தலுக்கு?' என வினவ, அதனையும் நக்கீரர் மறுத்தார். ஈசனார், நெற்றிக்கண்ணைக் காட்ட, நக்கீரர் 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என வாதிட்டார். இறையனார் தன் உருவத்தைக் காட்ட, புலவர் நக்கீரரும், பாண்டிய மன்னரும் இறைவனை வணங்கி பிழை பொருத்தருளுமாறு வேண்டினர். மகா சிவனாரும் தமிழ் மீது கொண்டுள்ள பற்றைப் போற்றிப் புகழ்ந்து, புலவர் நக்கீரனாருக்கு மோட்ச பெருவாழ்வு அளித்தார்.

தென்னாடுடைய சிவனே போற்றி!
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி!

என புகழும் ஈசனார் அருளிய இறையனாரின் களவியல் மற்றும் அவர் பொருளுரை மூலம் தேரின் புகழை நாம் அறியலாம்.

பொதுவாக பாரத நாட்டின் அணிகலனாகத் திகழும் தமிழகத்தில், தேர்த் திருவிழா, குறிப்பாக சைவ மற்றும் வைணவக் கோயில்களில் வேதகாலத்தில் இருந்து விஞ்ஞான யுகமாகத் திகழும் தற்காலம் வரை சிறப்பாக நடந்து வருவதை நாம் அறியலாம்.

யஜுர் வேதக்குறிப்பு

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், திருவதிகையில், மயன் விஸ்வகர்மா செய்தளித்த தேரில் ஏறி, அக்னி அடிப்பாகமாகவும், சந்திரன் நடுப்பாகமாகவும், விஷ்ணு நுனிப்பாகமாகவும் இருந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அம்பினை உருவாக்கி 3 அசுரர்களை வென்று தேவர்களைக் காப்பாற்றினார் என்ற குறிப்பு மகாபாரதம் என்ற இதிகாசத்தில் உள்ளது. பூமியைத் தேராகவும், தேவர்களை தேர் பாகங்களாகவும், பிரம்மாவை சாரதியாகவும், அக்னியை அம்பாகவும் பயன்படுத்தி விஷ்ணுவின் உதவியோடு நேரில் போர் நடந்ததாகக் கூறப்படுகிறது.

மகாபாரதத்தில், அர்ச்சுனனுக்கும், கர்ணனுக்கும் நடந்த முதல் 15 நாள் போரில், அர்ச்சுனன் தேருக்கு சாரதியாக கண்ணனும், கர்ணனுக்கு சகுனி தேர் சாரதியாகவும் இருந்தனர். அந்தப் போரில் அர்ச்சுனனை வெற்றி பெறச் செய்து, கர்ணனுக்கு, கண்ண பரமாத்மா காட்சி அளித்து மோட்சம் வழங்கியதாக மகாபாரத இதிகாசம் கூறுவதில் இருந்து போர்களுக்கு தேர் பயன்பட்டதை அறியலாம்.

தேர் வளர்ச்சியும் - வரலாறும்

வேத, இதிகாச, புராண, இலக்கிய காலங்களிலும் மற்றும் தற்காலத்திலும் தமிழகத்தில் உள்ள சுமார் 35000 கோயில்களில் தேர்த்திருவிழா நடந்து வருகிறது. 12 மற்றும் 13ம் நூற்றாண்டுகளில் தேர் அமைப்பும், சிற்பங்களும் சிறுகச் சிறுக சிறப்படைந்து உள்ளன. கோயில் திருவிழாக்களில் நிறைவு விழாவில் தேரில் இறைவன் அமர்ந்து வீதியுலா வருவதே தேர்த்திருவிழாவாக கொண்டாடப்படுகிறது.

சிவன்கோயில்களில் உள்ள தேர்களில் சைவ நெறிக்குரிய சிற்பங்களும், வைணவக் கோயில்களில் உள்ள தேர்களில் வைணவ நெறிக்குரிய சிற்பங்களும், கிராம தேவதை உள்ள கோயில்களில் உள்ள தேர்களில் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களில் குறிப்பிடும் சிற்பங்கள் செய்யப்பட்டு இருப்பதை நாம் அறியலாம். தேர், சிற்ப சாஸ்திர நெறிப்படியே இவை அமைந்து இருப்பது சிறப்புடையதாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



பிரம்ம தேவர் கையில் சாட்டையுடன் தேரோட்டியாகவும் குதிரைகள் கால்களை கிளப்பிய நிலையிலும் கையில் சாமரத்துடன் பெண் ஒருவர் நிற்கும் நிலையிலும், மலர்களைப் போல் அலங்கரிக்கப்பட்ட அடித்தளமுடனும், எளிய சிம்மாசனம் பறக்கும் நிலையில் உள்ள வித்தியாதர்களின் சிற்பங்கள், எட்டு தூண்களின் மேல் அமைந்த அலங்கரிக்கப்பட்ட விமானம் உள்ள வெள்ளி (அ) தங்க இரதத்தின் தோற்றம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேத காலத்தில் கல் தேர்கள் செதுக்கப்பட்டன. காலத்தால் அழியாத, இடத்தை விட்டு அசையாது நிலையாக, ஆங்காங்கே இறை சிற்பங்களோடு, இமயம் முதல் குமரி வரை இருப்பதை அறியலாம். மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரையில் செதுக்கப்பட்டுள்ள பஞ்ச பாண்டவ ரதங்களை உதாரணமாகக் கூறலாம்.

திருவாரூர் மரத்தேர்

திருவாரூர் மரத்தேரில், இறைவன் தியாகராஜர் தன் அம்பாளுடன் ஆண்டுதோறும் பங்குனித் திங்களில் ஆயில்ய நட்சத்திரத்தில் பவனிவரும் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. சோழர்களின் பொற்கால ஆட்சியையும், மனுநீதிச் சோழனின் நீதிதவறாத ஆட்சியையும் பற்றி திருவாரூர் தேரில் உள்ள சிற்பங்களின் மூலம் நாம் அறியலாம்.

வில்லியனூர் வெள்ளித் தேர்

புதுவை மாநிலத்தில் வில்லியனூரிலும் மற்றும் தமிழகத்திலும் உள்ள பல கோயில்களில் வெள்ளித்தேர் திருவிழா நடைபெறுகிறது. அதுபோல, அறுபடை முருகன் ஆலயங்களில் தங்கத்தேர்த் திருவிழா நடைபெற்று வருகிறது என்பதை நாம் அறிவோம். புதுவையில் உள்ள மணக்குள வினாயகர் கோவிலில் தங்கத்தேர் திருவிழா நடந்து வருகிறது.

கல்லாலும், மரத்தாலும், வெள்ளி, தங்கம் மற்றும் வெண்கலம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட தேர்கள் ஆலயங்களில் இருந்து வருகின்றன. வைரத்தாலும் உருவாக்கப்பட்ட தேர்கள் வையகத்தில் உள்ளன.

தேர் செய்ய பயன்படும் மரங்கள்

சுமார் 75 ஆண்டுகள் வளர்ந்த இலுப்பை, வேங்கை, தேக்கு மற்றும் 30 ஆண்டுகள் வளர்ந்த கருமருது, கருவேல மரம், பிள்ளை மரம், காட்டுவாகை, ஆயில் கோங்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகிய மரங்களையும் தேர் செய்யப் பயன்படுத்தலாம். காலத்தால் அழியாத வைரம் பாய்ந்த மரங்களையே சிற்ப சாஸ்திரம் அறிந்த ஸ்தபதிகள் தேர் செய்யப் பயன்படுத்துவர்.

தேர் அளவுகள்

தென்னிந்தியாவில் சோழர் ஆட்சியே தேர்த்திருவிழாவின் பொற்காலம். "திருவாரூர் தேரழகு" என்ற புகழ் மொழிக்கு உரியதாகும். சுந்தர பாண்டியரை வென்ற சோழனால் தங்கத்தேர் ஈசனார் கோயிலுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது. விஜய நகர அரசர்களாலும், மதுரை நாயக்க மன்னர்களாலும் தேர்க்கலை செழுமை பெற்றது. கிரீடம், அலங்கார அமைப்பு, உப்பிடம், சக்கரம், இருசுக்கட்டை, பூதப்பார், செலாப்பார், சரம் தாங்கிப்பார், நேத்திப்பார், நட்டுக்கண், பூதலைப்பார், கஜப்பார், சிங்கப்பார், யானைப்பார், தளவரிசைப்பார், தேவாஸனம், சிம்மாஸனம், அலங்காரக்கால் என்ற ஐம்பெரும் பிரிவுகளில் தேர்கள் இருக்கும். சிறிய தேர் அதாவது கால்பாகம் உயரம் பன்னிரண்டு அடி பதினேழு அடி, இருபத்தோரு அடி. நடுத்தேர் அதாவது அறை பாகம் உயரம் முப்பத்தி ஒன்னரை அடி. பெரிய தேர் அதாவது முக்கால் பாகம் ஐம்பத்தோரு அடி, எழுபத்தி ஒன்று அடி. பூரண பெரிய தேர் முழு அறை உள்ளது, 75 அடிகளுக்கு மேலுள்ளது. தேரின் உயரத்திற்கு ஏற்ப சக்கரங்களின் விட்ட அளவுகள் அமைக்கப்படும்.

தேர் அச்சு

பண்ருட்டி படை வீட்டம்மன் திருத்தேர் மர அச்சுகளால் இயக்கப்படுகிறது. மிக உயர்ந்த தேர்கள், இரும்பு அச்சுக்களால் செய்யப்பட்டு தேர் திருவிழா நடைபெற்று வருகிறது.

தேரின் ஆயுள்

சிறந்த தேர் சிற்பங்கள் இலுப்பை மரம் கொண்டு செய்யப்படும். தேரின் ஆயுள் சுமார் 100, 200 மற்றும் 300

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



தேரின் நீள் குறுக்குத் தோற்றத்தில் உட்புற, வெளிப்புற சக்கரங்கள்,மூன்று அடுக்கு, இரண்டடுக்கு சிம்மாசனம் இருபத்திநான்கு தூண்கள் விமான த்தை தாங்கி பிடித்துள்ளது தேவர்களின் சிற்பங்களை வைக்க ஏதுவாக நிறைய நிலைகள் உள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆண்டுகள் இருக்கும். தமிழகத்தில் தேரோடும் வீதிகள் குறைக்கப்பட்டு வருகின்றன. ஆகையால் தமிழக ஆலயங்கள் சிலவற்றில் கோயிலைச் சுற்றி மாடவீதிகளில் தேர் வலம் வருவதை அறிவோம். பொதுவாகவே, கிராம தேவதைகள், வினாயகர், முருகன், அம்மன், சண்டிகேஸ்வரர் வீதியுலா வருவதை நாம் அறிவோம்.

ஆலயங்களில் இறைவன் பவனி வர பயன்படுவது தேர். தேர், தலைப்பகுதி, உடற்பகுதி, இடுப்பு பகுதிக்கு கீழ் உள்ள கால்கள் பகுதியென முப்பெரும் பிரிவுகளாக அமையப்பெற்றுள்ளது தேர், அதேபோன்று முத்தொழில் புரியும் ஆக்கல்-பிரம்மதேவன், காத்தல்-திருமால், அழித்தல்-பரமேஸ்வரன் என முத்தொழிலும் இயங்கி வருகிறது. உடல், பொருள், உயிர் அனைத்தையும் காத்து அருளும் கலைமகள், திருமகள், மலைமகள் ஆகிய தேவதைகள் பவனி வர பயன்படும் தேர்க் கலை, தமிழகத்தில் மேன்மேலும் சிறப்படைய அரசும், கலைஞர்களும், சிற்பிகளும் சேர்ந்து பாடுபட வேண்டும்.

முடிவுரை

வேத, இதிகாச, புராண, சங்க காலங்கள் மற்றும் தற்காலம் ஆகிய ஐந்து காலங்களிலும் ஆலயங்கள்தோறும் தேர்த் திருவிழா சிறப்பாக நடந்து வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

கல்லாலும், மண்ணாலும், உலோகத்தாலும், மரங்களாலும் தேர் செய்யப்பட்டு ஆலயங்களில் தேர்த்திருவிழா சிறப்பாக நடந்து வருகிறது. தேர் செய்யும் சிற்பக் கலைஞரின் அருமைகளும், பெருமைகளும் பண்டைய தமிழகத்தின் மூவேந்தர்களாலும் மதிக்கப்பட்டு முறையாக சிற்பக்கலை வளர்ந்து வந்துள்ளதை சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

இக்கட்டுரையில் மூவேந்தர்களில் மனுநீதிச் சோழனின் நீதிதவறாத பெருமையை - ஒரு பசுவுக்கு நீதி வழங்கியதை -

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேர்பவனி மூலம் அறியலாம். இதன் மூலம் சோழனின் நீதி வழுவாமையும் தேர்த்திருவிழாவின் அருமையையும் நாம் தெளிவாக உணர்வதோடு தேர் செய்ய சிற்பிகளை அரசர்கள் ஆதரித்த தொழில் வளத்தையும் அறியலாம்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகத் திகழும், கண்ணகியின் கற்பு மாண்பினை விளக்கும் சிலப்பதிகாரமும், மற்றொரு காப்பியமான பசிப்பிணியைப் போக்கும் திறம் பெற்ற மணிமேகலையும், இந்திரவிழாவில் பயன்படுத்திய தேர்கள் பற்றிய குறிப்புகள் தருவதை அறியலாம்.

கொழுகொம்புக்கு ஏங்கித் தவழும் முல்லைக் கொடிக்கு தான் பவனி வந்த தேரையே பந்தலாக்கினான் பாரிமன்னன். அவனுக்கு இறவாப் புகழ் தந்தது தேர் என்பதை அறியலாம்.

நளவெண்பா புலவர் பெண்களின் 4 குணங்களையும் விளக்க வந்த போது, தேர்ப் படை மூலம் சங்ககால பெண்களுக்கு உள்ள நான்கு குணங்களை விளக்கியுள்ளார்.

கலிங்கத்துப்பரணி, எட்டுத்தொகை நூல்கள், இறையனார் களவியல் பொருளுரையிலும் தேரினைப் போன்று தமிழ்ப்பெண்களின் பண்புடைய வாழ்க்கை அமைந்துள்ளதை அறியலாம்.

தேர் செய்யும் சிற்பக் கலையின் வளர்ச்சியையும், அந்தக் கலையினை வளர்க்க தேர் சிற்பக்கலையை தங்கள் தொழிலாகக் கொண்டு செயலாற்றும் சிற்பிகளின் பெருமைகளையும், கோயில்களில் தேர் செய்யும் சிற்பக் கலைகள் பெருமை பெற்று வருவதையும் அந்த சிற்பிகளுக்கு அரசு தரும் ஆதரவும் அவர்களின் சிற்ப சாஸ்திரம் முறையாக சரியாக உயர்ந்து வருவதையும் அறிகிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறிமுகம்

திருக்கோயில் திருத்தேர்கள் பொதுவாக மரத்தால் செய்யப்படுகின்றன. மரம் மக்கக் கூடியது, மழை, வெயில், தூசு இவைகளால் பெரிதும் பாதிக்கப்படக்கூடியது. பெரும்பாலும் திருத்தேர்கள் மூடிப் பாதுகாக்கப்படாமல் வெட்ட வெளியில் நிறுத்தி வைக்கப்படுகின்றன. எனவே தற்போது உள்ள திருத்தேர்கள் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட வயதுடையவை அல்ல. ஆனால் திருத்தேர்கள் தனது வடிவிலும், நாகரிக பாணியிலும் இடைக்கால இந்தியாவை பிரதிபலிப்பவை. கிபி 12 முதல் 14-ஆம் நூற்றாண்டு வரையில் திருக்கோயில்கள் எழுப்பும் பணி செழித்தோங்கியிருந்திருக்கிறது. பெரும்பாலான கோயில் களில் ஆயிரங்கால் மண்டபங்கள் உள்ளன. ஒவ்வொரு தூணிலும் தேவர்கள், தேவதைகள், தேவ நடன மங்கையரின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கால கட்டத்தில் பெரிய மற்றும் சிறிய கோயில்கள் பல தனக்கென ஒரு திருத்தேரைப் பெற்றிருந்தன. சில பெரிய கோயில்கள் இரண்டு அல்லது மூன்று திருத்தேர்களைப் பெற்றிருந்தன.

கோயில் திருத்தேர் அமைக்கும் பணி சிந்து சமவெளி நாகரிக காலத்திலிருந்து வேரூன்றியிருக்கிறது. சிந்து சமவெளி நாகரிக காலத்திற்கு முன்பே வேதகாலத்தில் கடவுளர்களுக்கான சாரட்டுகள் மற்றும் தேவ இரதங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ரிக்வேதம் தேவ இரதத்தின் பல பாகங்களான அக்ஷா, சக்ரா, கோசா போன்றவைகளை விளக்கிக் கூறுகிறது. (அக்ஷா என்பது அச்சு, சக்ரா என்பது சக்கரம் மற்றும் கோசா என்பது உடற்பகுதி). அதர்வணவேதம் மற்றும் மூன்று சம்ஹிதைகள், இரதமுகம் - இரதத்தின் முன் பகுதி பற்றி விரிவாக கூறுகின்றன. இரதத்தின் மகுடப்பகுதி - தலைப்பகுதி அல்லது இரதசிரசு ஆகும். வருணன், இந்திரன், அக்னி, சூரியன், சாவித்திரி, அஸ்வினி, மருதர், உஷா போன்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதகால தெய்வங்களுக்கான பல்வேறுபட்ட வாகனங்கள் அடங்கிய ஏராளமான இரதங்கள் வடிவமைக்கப்பட்டன. வேதகால தெய்வத்தை அடையாளம் காணும் பல விதங்களுள் அவைகளுக்குரிய இரதங்களும் அடங்கும்.

மேற்கூறிய விவரங்களிலிருந்து பலவகையான தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் வேதகாலத்திலிருந்தே இரதங்கள் இருந்து வருவது தெளிவாக விளங்குகிறது. அது பிற்பாடு புராணகாலத்தில் மேலும் விரிவடைந்தது. பல்வேறு காரணங்களுக்காக பலவகைப்பட்ட இரதங்கள் இராமாயண காலத்தில் பயன்படுத்தப்பட்டதை நன்கு அறிய முடிகிறது. அரசர்களும் மந்திரிகளும் இராணுவக் காரணங்களுக்காக தேர்களை உபயோகப்படுத்தினர். பொதுமக்கள் பொருட்களை ஏற்றிச்செல்லவும், பிரயாணத்திற்கும், திருமணம் போன்ற சமூக விழாக்களில் கலந்து கொள்ளவும் மற்றும் சில காரணங்களுக்காகவும் தேர்களைப் பயன்படுத்தினர். திருவிழாக் காலங்களில் தெய்வங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட தேர்கள் 'தேவ இரதங்கள்' ஆகும்.

அசுர அரசன் ராவணனைக் கொன்றபின் அயோத்திக்கு இராமன் தேவர்களால் தரப்பட்ட புஷ்பக விமானத்தில் வான்வழியே திரும்பியதாக கூறப்படுகிறது.

கௌடில்யர் தனது 'அர்த்தசாத்திரத்தில்' மூன்று வகையான இரதங்களை நான்காம் நூற்றாண்டில் கூறுகிறார். அவைகள் இராணுவம், வீடு மற்றும் சமயங்களுக்கானவை. கடைசியிலானது, 'தேவரதம்' இது தேவர்களுக்கானது. பிற்காலத்திய அசோகர் கல்வெட்டுகள் மூலம் மிகப்பெரிய திருத்தேர்கள் மற்றும் திருவிழாக்கள் அறியப்படுகின்றன. முதல் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரையிலான பல கல்வெட்டுக்கள் தென்னிந்தியாவின் பல கோயில்களில், திருத்தேர், பல்வேறு சடங்குகள், இரத உற்சவம், இரதத்திற்கான நன்கொடையாளர்கள் போன்றவை பற்றி விவரிக்கின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அரசர்களால் கட்டப்பெற்ற கல்தேர்களைக் கொண்ட திருக்கோயில்கள் பல உள்ளன. ஆனால் அவைகள் நிலையானவை. ஒரு குறிப்பிட்ட வகை ரதம் ஒரு குறிப்பிட்ட தெய்வத்திற்கு வாகனமாக உபயோகப்படுத்தப்பட்டு, ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு பிரயாணிக்க உபயோகப்படுத்தப்பட்டது.

ஒரிசாவில் சூரியனுக்காக ஏற்படுத்தப்பட்ட கோனார்க் திருக்கோயில், தேர் வடிவில் அமைந்துள்ளது. அதன் இருமருங்கிலும் பல சக்கர வடிவங்களும் ஓடும் பாணியில் கால்களை தூக்கிய வடிவில் குதிரைகளும் வடிவமைக்கப் பட்டுள்ளன. கர்நாடகாவில் ஹம்பியில் இது போன்ற அழகான சிறிய கற்தேர் கோயில்கள் உள்ளன.

திருக்கோயில் திருத்தேர்கள் நாட்டின் எல்லா பகுதிகளிலும், உண்மையில் இந்திய துணைக்கண்டம் முழுவதும், வடக்கே இமயம் முதல் தெற்கே இலங்கை வரையிலும், மேற்கே பாகிஸ்தானிலிருந்து கிழக்கே இந்தோனேஷியா வரையிலும் கட்டப்பட்டிருக்கின்றன.

ஆனால் அநேக சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த பல அடுக்குகளை கொண்ட திருத்தேர் அமைக்கும் கலை தென்னிந்தியாவில் தற்கால தமிழகம், கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலத்தின் சிற்சில இடங்களில் மட்டுமே நிலைத்து உயிர் பெற்றிருந்தது.

இரதக்காரர்கள் என்போர் திருக்கோயில் திருத்தேர் செய்பவர்களாகவும், தேர் செய்பவர்களாகவும் இருந்தனர். தமிழ்நாட்டில் இவர்கள் ‘ஸ்தபதிகள்’ என அழைக்கப் படலாயினர். இவர்கள் மிகப் பழம்பெரும் பரம்பரையினர். இவர்களது கலை ஒரு தலைமுறையினரிடமிருந்து, அடுத்த தலைமுறையினருக்கு கற்றுத்தரப்பட்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தடையின்றி நீடித்து வருகிறது. இவ்வாறு வம்ச பரம்பரையாகவே (குரு பரம்பரை வழி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாகனங்களின் வரைபடங்கள்

ஸ்ரீ மகா விஷ்ணுவின் கருட வாகனம்



ஆர்யபட்டா- இந்திரனின் யானை வாகனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அல்லாமல்) வந்தது. ஆனால் தமிழ்நாட்டில் சிறு கிராமங்களில் வாழ்ந்து வந்த சில குடும்பங்களே இந்த அரிய கலையை அறிந்திருந்தன.

ஏற்கனவே குறிப்பிட்டபடி தென்னிந்தியாவில் தேர்த் திருவிழா பற்றிய செதுக்கிய சாசனங்கள் ஏராளமாக உள்ளன. பிரம்மோத்ஸவம், அதற்குரிய சாதனங்கள், கடைப்பிடிக்க வேண்டியவை, ரதக்காரர்களின் கடமைகள், தேர் செய்ய கைக்கொள்ள வேண்டிய அமைப்பு முறைகள், ரதக்காரர்களுக்கு தரப்பட வேண்டிய ஊதியம் இவைகளைப் பற்றி எல்லாம் செதுக்கிய சாசனங்கள் விரிவாகக் கூறுகின்றன.

இரதப் பிரதிஷ்டை என்பதற்கான இலக்கியப் பொருள், கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிகள், ஒழுங்குமுறைகள் பற்றியவை. புதிய ரதம் புனிதப்படுத்தப்பட்டு வெள்ளோட்டம் விடப்படுவது குறித்தும், திருத்தேர் புதிதாக செய்யப்பட்ட பின் தேரோட்டம் எப்படி நடத்துவது என்பது பற்றியும், இவ்விதிகளும் ஒழுங்குமுறைகளும் விவரிக்கின்றன. ரதயாத்திரை மற்றும் ரத உத்ஸவம் போன்ற தருணங்களில் வடம்பிடித்து தேர் இழுக்க வேண்டிய முறைபற்றி ஏராளமான சாஸ்திரங்கள் உள்ளன.

திருக்கோயில் திருத்தேர் கட்டப்பட வேண்டியது பற்றி 'சில்பசாஸ்திரம்' கூறுகிறது. சிற்பம் என்பதற்கான இலக்கியப் பொருள் சிலை அல்லது வடிவம் என்பதாகும். இது தேவர் அல்லது தேவதையாக இருக்கலாம். சாஸ்திரம் என்பதன் இலக்கிய பொருள் அறிவும் விதிமுறைகளும் ஆகும். எனவே, இறைவனது திருமேனி உருவத்தை உருவாக்குவதற்கான அறிவையும், விதிமுறைகளையும் விளக்கிக் கூறுவதே சிற்பசாத்திரம் ஆகும். சிற்பத்தை வடிவமைப்பவர் சிற்பி ஆவார். சிற்பம் கீழ்வரும் ஏதேனும் ஒரு பொருளைக் கொண்டு செய்யப்படலாம். கல், மரம், வெள்ளி, தங்கம், பனை ஒலைகளில் வண்ணம் தீட்டுதல், துணி, பட்டு, காகிதம், பட்ட - சித்திரம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போன்றவைகளைப் பயன்படுத்தலாம். இரதத்தை செய்பவர்கள் இரதக்காரர்கள் என்றும், அவர்களில் தலைமையானவர் 'ஸ்தபதி' என்றும், கலைஞர்களின் குரு என்றும் அழைக்கப்பட்டனர்.

இதுபோலவே வாஸ்து சாஸ்திரம், உருவமும் தோற்றமும் உள்ள பொருள்களைப்பற்றி அறிவியல் அறிவைக் கூறுவதாகும். வாஸ்து சாஸ்திரம் இவ்வாறாக அனைத்துப் பொருள்களைப் பற்றிய விரிவான வர்ணப் பட்டியலைத் தருகிறது; மரம், மண், சுண்ணாம்பு, கல், இரும்பு, மணல் மற்றும் பிற, திருக்கோயில் வீடு, அரண்மனை அல்லது நகர நிர்மாணம் செய்வதில் மேற்கண்ட பொருள்களின் உபயோகம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் கூறுகிறது.

வேத காலத்திலிருந்தே குரு சிஷ்ய பரம்பரை வழக்கம் (ஆசிரியர் மாணவர் உறவு) இந்தியாவில் இருந்திருக்கிறது. இதன் மூலம் குறிப்பிடத்தக்க அறிவு ஒரு தலை முறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்கு நூறாண்டுகளுக்கு மேல் செலுத்தப்பட்டிருக்கிறது. எந்தவித அதிக மாற்றமுமின்றி இந்தப் புனித அறிவு, பல நூற்றாண்டுகள் உயிர் பிழைத்திருக்கிறது. ஆன்மீக அனுபவமும் அதன்பின் இருக்கும் உண்மையும் இந்தக் கலை எவ்வித மாறுபாடுமின்றி நிரந்தரமாக இருக்க உதவுகிறது. இந்தப் பாரம்பரியமுறையே இந்தியாவின் பலகலைகள், பண்பாடு, இசை, நாட்டியம், கிராமியக்கலைகள், கோயில் சிற்பக்கலை, கோயில் கட்டும் கலை போன்றவை இன்றளவும் அழியாமல் இருக்க உதவுகிறது என்பது உண்மை. எனவே திருத்தேர் செய்யும் பணியிலும் இதுவே உண்மையாகும். குடும்ப வழக்கப்படி இந்த ரதக்காரர்கள் இரதம் செய்யும் அறிவை ஒரு தலை முறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு இடைவெளி ஏதுமின்றி கொடுக்கிறார்கள். இந்த ரதக்காரர்களுக்கு சாஸ்திரவிதிகள் தெரியுமோ தெரியாதோ, ஆனால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னோர்களிடமிருந்து கற்றுக்கொண்ட அக்கலையை உண்மையாகவும், நேர்மையாகவும் பின்பற்றி, சாஸ்திரத்தில் கூறியுள்ளபடியே குற்றம் குறை ஏதுமின்றி, திருத்தேர்களை உருவாக்குகிறார்கள். எனவே தற்போதுள்ள கோயில் திருத்தேர்கள், இரு நூற்றாண்டுகளுக்கு மேல் இருப் பனவாயினும், அமைப்பு வடிவத்தில் இடைக்கால இந்தியப் பாணியை பின்பற்றப் பட்டவையே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோயிலும் இரதமும்

இந்துக்களுக்கு கோயில்கள் தினசரி வாழ்க்கைக்கான முக்கிய கூறுகளை அமைத்துத் தருகின்றன. பெரும்பாலான இந்துக்கள் இஷ்ட தேவதை அல்லது குலதெய்வம் இவற்றை கருத்தில் வைத்து அவைகளை தினமும் வணங்குவர். பெரும்பான்மையான இந்துக்கோயில்கள் பொதுவாக சிவன், விஷ்ணு அல்லது அம்மன் இவைகளில் ஏதேனும் ஒன்றை முதன்மையாக வைத்து அர்ப்பணிக்கப்பட்டிருக்கும். கோயில் வளாகத்திலேயே மற்ற தேவர்கள் மற்றும் தேவிகளுக்கும் சிறிய கோயில்கள் இருக்கலாம். இந்து தேவர்களும், தேவிகளும் முழு பிரபஞ்சத்தையும் பிரதிபலிப்பவை. கோயில் திருத்தேர், கோயிலுக்கும் முதன்மை கடவுளுக்கும் ஒரு பிரதிநிதி. உண்மையில் இரத உத்ஸவத்தின் போது, இரதத்தில் வீற்றிருக்கும் உற்சவமூர்த்திக்கு கோயிலின் உள் செய்யப்படும் அனைத்து சடங்குகளும் செய்யப்படும். ஒருபடி மேலாக பூரி இரதயாத்திரையின்போது முதன்மை இறைவர் ஜெகநாதர் தேரில் இருப்பார். உற்சவமூர்த்தி இருப்பதில்லை. எனவே கோயிலின் உள் எந்த சமய சடங்கும் இல்லை. தேரிலேயே அனைத்து சடங்குகளும் நிகழ்த்தப்படுகின்றன.

கடவுள் அல்லது இறைமை உடன் கோயில் தேர், இரத யாத்திரையின் போது நகர்கிறது. எனவே இது அசைந்து வரும் கோயிலாகும் (நிலையாக உள்ள கோயில் போல் இல்லாமல்). ஆனால் சில கோயில்கள் கற்சக்கரம் கொண்ட இரதம் போன்றவைகளாக கட்டப்படுகின்றன. கோனார்க் மற்றும் ஹம்பியில் உள்ள அழகான கல் ரதங்கள் இரண்டுமே நகர்த்த முடியாதவை.

கர்ப்பக்கிரகம் என்பது கோயிலின் திருநிலைத்திரு (மூலக்கோயில்) இடமாகும். இங்கு மூலஸ்தானம், முதன்மை கடவுள் நிறுத்தப்படுவதால் புனிதம் மிகுந்த இடமாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அமைகிறது. அது பொதுவாக சதுர வடிவில் அமைக்கப்பட்டு கிழக்கு திசை திறந்தவெளியாகவும், தெய்வம் கிழக்கே பார்ப்பது போலவும் உருவாக்கப்படுகிறது.

இறைவன் சிம்மாசனம் அல்லது உயர்ந்த பீடத்தில் வைக்கப்படுகிறார். சில சமயங்கள் இந்த பீடம், சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய பல அடுக்குகளைப் பெற்றிருக்கும். இல்லையெனில் கர்ப்பகிரகம் எந்த சிற்பவேலைப்பாடும் இல்லாமலும் இருக்கும். மூலஸ்தானம் 'அந்தரலா' எனும் குறுகிய வழி மூலம் வெளிப்புறம் தொடர்பு பெற்றிருக்கும். இதன் முன் 'முகமண்டபம்' இருக்கிறது. அதாவது இது முன் கூடம்; பக்தர்கள் இறைவனை தரிசனம் செய்ய இந்தக் கூடம் பயன்படுகிறது. இந்தக் கூடம் பொதுவாக இதைவிட பெரிய கூடமாகிய மகாமண்டபத்துடன் இணைக்கப்படுகிறது. இது பெரிய கூடம். ஆகையால் மகாமண்டபம் என்றழைக்கப்படுகிறது. மகா மண்டபத்தின் வடக்குப் பக்கத்தில் முதன்மை தெய்வத்தின் வாழ்க்கைத் துணை அதாவது அம்மன் சந்நதியின் கோயில் பொதுவாக இருக்கும். விஷ்ணு கோயிலாக இருப்பின் லட்சுமியும், சிவன் கோயிலாக இருப்பின் அம்மன் அல்லது பார்வதி கோயில் இருக்கும்.

மகாமண்டபமானது இரு மருங்கிலும் உள்ள கூடத்துடன் மேலும் இணைக்கப்படுகிறது. இறைவனைப் புகழக்கூடிய இசைக்கச்சேரி, நடனம் மற்றும் வாய்ப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகள் மகாமண்டபத்தில் நடத்தப்படுகின்றன. போகமண்டபத்தில் பக்தர்களுக்கு இறைவனின் பிரசாதம் வழங்கப்படுகிறது. அது உணவுக்கூடம், சில பெரிய கோயில்களில் கல்யாண மண்டபமும் உள்ளன. அங்கே திருமண நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. நிறைய விமானங்கள் எங்கே உள்ளனவோ அந்தக் கோயில்களில், விமான மண்டபம் என்றழைக்கப்படுகிற தனிக்கூடமும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



நான்கு தூண்கள், ஒரு அடுக் சிம்மாசனம் உள்ள ஒரு எளிய இரதம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளது. மகாமண்டபத்தின் எதிரில் சிவன் கோயிலாயிருந்தால் நந்திவாகனமும், விஷ்ணு கோயிலாயிருந்தால் கருட வாகனமும் வைக்கப்படுகிறது. பலிபீடம் அல்லது வேண்டுதலை சமர்ப்பிக்கும் இடம் வாகனத்தின் பின் உள்ளது. அங்கே ஹோமங்களும், கற்பூரம் ஏற்றும் சடங்குகளும் நிகழ்த்தப்படுகின்றன. பலிபீடத்திற்கு அடுத்து கொடிமரம் என்கிற 'துவஜஸ்தம்பம்' உள்ளது. இறைவனது கொடியும், கோயில் கொடியும் அதில் இடம்பெறும். இந்த துவஜஸ்தம்பம் சில சமயம் பித்தளை அல்லது தங்கத் தகடுகளால் வேயப்பட்டிருக்கும். துவஜஸ்தம்பத்தின் நான்கு பக்கங்களிலும் பாகூர் சிவன் கோயிலில் உள்ளது போல, விநாயகர், கார்த்திகேயர், லிங்கோத்பவர், சிவன்பார்வதி போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும்.

முதன்மை கோயிலுக்கு வெளிப்பக்கம் மற்ற கடவுளர்களுக்கான கோயில்களும் அதே வளாகத்தில் இருக்கும். பெரும்பாலும் சிவன் கோயில்களில் விநாயகர் மற்றும் முருகனுக்கு கோயில்கள் அமைந்திருக்கும். பெருமாள் கோயில்களில் பாம்பின் மீது படுத்த வண்ணம் உள்ள விஷ்ணு (ஸ்ரீரங்கநாதர்), லட்சுமி நாராயணன் மற்றும் அனுமார் கோயில்கள் இருக்கும்.

மேற்படி விளக்கங்கள் பொதுவாக இந்துக் கோயில்களில் காணப்படும் அமைப்புகளின் சுருக்கமாகும். முதன்மை தெய்வத்திற்குண்டான நிலைக்குத் தகுந்த அனைத்து ஏற்பாடுகளும் கோயில் தேருக்கும் பொருந்தும்.

பொதுவாக முதன்மை தெய்வம் உயர்த்தப்பட்ட பீடத்தில் அதாவது சிம்மாசனத்தில் வைக்கப்படுகிறது. சில சமயங்களில் இந்த பீடம் சிறு உருவங்கள் கொண்ட இரு அடுக்குகளாக இருக்கும். அது தவிர மூலஸ்தானம் எந்த அழகு வேலைப்பாடும் இன்றி மொட்டையாகவும் இருக்கும். சில

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



ஸ்ரீ ராம ஆஞ்சநேயர் (அ)
அனுமன் வாகனம்



இரதத்தின் குறுக்குத் தோற்றம்
(விமானம் நீங்கலாக)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமயங்களில் மூலஸ்தானத்தில் 10 முதல் 15 அடி உயரம் வரையில் அழகான சிற்பங்கள் (நிலைக்குத்தாக) வடிக்கப்பட்டிருக்கும். இது பெரும்பாலும் இதிகாசங் களிலிருந்தும், புராணங்களிலிருந்தும் முதன்மை தெய்வத்திற்கு சம்பந்தமுடைய செய்திகளை தெரிவிப்பவையாக இருக்கும். பெருமாள் கோயில்களில் இராமாயண கதையும், மகாபாரதமும், தசாவதாரக் கதைகளும் பிரசித்தம், சிவன் கோயில் எனில் சிவனின் பல்வேறு வகைப்பட்ட வடிவங்களான கங்காதர மூர்த்தி, நடராஜர் மற்றும் தட்சிணாமூர்த்தியின் வடிவங்கள் இருக்கும். சில இடங்களில் நன்கொடையாளர்கள் மற்றும் சாத்திரங்கள் பொறிக்கப்பட்ட விபரங்கள் இருக்கும்.

வெளிப்புறச்சுவர்கள் ஒரு குறிப்பிட்ட உயரத்திற்கு நேர்குத்தாக நிலைத்து நின்று பின் உச்சியில் சாய்வு கொண்டு குறுகி கலசங்களையும், கொடிக்கம்பத்தையும் தாங்கவல்லதாக உள்ளன. இது விமானம் எனப்படும். கீழ்நோக்கிய குறுகிய சரிவு கோயில் கட்டப்பட்ட இடம் மற்றும் காலத்தைப் பொறுத்து பல்வேறு வகைகளில் உள்ளன. ஒரிஸ்ஸா மற்றும் மத்தியப் பிரதேசத்தில் இவைகள் வட்ட வடிவமாகும், தென்னிந்தியாவில் செவ்வக வடிவிலும் இருக்கும்.

தேரின் நிலைக்குத்து வடிவம் கோயிலின் நிலைக்குத்து வடிவத்தை ஒத்ததே. தேரின் அடிபீடம் சக்கரங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அச்சின் மீதும் அதன் குறுக்கு மரத்திம்மைகளாலும் ஆனவை. தேரானது அடிப்பீடம் அல்லது ஆஸ்திராவபிதுக்கம், படம் மற்றும் விமானம் என்று அடி முதல் உச்சி வரை பிரிக்கப்படுகிறது. பீடத்தின் நடுவில் சிம்மாசனம் ஒன்று அல்லது இரு அடுக்குகளாலான உயர்ந்த இருப்பிடமாகவும் அதன் மீது தெய்வமும் வைக்கப்படுகின்றன.

தென்னிந்தியக் கோயில் தேர்கள், அந்தக் கோயில் போன்ற வடிவிலேயே பெரும்பாலும் வடிவமைக்கப்படுகின்றன. அவை குறைந்தபட்சம் இரண்டு முதல் ஆறு சக்கரங்களைப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெற்றிருக்கின்றன. சக்கரங்கள் அச்சில் பூட்டப்பட்டிருக்கின்றன. உறுதியான மரத்திம்மைகளான பீடம் தேரின் பீடமாக அமைந்து அச்சின்மீது உள்ளது. குறுக்கும் நெடுக்குமாக சில மரத்திம்மைகள் சற்றே உயரமாக நேர்குத்து வடிவத்தில் பீடத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இது உப பீடம் என்றழைக்கப்படுகிறது. அடிபீடத்தின் வழியாக தேரின் எடை முழுவதும் சக்கரத்திற்கு பாய்ச்சப்படுகிறது.

அடுத்த பகுதி 'அதிஷ்டானம்'. இது சக்கரத்தின் உயரத்திற்கு பரந்து எழுந்து, சக்கரத்தின் விளிம்பின் சரியான உயரத்தோடு நின்று விடுகிறது. இந்தப் பகுதியில் ஒன்று அல்லது பல அடுக்குகளில் தேவர்கள், தேவதைகள், யாளி, நடனமாடுவோர், மிருகங்கள் என்று பல உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளது. எந்த இடமும் வெறுமையாக இல்லாமல், மாடக்குழிகளில் கூட சிறு உருவங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.

அடுத்த பகுதி 'நரசனா'. அதிஷ்டானத்திலிருந்து செங்குத்தாக மேல்நோக்கி எழுந்து 'தேர்தட்டு' வரையில் கிடை மட்டத்தில் சேர்கிறது.

மேடையின் மையப்பகுதியே பீடம்; ஒரு உயர்ந்த மேடை. ஒன்று அல்லது இரண்டு அடுக்குகளை கொண்ட சிறிய வடிவம் கொண்டது. அந்த பீடத்தில் தான் இறைவன் சிம்மாசனத்தில் வைக்கப்படுகிறார். அந்த சிம்மசனத்தில் பிரதம மூர்த்தி அல்லது உற்சவமூர்த்தி அமர்கிறார். உற்சவமூர்த்தி பொதுவாக பித்தளை அல்லது வெள்ளி அல்லது தங்கத்தாலானது. அது கோயிலின் உள் இருக்கும் தெய்வத்தின் சரியான பிரதி ஆகும்.

இறைவன் அமர்ந்துள்ள பீடத்தில் பொதுவாக அஷ்டலட்சுமியின் உருவங்கள் (லட்சுமியின் எட்டுவகை வடிவங்கள்) பொறிக்கப்பட்டிருக்கும். எந்த தெய்வத்திற்குரிய பீடமாயிருப்பினும் இதில் மாற்றமில்லை, அது சிவனுக்காகவோ, விஷ்ணுவுக்காகவோ, அம்மனுக்காகவோ அல்லது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கணபதிக்காகவோ மற்ற எதற்காக இருந்தாலும், மிகவும் பிரசித்தமானது. அவைகளில் சந்தானலட்சுமி, கஜலட்சுமி மற்றும் தான்யலட்சுமி முக்கிய வடிவங்களாகும்.

பீடம் மரத்துண்டுகளால் (குறைந்தபட்சம் 32 முதல் 80 எண்ணிக்கையில்) மேடையில் பிணைக்கப்பட்டு சூழ்ந்திருக்கும். அவை மேல் உள்ள விமானத்தை தாங்குவன மேடையிலிருந்து விமானம் தொடங்கும் வரை உள்ள பகுதி ‘படா’ என்றழைக்கப்படுகிறது. படா முடிவடையும் பகுதியில் விமானம் தொடங்கி நுனிவரை குறுகி உயர்ந்து மேல்நோக்கி செல்கிறது. அது மரப்பட்டைகளால் செய்யப்பட்டு ஒரே தொகுதியாக இணைக்கப்பட்டு, எடை முழுவதும் மேடையில் செலுத்தும்படியாக செங்குத்தான மரக்கட்டைகளால் ஆனது.

விமானம் வழக்கமாக வெறுமையானதாகவும் விழாக்களின் போது அழகுப்படுத்தப்பட்ட ஒட்டுத்துணியால் மூடப்பட்டும் இருக்கும். தேரில் உள்ள தெய்வத்தின் சம்பந்தமான உருவங்கள் இத்துணியில் தீட்டப்பட்டிருக்கும். பெருமாள் கோயில் தேராக இருப்பின் இராமாயணம், தசாவதாரம் மற்றும் பிற கதைகளைக் காட்டுவதாக இருக்கும். விமானத்தின் மேல்பகுதி நேராக குறுகி முடிகிறது. இது ‘கிரிவா’ என்றழைக்கப்படும். பிறகு சற்று சாய்ந்த நிலையில் அதன் மீது ‘கலசம்’ வைக்கப்படுகிறது. கலசத்தின் உச்சியில் கொடிக்கம்பம் அல்லது துவஜஸ்தம்பம் தேரில் உள்ள தெய்வத்திற்கான கொடியுடன் உள்ளது. கலசமும், கொடியுடன் கூடிய கொடிக்கம்பமும் விழா தொடங்கும் நாளில் வைக்கப்பட்டு, இரத உத்சவம் முடிந்ததும் பாதுகாக்கப்பட வேண்டி நீக்கப்பட்டுவிடும்.

கோயில்தேர் மற்றும் கோயில் இவைகள் பற்றிய இந்தக் குறுகிய விவரத்தில், இரதம் ஒரு அசையும் கோயில் என்பதும், அமைப்பிலும், சடங்குகள் செய்வதிலும் இரண்டிற்கும் வேறுபாடில்லை என்பதும் புலனாகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோயில் தேருக்கான சடங்குகள்

தரு சங்க்ரஹா

தேர் செய்ய தேவையான மரங்களை தேர்ந்தெடுப்பது பற்றிய விபரங்களை கூறுவதால் இது தருசங்க்ரஹா என அழைக்கப்படுகிறது. (தரு - மரம், சங்க்ரஹா - தேர்ந்தெடுத்தல்), இந்தப்பணி சமயநூல்களில் விவரிக்கப்பட்டுள்ள விதிகளின்படி மிகவும் எச்சரிக்கையாக செய்யப்படுகிறது. எனவே ரதக்காரர்கள் மற்றும் சிற்பிகளுடன் இது சம்பந்தமாக மிகவும் கற்றுத்தேர்ந்த ஒரு ஆசாரியார் அல்லது பூசாரி உடன் சென்று தோப்பில் மரத்தை தேர்வு செய்வார். இது பொதுவாக மழைக்காலம் முடிவடைந்த பின் செய்யப்படுகிறது. வெட்டி எடுக்கப்பட வேண்டிய மரம் மிகவும் பிஞ்சாகவோ அல்லது மிகவும் முற்றியதாகவோ இருக்கக்கூடாது. நாக, யக்ஷ, பிசாசு, ரக்யஷர் மற்றும் கந்தர்வ தோஷம் நீங்கிய மரங்களாக அவை இருக்க வேண்டும். பறவைகள் மற்றும் சிறு விலங்குகளின் கூடுகள் எதுவும் மரத்தில் இருக்கக்கூடாது. முண்டு முடிச்சுகள் இன்றியும் நோயின்றியும் மரம் இருக்க வேண்டும். அது எந்த குறையுமற்ற நல்ல மரமாக இருக்க வேண்டும். சரியான முறையில் அடையாளம் கண்டபின் பூசாரி மரத்திற்கு பூஜையை செய்து இறைவனை வேண்டுவார். பிறகு சிற்பி மரத்தை வெட்டி, பெருந்துண்டங்களாக மாற்ற அவை சிற்பக் கூடத்திற்கு அனுப்பப்படும்(எங்கே சிற்பங்கள் செய்யப்படுகிறதோ அந்த இடம்). அடி மரம் சக்கரங்கள், அச்சு மற்றும் சிற்பங்கள் செய்யப் பயன்படுத்தப்படும். சிறு உருவங்கள் செய்ய சிறிய கிளைகள் பயன்படுத்தப்படுகின்றன. மெல்லியப் பட்டைகள் விமானத்தில் பலகணிச்சட்டங்கள் பொருத்தப் பயன்படுகின்றன.

பொதுவாக தேர் செய்ய அதிகமாக பயன்படுத்தப்படும் மரவகைகள் இலுப்பை, வேங்கை, தேக்கு, களிமருது மற்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிள்ளை மருது போன்றவையாகும். தேருக்காக பயன்படுத்தப்பட வேண்டிய மரங்கள் குறித்த விபரங்கள் அடங்கிய வரிகள் பலபக்கங்களில் சமயநூல்களில் கூறப்பட்டுள்ளன. அவைகளைப் பற்றி ஆராய்வது இந்த புத்தகத்தின் நோக்கமல்ல. இலுப்பைமரம் பெரும்பாலும் பயன்படுத்துவதன் காரணம், அது எளிதில் கிடைப்பதாலும், விலை மலிவானதாலும் அதில் சுரந்து நிற்கும் ஒரு வித பால் தன்மை மரத்தை நீண்ட நாட்கள் கெடாமல் பாதுகாப்பதாலும் ஆகும். எனவே அதில் செதுக்கப்படும் உருவங்கள் பளபளப்புத் தன்மையுடன் நீண்ட நாட்கள் நல்ல ஒளி பொருந்தியதாக இருக்கும். தேக்கு மரமும் மிருதுவானதாகவும், ஒருவித எண்ணெய்ப்பசையுடன் சிற்பங்களை செதுக்குவதில் நளினமாகவும் இருக்கும். ஆனால் விலை அதிகம் உள்ளது. எனவே தேர் செய்வதில் விமானப்பகுதி வேலைக்கு அது அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

இரதப்பிரதிஷ்டை

இரதப்பிரதிஷ்டை என்பது சிவன் அல்லது விஷ்ணு அல்லது அம்மனுக்கு இரத உற்சவத்திற்கும், இரத யாத்திரைக்கும் இரதத்தை பின்னாளில் பயன்பட நேர்ந்து விடுவதாகும்.

முதலில் கோயில் தேர், தூரிகைகளால் முழுவதும் சுத்தம் செய்யப்படுகிறது. ஒருவித பாலும், விளக்கெண்ணையும் சேர்ந்த கலவையால் அது சுத்தம் செய்யப்படுகிறது. தேரில் கழற்றி எடுக்கக்கூடிய பொருள்களான துவஜஸ்தம்பம், கலசம் மற்றும் துவஜா (கொடி) போன்றவை துணியால் சுத்தம் செய்யப்பட்டு இரதத்தில் வைக்கப்படுகின்றன. தேரில் மணிகள் இணைக்கப்படுகின்றன. தேரைச் சுற்றிலும் மாவிலைத்தோரணம் கட்டப்படுகிறது. வாழைமரங்களும் தேரில் கட்டப்படுகின்றன. ஏராளமான யாளிகள், பூதகணங்கள், துவாரபாலகர்கள், துவாரபாலிகைகள், புராணக்கதைகளில் வரும் சிற்பங்கள் தேருடன் இணைக்கப்படுகின்றன. தேரை அழகுப்படுத்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரதத்தின் சக்கரம், அச்சாணி, திருகாணி மற்றும் இதர பாகத்துடன் உள்ள தோற்றம்



கையினால் பயன்படுத்தப்படும் மரத்தடை மற்றும் பூசணிக்காய், இரதப் புறப்பாட்டுக்கு முன் படையலுக்காக வைத்திருக்கும் தோற்றம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மகா விஷ்ணுவின் கூர்ம அவதாரம் இரதத்தின் அடித்தளத்தில் அமர்ந்து கொண்டு இரதத்தின் முழு சுமையையும் தாங்குமாறும் மற்றும் யாத்திரையின்போது இரதத்துக்கு நிலைத்தன்மையை அளிக்கின்றது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வண்ணப் பூக்களும், மலர்மாலைகளும் பயன்படுத்தப் படுகின்றன. படையலுக்காக உணவுப்பொருட்கள் மற்றும் சாதம், பாயசம், வெல்லம், இனிப்பு வகைகள், தேங்காய், வெற்றிலைப்பாக்கு மற்றும் பழ வகைகள் தேரில் வைக்கப்படுகின்றன. தேரின் முன் யாக சாலையும், ஹோம குண்டமும் ஏற்படுத்தப்படுகின்றன. தேரின் கிழக்கு பக்கம் சற்றே உயர்ந்த மேடையில் 'வேதி' என்றழைக்கப்படும் ஹோம குண்டம் அமைக்கப்படுகிறது. இந்த வேதி என்பது மண்ணால் செய்யப்பட்டு, காய்ந்தது, அது பசுஞ்சாணத்தால் மெழுகப்பட்டு, அரிசி மாவாலும் வண்ணப் பொடிகளாலும் கோலத்தால் அலங்கரிக்கப்படுகிறது. மஞ்சளும், சந்தனமும் கலந்த புனிதநீர் தேர் முழுவதிற்கும் தெளிக்கப்படுகிறது. ஒன்பது புதிய கும்பங்கள் அலங்கரிக்கப்பட்டு அவைகளின் மேல் மாவிலைகள் மற்றும் தேங்காய் வைக்கப்படுகின்றன. புனிதக் குழியாகிய ஹோமகுண்டத்தில் ஹோமம் இயற்றப்படுகிறது. துஷ்ட ஆவிகளிலிருந்து பாதுகாக்கவும், புனிதப்படுத்தவும் இது செய்யப்படுகிறது. பின்பு 'ஆவாஹனம்' என்று சொல்லப்படுகின்ற இறைவனை பள்ளி எழுப்பும் பாடல்களும், குறிப்பிட்ட மந்திர மொழிகளும் கூறப்படுகின்றன. பிறகு தேர் தெய்வத்திற்கு நேர்ந்து விடப்படுகிறது. விநாயகர், அக்கினி மற்றும் இந்திரன் போன்ற முக்கிய கடவுளர்களுக்கு, ரதயாத்திரை நன்முறையில் நிறைவேறவும், ரதம் பாதுகாப்பாக இருக்கவும் வேண்டுதல் செய்யப்படுகிறது. பூஜையின் போது புனிதமான ஹோமத்தீயில் சோறு, பழங்கள், நைவேத்தியப் பொருட்கள், பூ, பால், நெய், தேங்காய் போன்றவை அளிக்கப்படுகின்றன. பூரண ஆகுதி முடிவடையும் போது ஹோமமும் முடிவடைகிறது. அங்குள்ள பூசாரி மற்றும் பக்தர்களுக்கு இனிப்போ அல்லது பொங்கலோ பிரசாதமாக விநியோகிக்கப்படுகிறது. இப்போது இரதம் இறைவனை வைப்பதற்காக தயார்நிலையில் உள்ளது. இரதயாத்திரைக்கும் தயார் நிலையில் உள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேர்திருவிழாவும் இரத யாத்திரையும்

கோயில் தேர்த்திருவிழா கோயில் சடங்குகள் மற்றும் உற்சவங்களுடன் மிகவும் நெருக்கமானது. எடுத்துக்காட்டாக எந்த இந்து கோயிலும் வருடம் முழுவதும் ஏராளமான சடங்குகளையும், விழாக்களையும் பெற்றிருக்கும். தினசரி பூஜை என்பது நித்திய பூஜை என்றழைக்கப்பட்டு ஒரு நாளின் வைகறை முதல் அர்த்தசாமம் (நள்ளிரவு) வரை நிகழ்வதாகும். மிக எளிமையான பூஜை என்பது தூப-தீபம் காட்டல், நைவேத்தியம் (வத்தி, நெய் விளக்கேற்றுதல், உணவுப்பொருள் வகைகள் இவை போன்றவற்றை இறைவனுக்கு படைத்தல்) ஆகும்.

வைகறையில் இறைவனுக்கு 'ஆசனம்' (உட்காரும் சாதனம்) வழங்கப்படுகிறது. திருமேனியில் எழுந்தருளும்படி இறைவனை வேண்டப்படும் 'ஆவாஹனம்' பின் தொடர்கிறது. பின் பிரதிஷ்டா (பிரத்யக்ஷம்) ஆக வேண்டி துதிக்கப்படும் 'ஸ்தாபனம்' (இறைசக்தி சிலையில் வெளிப்படல்) என்கிற வழிபாடுகள் தொடர்கின்றன. இறைவனின் திருவடிகள், திருக்கைகள் மற்றும் திருமேனி திருமஞ்சனம் செய்யப்பட்டு 'வஸ்த்ர - வேஷா' என்ற திரு ஆடை அணிவித்தல் நடைபெறும்.

திருவாடை புனையப்பட்ட பின், சந்தனம், குங்குமம் மற்றும் மலர் மாலைகளால் இறைவன் அலங்கரிக்கப்படுகிறார். இந்த அனைத்து நிகழ்வின் போதும் அதற்குரிய மந்திரங்கள் ஓதப்படுகின்றன. பிறகு வாசனை வத்தி காண்பித்தலும், தீபம் (ஏற்றிய விளக்கு) காண்பித்தலும், நைவேத்தியம் அபிஷேகமும் தொடர்கின்றன. குறிப்பாக காளிகோயில்களிலும் மற்றும் சில கோயில்களிலும் விலங்குகளை பலியிடுகிறார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைகறை பூஜை, சகல பூஜை அல்லது சகல தூபம் அல்லது பிராதகால பூஜை (அதிகாலை) என்றழைக்கப்படுகிறது. சூரிய உதயத்தின் பொழுது விடியற்காலையில் இது நிகழ்த்தப் படுகிறது. மத்தியான பூஜை நடுப்பகலில் இது போலவே நிகழ்த்தப்படுகிறது. பூரி மற்றும் லிங்கராஜ் போன்ற பெரிய கோயில்களில் சாத உணவு, பருப்பு, காய்கறிகள் போன்றவை இறைவனுக்கு படைக்கப்பட்டு, அது பக்தர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. பிற்பகல் இறுதியில் 4 மணிக்கு செய்யப்படும் பூஜை 'அபரான்னபூஜா' என்று அழைக்கப் படுகிறது. சந்தியா பூஜை சூரியன் மறையும் வேளையில் நிகழ்த்தப்படுகிறது. இந்த சமயத்தில் நொறுக்குத்தீனிகள் லட்டு, முறுக்கு போன்றவை இறைவனுக்கு படைக்கப்படுகின்றன. இரவில் கடைசி பூஜையாகிய 'ராத்ரி-பூஜை' நிகழ்த்தப்பட்டு சந்நிதானம் சாத்தப்படுகிறது. இரத உத்ஸவ காலங்களில் மேற்படி அனைத்து பூஜைகளும் கோயில் தேருக்கும் நிகழ்த்தப்படுகின்றன.

ஆண்டு முழுவதும் ஏராளமான திருவிழாக்கள் உள்ளன. சில மாத வாரியானவை. சில வருடத்திற்கு ஒரு முறை நிகழ்பவை. வருடத்திற்கு ஒருமுறை கொண்டாடப்படுகிற சில திருவிழாக்கள் 'மகோத்ஸவம்' எனப்படுகிறது. இது கொண்டாடப்படும் கால அளவிலும், விமரிசையிலும் பெரியது. பிரம்மாவினால் தொடங்கப்பட்டுள்ளதாக கருதப்படுவதால் 'பிரம்மோத்ஸவம்' என்றும் அழைக்கப்படுகிறது.

மிகப் பெரிய அளவிலான உற்சவங்களான: ஸ்ரீ ராமநவமி, ஜென்மாஷ்டமி அல்லது கிருஷ்ண ஜெயந்தி, தீபாவளி, மகர சங்கராந்தி, சிவராத்திரி, சித்திரா பௌர்ணமி, ஜகந்நாத குடும்பமேளா, ஜகந்நாதரின் நாககளேபரா, கும்பகோணம் மகாமகம் முதலியன. இந்த விழாக்களில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல லட்சக்கணக்கான மக்கள் வந்து கலந்து கொள்கிறார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரத உத்ஸவமும் இரத யாத்திரையும்

இரத உத்ஸவம் (தேர்த்திருவிழா), இரத யாத்திரை என்பது தேர்த்திருவிழாவின் போது தேரை இழுப்பது ஆகும். இரண்டுமே பிரம்மாவால் தொடங்கப்பட்டது என கருதப்படுகிற பிரம்மோத்ஸவத்தின் போது மிகப்பெரிய அளவில் நிகழ்வன ஆகும். பிரம்மோத்ஸவம் பலநாட்கள் ஏராளமான திருவிழாக்களை உள்ளடக்கி கொண்டாடப்படுகிறது. த்வஜாரோஹணம் (கொடியேற்றம்), சயனஸ்துவ - தூங்கும் திருவிழா, திருவறை - நீராட்டல் விழா, டோலோத்ஸவம் - ஊஞ்சல் விழா, இரத உத்ஸவம் ஆகியவைகள் இதனுள் அடங்கும். பெரும்பாலான இடங்களில் திருவிழாக்களின் நிறைவு விழாவாக ரத யாத்திரை நிகழ்கிறது. அச்சமயம் இறைவன் தேரில் அமர்ந்து வீதியுலா வருகிறார்.

இரத உத்ஸவம் மிகவும் பகட்டாகவும், களிப்புடனும் கொண்டாடப்படுகிறது. அக்கம்பக்கத்திலுள்ள மக்கள் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் இவ்விழாவிற்கு வருகின்றனர். ஆரம்பத்தில் இரதம் சுத்தம் செய்யப்பட்டும், புனிதப்படுத்தப்பட்டும் இறைவனுக்கு சாஸ்திரத்தில் (குமாரதண்டா) கூறியுள்ளபடி இரதப்பிரதிஷ்டை செய்யப்பட்டு தயார் செய்யப்படுகிறது. இறைவனுக்காக தயாரான அலங்கரிக்கப்பட்ட மரக்குதிரைகள் தேரின் முன்பக்கம் பூட்டப்படுகின்றன. தேரின் முன்னும் பின்னும் வாசுகி (என்னும் நாகம்) சுற்றிக் கொண்டிருப்பதாகவும், அது தேரை நிலைகுலையாமல் கொண்டு செல்வதாகவும் நம்பப்படுகிறது. பிறகு இறைவன் அல்லது இறைவியின் உற்சவமூர்த்தி ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு மந்திரங்கள் முதலியன ஓதப்பட்டு தேரில் அமர்த்தப்படுகிறது. இது இரதத்தின் மீதான


Digitization by Hindu-Heritage-Foundation of America: HHF-A(USA)

காமாட்ஷியம்மன் (உற்சவமூர்த்தி) கிண்ணி இரதத்தில் பவனி வரும் தோற்றம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காமாட்ஷியம்மன் கோயிலின் கிண்ணி இரதம்
விமானம், கலசம், துவஜம் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள
கிண்ணி தட்டுகள் கொடியுடன் தோற்றம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவப்பிரதிஷ்டம் என அழைக்கப்படுகிறது. கோயில் தேருக்கு தினமும் பூஜை செய்யப்படுகிறது.

பெரும்பாலான கோயில் இரதங்கள் தடித்த வடக்கயிற்றால் சுற்றிலும் கட்டப்பட்டு இழுக்கப்படுகின்றன. இந்தக் கயிறு சற்றே தடித்து ரதயாத்திரைக்காகவே பிரத்யேகமாக செய்யப்படுகிறது. திருவிழா முடிவடைந்த பின் கோயில் மண்டபத்தில் அவைகள் பாதுகாக்கப்படுகின்றன. சிறிய இரதத்தில் இரும்பு சங்கிலிகளை வடத்திற்குப் பதிலாக பயன்படுத்தலாம். பெரிய பறை இரதத்தில் வைக்கப்பட்டு இரதயாத்திரையின் போது பயன்படுத்தப்படுகிறது. பறை ஒலியின் ஸ்வரம் ஏற்றப்படும் போது தேரை இழுக்கும் வேகம் அதிகரிக்கும். குறிப்பிட்ட தூரம் தேர் நகர்ந்தபின் மீண்டும் பக்தர்கள் தங்கள் முழுபலத்துடன் தேரை இழுக்க, மீண்டும் பறை ஒலியின் ஸ்வரம் ஏற்றப்படும். பெரும்பாலான இரதத்தின் சக்கரங்கள் மரத்தால் செய்யப்பட்டிருப்பதால் தேர் நகரும் தெரு (தேரடி வீதி) உறுதியாக இருக்க வேண்டும். இல்லையேல் இரதம் மண்ணில் புதையும். எடுத்துக்காட்டாக ஒரு இரதயாத்திரையில், இரதம் முன்னாலிலிருந்து இழுக்கப்பட்டு ஒரே சீராக நகரும். பின் சக்கரத்தை தளர்த்த சில சமயம் பின்னாலிருந்து 'தடை' உபயோகப்படுத்தப்படுகிறது. தடை என்பது ஒரு நீண்ட மரத்துண்டு, அதன் முனை சக்கரத்தில் பொருந்துமாறு நீளவாக்கில் வைக்கப்பட்டு ஆறு முதல் பத்து நபர்கள் அதன் மீது நிற்பர். இரதம் இழுக்கப்படும்பொழுது, அது ஒரு நெம்புகோல் போல் செயல்பட்டு பின் சக்கரங்கள் முன்னோக்கி சுழல உதவுகிறது. பெரும்பாலான இரதங்களில் முன்னோக்கி செல்லும் இயக்கத்தை தடை செய்யும் சாதனம் இல்லை, எனவே கைப்பிடி கொண்ட சக்கரத்தின் அகலத்திற்கு சமமான ஒரு மரத்துண்டு, குடில் என்று அழைக்கப்படும் சாதனம் தேர் நகரும் பொழுது முன் சக்கரத்திற்கு வைக்கப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்படியாக தேரின் முன் உள்ள மக்கள் தேரை இழுக்கும் போது தடை பின் பக்கமும் குடில் முன்பக்கமும் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டு தேர் சீராக நகர்கிறது. சில கோயில் தேர்களில் 'பெல்' (பாரத மிகுமின் நிறுவனம் – ஒரு மத்திய அரசு தொழில் முனையம்) நிறுவனத்தால் வழங்கப்பட்ட தானியங்கி தடை பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த தடை அமைப்பை இயக்க; பயிற்சி பெற்ற அரசாங்க ஆட்கள் ரதயாத்திரையின் போது வருகிறார்கள்.

கோயில் தேர் வளைவுகளில் திரும்பும்போது புது யுக்திகள் கையாளப்படுகின்றன. முன் பக்கத்தில் தேர் வடங்கள் இரு பகுதிகளாக பிரிக்கப்படுகின்றன. வலது பக்கம் தேர் திரும்ப வேண்டியிருந்தால் வடத்தின் ஒரு பகுதி நேராக வைத்துக் கொள்ளப்படும்; மீதி பெரும்பாலான வடங்கள் அதிகமாக வலப்பக்கம் அனுப்பப்படும். அதுபோலவே தடை இடப்பக்கம் இரு சக்கரங்களில் வைக்கப்படுகிறது. இவ்வாறாக தேர் வலப்பக்கம் மெதுவாக திரும்புகிறது. பிறகு மறுபடியும் வடங்கள் நேராக்கப்பட்டு யாத்திரை தொடர்கிறது.

சிறிய அளவிலான தங்க மற்றும் வெள்ளி இரதங்களா யிருந்தால், இரதத்தை வீதி உலா செலுத்த சில மனிதர்களே தேவைப்படுகிறார்கள். அப்போதும் மேற்கண்ட முறைகளே கடைப்பிடிக்கப்படுகின்றன.

சமூக பிணைப்புகள்

பெரும்பாலான தேர்திருவிழாக்கள் சமுதாயத்தில் சமய சார்பற்றவை. அக்கம் பக்கத்திலுள்ள அனைத்து சாதியினரும் இவ்விழாவில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். திருவிழா சந்தோஷத்தில் மக்கள் நண்பர்களையும், உறவினர்களையும் சந்திக்கின்றனர். புனித கோயில் தேரை இழுப்பதால் மக்கள் பரிசுத்தமடைகின்றனர். தேவதாசிகள் ஊர்வலம் நகரும் பொழுது இறைவன் முன் நடனமாடுகின்றனர். கிராமத்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இளைஞர்கள் பலவகைப்பட்ட கழைக் கூத்துகளை நிகழ்த்துகிறார்கள். மக்கள் இறைவனை புகழ்ந்து பாடியும், மத்தளம், ஜால்ரா, புல்லாங்குழல், மணி, ஷெனாய் போன்றவைகளை இசைத்தும் இருப்பர். இரதம் வீதியில் நகரும்போது பக்தர்கள் பழம், இனிப்பு, தேங்காய், வாழைப்பழம், வெற்றிலைப்பாக்கு, கற்பூரம் ஆகியவைகளை படைப்பர். சில பக்தர்கள் சர்க்கரைப் பொங்கல், பழம், மோர் போன்றவற்றை வழங்குகின்றனர்.

பல்வேறு வகைப்பட்ட மனிதர்கள், பணக்காரர் மற்றும் ஏழை, அனைத்து சாதியினர், கிராம மற்றும் நகர்ப்புறம் சார்ந்தோர், இளையோர் மற்றும் முதியோர் ஒன்றாக கலப்பதால் இந்த இரத - உத்ஸவம் மிகவும் சிறப்பானதாகும். இது சமூக ஒற்றுமைக்கும், இசைவுக்குமான சந்தர்ப்பமாகும்.

இவ்வகையான விழாக்களில் சில சமயம் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு குறிப்பிட்ட பணி தரப்படுகிறது. இரதக்காரர்கள் சக்கரங்களை சரி செய்யவும், சிறு பழுதுகளை ரத யாத்திரைக்கு முன் நீக்கவும், இரதத்தை சுத்தம் செய்யவும், தடை மற்றும் குடில் பயன்படுத்தவும், பறை அடிக்கவும் மற்றும் சில பணிகளும் குறிப்பிட்ட சமுதாயத்திற்கு தரப்படுகிறது.

திருவிழாவின்போது மேளா அல்லது தற்காலிக சந்தை உருவாக்கப்படுகிறது. அனைத்து வகையான பொருட்களும் திருவிழா நாட்களின்போது விற்கப்படுகின்றன. மேலும் கிராமப்புற கலைஞர்கள் வந்து வாங்கவும், விற்கவும் அது ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளிக்கிறது. ஆகையால், பொம்மைகள், பூங்கொத்துக்கள், இனிப்பு வகைகள், மற்ற திண்பண்டங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், பானைகள் இன்னும் பலவற்றை நாம் பார்க்க முடிகிறது. இரத யாத்திரையைப் பார்க்க வருபவர்களுக்காக சில நேரங்களில், இவ்வகை திருவிழாக்களில் மக்களின் மனமாற்றத்திற்காக இசைக்கச்சேரி, நடன அரங்கம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருக்கோயில் தேர் அமைப்பு

திருக்கோயில் தேர் அல்லது சாரட் 'இரதம்' என வடமொழியிலும் 'தேர்' என தமிழிலும் அழைக்கப்படுகிறது. இரத யாத்திரையின் போதும் இரத உத்ஸவத்தின் போதும் (தேர்த்திருவிழா) தேவர்களுக்காக அல்லது இறைவன், இறைவிக்காக கோயில் தேர் உபயோகிக்கப்படுவதால் அது 'தேவ இரதம்' என அழைக்கப்படுகிறது.

வெகு சில கோயில் தேர்களே தங்கத்தாலும் வெள்ளியாலும் ஆனவை. புதுச்சேரியில் உள்ள மணக்குள விநாயகர் கோயில் ஒரு தங்க இரதத்தைப் பெற்றிருக்கிறது. முன்னமே குறிப்பிட்டுள்ளது போல கற்தேர்கள் நகராதவை. மேலும் கர்நாடகாவில் உள்ள ஹம்பி போன்ற ஒரு சில இடங்களிலேயே அவை உள்ளன.

முக்கிய அமைப்பைப் பொறுத்து இரதங்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. மரச்சட்டத் தொகுதிகளைப் பிணைத்து எளிமையாக செய்யப்பட்டது கட்டத் தேர் எனப்படுகின்றன. தெப்பத்தேர் என்பது மிதக்கும்தேர், படகைப் போல் திருக்குளத்தில் மிதப்பவை, மரத்தால் ஆனவை, திருவிழாக் காலங்களில் எரியும் எண்ணெய் விளக்குகளால் இரவில் அலங்கரிக்கப்படுபவை. கோ ரதம் என்பவை பசுவால் இழுத்துச் செல்லப்படக்கூடிய சிறிய இரதம் (கோ – பசு, இரதம் – தேர்).

வைரத்தேர் என்பது வைரம் பாய்ந்த மரத்தின் நடுப்பகுதியாகிய இதயப் பகுதியினால் (வைரம் போன்ற கடினத்தன்மை உள்ள மரத்தினால்) ஆனவை, வைரத்தேர் என்பது வைரம், தேர் என்ற சொற்களின் கூட்டு ஆகும். வைரம் என்றால் கடினத்தன்மை கொண்ட வைரம் அல்லது மரத்தின் மையப்பகுதி, தேர் என்றால் இரதம் ஆகும். முற்றிய மையப்பகுதியின் மரம் ஏராளமான வைரக்கற்களை அடுக்கி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைத்தது போல உறுதித்தன்மை பெற்றவை. எனவே புழுப்பூச்சிகளால் தாக்கப்பட முடியாதவை. மழை, தூசி, காற்று என்ற பலவற்றாலும், வெளியிலேயே நிறுத்தப்பட்டிருப்பினும், கெட்டுப்போகாமல் சில நூற்றாண்டுகளுக்கும் மேல் நிலைத்திருக்கக் கூடியவை. பெரும்பாலான வைரத்தேர்கள் சித்திரத்தேர் என அழைக்கப்படுகின்றன. சித்திரம் – பொருள், ஓவியம் அல்லது படம், தேவர் அல்லது தேவதைகளின் அழகான சித்திரங்களை செதுக்கிய கட்டை, பல்வேறு பாளங்களாகப் பொருத்தப்பட்ட இரதம். எனவே இது சித்திரத்தேர் என்று அழைக்கப்படுகிறது. பெரும்பாலான சித்திரத்தேர்கள் நேர்த்தியாகவும், விளக்கமாகவும் செதுக்கப்பட்ட ஏராளமான சித்திரங்களை பல அடுக்குகளாகவும், பல அளவுகளிலும் கொண்டவை.

ஒரே மரச்சட்டத்தால் செய்யப்பட்டதாயிருப்பதால் கட்டத்தேர் மிகவும் எளிமையானது. ரத உற்சவ சமயங்களில் அது பலதடவை கோர்க்கப்பட்டு, ரத யாத்திரை நிறைவடைந்ததும் பிரித்து வைக்கப்படுகிறது. அடுத்த ஆண்டு திருவிழாவிற்காக அவ்வாறு அது பாதுகாக்கப்படுகிறது. ஒரிஸ்ஸாவில் புவனேஸ்வரததில் உள்ள லிங்கராஜா (சிவன்கோயில்) கோயிலில் இவ்வாறு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

கோ ரதம் என்பது பொதுவாக தங்கத்தாலான ‘தங்கத்தேர்’ வெள்ளியாலான ‘வெள்ளித்தேர்’ போன்று உருவத்தில் சிறியது. தங்க மற்றும் வெள்ளித்தேர்களில் வெள்ளி மற்றும் தங்கத் தகடுகள் மரக்கட்டைகளின் மீது பதியப்பட்டு காணப்படுகிறது. சிலசமயங்களில் முழுவதும் தங்கத்தினாலோ அல்லது வெள்ளியினாலோ செய்யப்பட்டவை. சற்றே பெரியவை (10–12 அடி) எளிய வண்டியில் அல்லது வாகனத்தில் வைக்கப்பட்டு, உற்சவத்தின் போது இறைவன் அல்லது இறைவி அதில் அமர்த்தப்படுகிறார். நந்தி மற்றும் காமதேனுவுக்கான இரண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



ஒரு பாரம்பர்ய இரதத்தின் நீள் குறுக்குத் தோற்றம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெரிய வெள்ளித்தேர்கள் புதுச்சேரியில் உள்ள வில்லியனூர் திருக்காமேஸ்வரர் (சிவன்) கோயிலில் உள்ளன.

எந்தத் தெருவின் வழியாக, தேர் தேர்த்திருவிழாவின்போது ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறதோ, அந்தத் தெரு தேர்த்தெரு அல்லது தேரோடும் வீதி என அழைக்கப்படுகிறது. இது பொதுவாக முற்றிலும் சதுரவடிவில் கோயிலைச் சுற்றிலும் அமைந்து, ரதயாத்திரையின்போது கோயில் பரிக்கிரமம் முழுவதும் செய்யத்தக்க வகையில் உள்ளது.

திருக்கோயில் தேர் பொதுவாக கீழவாசல் அல்லது கிழக்கு கோபுரத்தின் எதிரே, தெற்கு பார்த்த வண்ணம் நிறுத்தப்படுகிறது. இது தேரடி என அழைக்கப்படுகிறது. வில்லியனூர் சிவன் கோவிலில் உள்ளது போன்று ஒன்றுக்கு மேற்பட்ட தேர்கள் இருப்பின் எப்பொழுதும் விநாயகர் இரதம் முன்பு இருக்கும், அதைத் தொடர்ந்து அம்மன் தேரும், பின் சிவனது தேரும் பொதுவாகப் பின் தொடரும்.

திருக்கோயில் தேர் படிப்படியாக எவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்றது என்பதை அறிய ஏராளமான கல்வெட்டுக்கள், சமய நூல்கள், விவரணங்கள் போன்ற பல ஆவணங்கள் உள்ளன. கட்டைத்தேர், வண்டியை ஒத்ததேர், கோயில் தேர் போன்றவை எவ்வாறு சித்திரத்தேர் மற்றும் வைரத்தேராக வளர்ந்தன என்பதை அவை விவரிக்கின்றன. சிறு உருவங்கள் மற்றும் பெரிய அளவு வடிவங்கள் கொண்ட கடவுள்கள், தேவதைகள், பூதகணங்கள், சிவகணங்கள், விலங்குகள், புராணக்கதையை விளக்கும் சிற்பங்கள், யாளிகள், மிகுந்த வேலைப்பாடு கொண்ட சிற்பங்கள் என செதுக்கப்பட்டு, பல அடுக்குகளாக, மரப்பலகைகளில் இவை பொருத்தப்பட்டு, மிகத் திறமையான வடிவங்களாக பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் உருவானதை இவை சான்று பகர்கின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தென்னிந்தியாவில் சோழர்களின் ஆட்சிக்காலம் கோயில் கட்டும் பணிகளின் புகழ்வாய்ந்த பொற்காலமாகும். எனவே இக்காலக் கட்டத்தில் திருக்கோயில் தேர் மற்றும் தேர்த்திருவிழா விரிவாக்கப்பட்டு அரசர்களின் பேராதரவினால் செழுமையாக நிலைகொண்டது. அரசர் சுந்தர பாண்டியனால் முதல் தங்கத்தேர் நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. திருக்கோயில் தேர்கள் விஜயநகர அரசர்கள் (கர்நாடகம்) மற்றும் நாயக்க அரசர்களின் (மதுரை) பேராதரவினால் மேலும் செழுமை பெற்று நன்கு வளர்ந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தரம் பிரித்து வகைப்படுத்துதல்

சக்கரங்கள்

சாத்திரங்களின்படி கோயில் தேர்கள் சக்கரங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. அவை விஜயா, கண்டா, சர்க்கரா, விசாலா, நிபந்தா, ஸ்ரீவிசாலா, பத்ரா மற்றும் பத்ரவிசாலா ஆகும்.

விஜயா என்பது ஒரே மரக்கட்டையிலான சட்டத்தையும் மூன்று சக்கரங்களையும் கொண்ட தேராகும்.. கண்டா என்பது நான்கு சக்கரங்களையும் சதுர வடிவ பீடத்தையும் தளத்தையும், இரண்டு அச்சுகளையும் கொண்ட தேர் ஆகும். ஒரே அடுக்கு சட்டத்தை இது பெற்றிருக்கும். சர்க்கரா என்பது ஐந்து சக்கரங்களையும் பொதுவாக ஒன்றுக்கு மேற்பட்ட முன்னோக்கி தள்ளிய நிலையில் அடுக்கு சட்டங்களையும் கொண்ட தேர் ஆகும். விசாலா என்பது அதன் பெயருக்கேற்ப பரந்தும், இரண்டு முதல் மூன்று அடுக்குகளில் செதுக்கப்பட்ட சிற்பங்களை முன்னோக்கி தள்ளிய நிலையிலும் கொண்ட தேர் ஆகும். நிபந்தா தேர் ஏழு சக்கரங்களையும், ஸ்ரீவிசாலா தேர் எட்டு சக்கரங்களையும், பத்ரா ஒன்பதையும், பத்ரவிசாலா பத்து சக்கரங்களையும் கொண்டவை. ஒவ்வொன்றும் படிப்படியாக பெரியதாகும்.

கோயில் தேரின் புகுமண்டபம் எளிய சதுரமாகவோ, நாற்கரமாகவோ, ஐங்கரமாகவோ, அறுகோணமாகவோ அல்லது பலகோண அடுக்கிலோ அமையப் பெற்றிருக்கும், மேடையின் ஒவ்வொரு மூலையும் எளிமையாக ஒரே முகப்பட்டையுடனுமோ அல்லது பல முகப்பட்டைகளைக் கொண்டோ இருக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அளவு

சக்கரங்களின் எண்ணிக்கை கோயில் தேரின் அளவு பற்றி சற்றே அறிவுறுத்தினாலும், சிற்ப சாத்திரம், அளவுகளின் பல வகைகள் பற்றி தெளிவாக விவரிக்கிறது.

படம் - சிறியதேர் அதாவது கால்பாகம் அல்லது 1/4.
அர்தம் - நடுத்தரதேர் அதாவது அரைபாகம் அல்லது 1/2.
திரிபடம் - பெரியதேர் அதாவது முக்கால் பாகம் அல்லது 3/4.
பூர்ணம் - சற்றே பெரிய தேர் அதாவது முழு அளவு பெற்ற தேர்.

வில்லியனூர் கோயில் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தேர்களைப் பெற்றிருக்கிறது. விநாயகர் ரதம் படம்தேர், அம்மன் அர்தம்தேர், சிவனது இரதம் திரிபடம் தேர், புதுச்சேரியில் உள்ள திரௌபதி அம்மன் கோயில், மணக்குள விநாயகர் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில் ஆகிய கோயில்களின் தேர்கள் சிறியவை அல்லது படம். வீராம்பட்டினத்தில் சக்தி கோயில், சிங்கிரிகுடி நரசிம்ம பெருமாள் கோயில் தேர்கள் அர்தம் அல்லது நடுத்தர அளவானது.

சக்கரங்கள் அமைப்பு

கோயில் தேரின் அடிப்பகுதியின் பெரும்பான்மை இடத்தை சக்கரம் ஆக்கிரமிக்கிறது. கால், உரா (சுற்று) என சக்கரம் அழைக்கப்படுகிறது. அவைகளின் பெரும்பாலானவை கெட்டியான மரத்திம்மைகளை ஒன்று சேர்த்து இரும்பாலான பட்டைகளால் ஆணியுடன் கூடிய திருகு மரைகளால் நன்கு பிணைக்கப்பட்டிருக்கும். இந்திய அரசின் உதவியால் சில சக்கரங்கள் முழுவதும் இரும்பால் ஆக்கப்பட்டிருக்கும். சக்கரத்தின் நாபி அல்லது குடம் எனப்படுகிற (கணுப்பகுதி) நடுப்பகுதியில் அச்சு இணைக்கப்பட்டிருக்கும். அதை தாங்கிப்பிடித்திருக்கும் கடையாணி அச்சாணி என அழைக்கப்படுகிறது. சக்கரத்தின் விளிம்பு பட்டா என்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழில் வட்டை என்றும் அழைக்கப்படுகிறது. தேரின் அகல அளவின் பாதி பொதுவாக சக்கரத்தின் விட்ட அளவாக இருக்கிறது. எனவே சக்கரம் இருபது அங்குலத்திலிருந்து நாற்பத்திரண்டு அங்குலத்திற்கு அளவுகளில் மாறுபடுகிறது.

மூன்று சக்கரங்கள் இருப்பின் அவை ஒரே வரிசையாக ஒரே அச்சில் உள்ளன. நான்கு சக்கரங்கள் எனில் அவை இரண்டு வரிசையில் இரு அச்சுக்களுடன் குறுக்கும் நெடுக்கும் பிணைக்கப்பட்டு தேரின் பீடத்தை அமைக்கிறது. ஐந்து சக்கரங்கள் எனில் ஒரு சக்கரம் இரு ஜோடி சக்கரங்களுக்கு இடையே அமைக்கப்படுகிறது. ஆறு சக்கரங்கள் எனில் அவை மூன்று ஜோடிகளாகவோ அல்லது பெரிய சக்கரங் களுக்கிடையில் உட்புறம் இரு சிறு சக்கரங்களாகவோ வைக்கப்படுகிறது.

பீடம்

அச்சு, அக்ஷா என்று அழைக்கப்படுகிறது. மேலும், சக்கரத்தின் மையப்பகுதி வழியாக அக்ஷா (அச்சு-நிலைநிறுத்தல்) சென்று ஆணியால் நிலை நிறுத்தப்படுகிறது. அச்சுகளின் நீளம் சக்கரத்தின் விட்ட அளவை விட இருமடங்காக இருந்து தேரின் அகலத்தை நிர்ணயிக்கிறது. மரத்திம்மைகளாலான ஐந்து துண்டுகள் அச்சுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக தேரின் அடிப்பாகமான பீடத்தை இவை நிர்ணயிக்கின்றன. கூடுதலான குறுக்குச் சட்டங்கள் அடிப்பீடத்தின் உச்சிப்பகுதியில் படுக்கை வாட்டத்திலும், செங்குத்து வாட்டத்திலும் இவை வைக்கப்பட்டு நீள, அகலமாக இருக்கிறது. இவ்வாறாக ஆதாரா என்ற அடிப்பீடம் அமைகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உபபீடம், அதிஷ்டானா மற்றும் படா

அடுத்த நிலை உபபீடமாகும். இதன் வெளிப்பக்கம் செதுக்கப்பட்ட சிறிய சிற்பங்களால் நிறைந்து, மரக்கட்டைகளின் முனைகள் தெரியாத வண்ணம் உள்ளன. அச்சின் குறுக்கே உள்ள ஐந்து திம்மைகள் அதன் முடிவில் கணங்களைப் பெற்றிருக்கும். அது நீர், காற்று, நெருப்பு, மண் மற்றும் ஈதர் (வான்) ஆகிய ஐந்து பொருட்களைக் குறிப்பவை.

அடுத்த நிலை 'அதிஷ்டானா'. இது நெடுக்கு மற்றும் படுக்கைவாட்டு மரத்திம்மைகளை அடிப்பீடத்தில் பொருத்தி ஒரு பெட்டியைப் போல் அமைகிறது. இது இரண்டாம் அடுக்காக அமைந்து அதன் நாற்புறமும் செதுக்கப்பட்ட உருவங்களைக் கொண்ட மரச்சட்டங்களால் பொருத்தப்படுகிறது. இவைகள் சற்றே மேல்நோக்கி சாய்ந்தபடி பொருத்தப்பட்டு இருப்பதால் கீழ்பாகத்தை விட மேல் பாகம் அகன்றுள்ளது.

அடுத்த அடுக்கு 'நரஸ்யனா' அல்லது மனஸ்யனா (மனிதர்களுக்கான இடம்). இந்த நேர்குத்து மற்றும் படுக்கை மரத்துண்டு உபபீடத்தின் மீது வைக்கப்பட்டு அதன் முனைகள் சக்கரத்தின் வெளிமுனை வரைக்கும் வெளிப்பக்கமாக படர்ந்து சக்கரத்திற்கு மேற்புறம் தட்டையான மேடையாக தேர்த்தட்டு என அழைக்கப்படுகிறது. வெளிப்புற மரச்சட்டம் விரிவான சிற்பவேலைப்பாடுகளை பெற்றிருக்கும். இவைகள், தேவர்கள், தேவதைகள், மனிதர்கள், மிருகங்கள், புராணக்கதை கதாபாத்திரங்களையும் மற்றும் பல வகைகளையும் உள்ளடக்கி இருக்கும். தட்டையான மேடைப்பகுதியிலிருந்து படா ஆரம்பிக்கிறது. அதன் மையப்பகுதி உயர்ந்த பீடமாக அமைந்து தேரின் தெய்வத்திற்கான சிம்மாசனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

இரதத்தின் அடித்தளத்தில் கூர்மத்தின் மேலுள்ள வாசுகியின் தோற்றம்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)



காமாட்ஷியம்மன் கோயில் இரத அடித்தளத்தில் விநாயக பெருமான்
முருகர் வள்ளி, தெய்வானையுடன் வீற்றிருக்கிறார்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
என்றழைக்கப்படுகிறது. அது பொதுவாக செவ்வக வடிவமானது. அது ஒன்று அல்லது இரண்டு அடுக்குகளாலும் அபூர்வமாக மூன்று அடுக்குகளையும் கொண்டு அமைகிறது. முதல் அடுக்கில் அஷ்ட லட்சுமியின் உருவங்கள் நாற்புரத்திலும் செதுக்கப்பட்டிருக்கும். இரண்டாவது அடுக்கில் கடவுளர்களின் அடையாளச் சின்னங்கள் விஷ்ணுவின் சங்கு, சக்கரம் மற்றும் பாம்பு போன்றவைகள் இருக்கும். மூன்றாமடுக்கு இருப்பின் அது 'அலங்காராசனம்' என அழைக்கப்படுகிறது. எந்த இடத்தில் இறைவன் அமர்த்தப்படுகிறாரோ அந்த இடம் தேவ ஆசனம் என அழைக்கப்படுகிறது. (தேவதை – இறைவன் அல்லது இறைவி, ஆசனம் – அமருமிடம்).

இந்தப் பகுதி படா என்றழைக்கப்படுகிறது. படாவின் உயரம் தேரின் அகலத்தைப் போல் இருக்கும். முன்னமே குறிப்பிட்டுள்ளது போல் தேவ ஆசனத்தை சுற்றியுள்ள மரத்திம்மைகளாலான தூண்களை செங்குத்து வடிவில் சுற்றிலும் பெற்று மேலேயுள்ள விமானத்தை தாங்கும்படி உள்ளது. படாவின் மையப்பகுதிகள் நாற்புறத்திருந்தும் பார்க்கும் வண்ணம் உள்ளன. திருவிழாவின் போது துவாரபாலகர்கள், துவாரபாலிகைகள், சிங்கங்கள், யாளிகள் இன்னும் பல சிற்ப உருவங்கள் தேருடன் கட்டப்படுகின்றன. அனைத்து மூலைப்பக்கங்களிலும் நன்கு அலங்கரிக்கப்பட்ட உருவங்கள் அடங்கிய ஒட்டுத்துணிகள் தொங்கவிடப்படுகின்றன.

விமானம்

மிகவும் அழகானதும் தேரின் கீரிடம் போன்ற பகுதியுமானது விமானம் அல்லது மகுடம் ஆகும். மரப்பட்டைகளில் மேல் நோக்கிய சாய்வுகளை ஒன்றுக்கொன்று இணைந்த, சட்டங்கள் கொண்டதே கிரிவா அல்லது கலா (கழுத்து). திருவிழாக் காலங்களில் அதன் வெளிப்பகுதி முழுவதும் பலவண்ணங்கள் அடங்கிய ஒட்டு திரைத்துணிகளால் அலங்கரிக்கப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



பிரம்ம தேவர் கையில்
குதிரைகளின் கடிவாளத்துடன்
அமர்ந்திருக்கும் தோற்றம்

ஒரு தேர் அமைப்பின் குறுக்குத் தோற்றம்

சக்கரங்கள் அச்சாணி ஐந்து குறுக்குச் சட்டங்கள் பஞ்சபூத அடுக்கு. இரண்டடுக்கு தளம் மற்றும் தேவ சிற்பங்கள் அமைக்க வேண்டிய நிலைகள். இரண்டடுக்கு எளிய சிம்மாசனம் பனிரெண்டு தூண்கள் நான்கு அடுக்கு விமானம் அதன் மேல் கலசம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
கிரிவாவிற்கு மேலே சிகாராவும் (கபோலா) அதன் பிறகு ஸ்தூபியும் (கூம்புப்பகுதி) உள்ளன. ஸ்தூபியின் மேலே வெள்ளியாலேயோ, வெண்கலத்தாலேயோ அல்லது தங்கத்தாலேயோ செய்யப்பட்ட கலசம் வைக்கப்படுகிறது. கலசத்திற்கு மேலே கோயிலின் கொடியுடன் கொடிக்கம்பம் இருக்கின்றது. இந்து கோயிலின் மூலஸ்தான அமைப்பை ஒத்ததுபோலவே விமானப்பகுதியின் வடிவமும் மற்ற அமைப்புகளும் உள்ளன.

இரதமுகம்

இரதத்தின் முன்பக்கம் இரதமுகம் என அழைக்கப்படுகிறது. கோயில் தேரின் முகம் திருவிழாவின்போது பலவண்ணமிட்ட மரக்குதிரைகள் தேரின்முன் பூட்டப்பட்டிருப்பது ஒரு சிறப்பம்சமாகும். அவைகள் நான்கு கால் பாய்ச்சலில் ஓடுவது போல் காணப்படும் தோற்றம் அது தேரை இழுத்துச் செல்வது போன்று தெரியும், தேரின் கடிவாளம் குதிரைக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் பிரம்மாவினால் பிடித்திருப்பது போன்று இருக்கும். வாசுகியின் முகம் முன்புறமும் வால் தேரின் பின்புறமும் காணப்படும். இறைவன் விஷ்ணு ஆமை வடிவில் – 'காஷ்யபரூபம்' தேருக்கு அடிப்பக்கம் காணப்படுகிறார். தேரின் பயணத்தின்போது அவர் தேரின் சமநிலையை சரி செய்வதாகவும் தேரின் எடையை தானே தாங்குவதாகவும் குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

சிற்பங்கள்

சிற்பங்கள் அளவுகளில் வேறுபடுகின்றன. சிறியவைகள் ஆறு அங்குல உயரத்தில் மரத்திம்மைகளின் ஓரங்களை ஆக்கிரமித்துள்ளன. பெரிய உருவங்கள் ஏறத்தாழ இரண்டரை அடி உயரம் முதல் ஆறு அல்லது எட்டடி உயரம் வரை வரிசையாக 8 - 10 அடி நீளமுள்ள மரச்சட்டங்களில் அமைகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பல முனையுடன் கூடிய பல்வேறு அடுக்குகள்

யானை சிற்பங்களை மேலடுக்கில் உடைய பல முனையுடன் கூடிய பல்வேறு அடுக்குகள். அதற்கு அடுத்தாற்போல், சிம்மம் மற்றும் குதிரை (அ) அசுவ சிற்பங்கள் உள்ளன





சிம்ம சிற்பம்



மனிதன் கீழே உள்ள குதிரை சிற்பம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோயில் தேர்கள், வேத காலம் முதல் தற்காலம் வரையில் உள்ள கதைகளைக் குறிக்கும் வண்ணம் காணப்படும், ஏராளமான செதுக்கப்பட்ட உருவச் சிலைகளை, சிற்பங்களைக் கொண்ட களஞ்சியம் ஆகும். பல்வேறு வகைப்பட்ட உருவங்கள், சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டபடி அடுக்கி வைக்கப்படுகின்றன. பல்வேறு வகைப்பட்ட சாஸ்திரங்கள், கடைபிடிக்கப்பட வேண்டிய விரிவான கொள்கைகளை, சித்திரத்தை அமைப்பது பற்றிக் கூறுகின்றன.

இவ்வகை சாஸ்திரங்களில் சிலமெனசனா, விஸ்வகர்மாவுடைய - வாஸ்து சாஸ்திரம், ஐஸ்வர்யஸமிதா, சில்பபிரகன்னஸமிதா, குமாரதன்தா, சில்பசாஸ்திரம் என சில பெயரிட்டு குறிப்பிடத்தக்கன.

புகழ்பெற்ற சில உருவங்களான சிங்கங்கள், யானைகள், முதலைகள், எருதுகள், நாடகமாடும் பூதர்கள் (நடனமாடும் அரக்கர்), சிவகணங்கள், பூதகணங்கள், பாம்புகள் - நாகங்கள் மற்றும் நாக கன்னிகைகள், குருபாதா (பிரம்மன்), வராஹா (விஷ்ணு), ஷண்முகா (முருகன்), கணபதி, சரஸ்வதி, சங்கரன், சப்பரம் தூக்குவோர், கருடன் மற்றும் பலர் எனக் கூறலாம்.

தேரின் பீடத்தை எது உருவாக்குகிறதோ அந்த மரத்திம்மைகளின் மேற்பகுதி சிறிய உருவங்களால் நிறைந்துள்ளன. அவை பொதுவாக, முன்னமே குறிப்பிட்டுள்ளபடி, எண்ணிக்கை ஐந்தாக இருந்து பஞ்சபூதங்களாகிய சிவகணத்தை குறிக்கின்றன.

தென்னிந்திய கோயில் தேர்களில் உள்ள நடன உருவங்களைப் பற்றிய சுருக்கமான குறிப்பு

உயர்தர இந்திய நடனங்கள் யாவும் நாட்டிய சாஸ்திரத்திலிருந்து பரிணமித்தவை என்பதை நாம் அறிவோம். நாட்டிய சாஸ்திர விதிகள் யாவும் பரத முனிவரால் எழுதப்பட்டிருக்கக் கூடும் என நம்பப்படுகிறது. நாட்டிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாஸ்திரம் விவரிக்கும் நிற்கும் நிலை, விளக்கும் தோரணைகள், செதுக்கப்பட்ட சிற்பங்கள் பற்றி இந்தியத் துணை கண்டத்திலுள்ள அனைத்து கோயில்களும் ஏராளமாக சான்று பகர்கின்றன. தென்னிந்திய கோயில் தேர்களில் நடன சிற்பங்களைப் பற்றி ஆய்வதே தற்போதைய நோக்கம். தற்கால தேர்கள் காலப்போக்கில் சிதைவடையக் கூடிய மரத்தினால் செய்யப்படுகின்றன. இராமாயணம், மகாபாரதம், புராணங்கள், வேதங்கள், உபநிடதங்கள் மற்ற சமய நூல்களில் உள்ள கதைகளை சொல்லும் வண்ணம் அமைந்த சிற்பங்களைப் பற்றி அறிய ஒரு சிறந்த வழி கோயில் தேர்களே ஆகும். தமிழகத்திலும், புதுச்சேரியிலும் தற்போது தொள்ளாயிரத்திற்கும் மேற்பட்ட கோயில் தேர்கள் உள்ளன. அவை அனைத்தையும் ஆய்வு செய்வது இயலாதது என்பதால் புதுச்சேரி, திருவண்ணாமலை, சிதம்பரம், கும்பகோணம், நாகப்பட்டினம், அவிநாசி மற்றும் மயிலம் தேர்கள் மாதிரியாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தற்போதைய ஆய்வு, சிவன், விஷ்ணு, சக்தி மற்றும் சிலர் பற்றிய நடன உருவங்களைக் கொண்ட பெரிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

நடராஜர் - பேரண்டத்தின் ஆடலரசர்

சிவபெருமான் நடராஜராக அண்டத்தின் ஆடலரசராய் இருக்கிறார். அவர் தான் அனைத்து நடன வகைகளுக்கும் குருவும் வழிகாட்டியுமாவார். நடனம், இசை, நாடகம் மற்றும் மேலும் பல கலை ஆதாரங்களுக்கு அவரே முதன்மையானவர். பாரத தேசத்தின் (பரத கண்டம்) முனிவராகிய பரதமுனிவருக்கு நடராஜராகிய சிவபெருமான் அனைத்து கலைகளையும் உபதேசித்தார். வேதகால முனிவராக பரதமுனி இருக்கக்கூடும் என கருதப்படுகிறது. பரதமுனி என்ற பெயரில் வேதகாலத்தில் பல முனிவர்கள் இருந்ததாகவும் சிலரால் கருதப்படுகிறது. இறைவன் சிவபெருமான் பரதமுனிவரை நாட்டிய சாஸ்திரம் எழுதும்படி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறிவுறுத்தியதாக சொல்லப்படுகிறது. ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களுக்குப் பிறகு நாட்டிய சாஸ்திரம் ஐந்தாவது வேதமாக கருதப்படுகிறது. நாட்டியம் ஆட தேவையான சட்டத்தொகுப்பு, விதிமுறைகள், ஒழுங்குமுறைகள் இவற்றைப் பற்றிய அறிவுப்பெட்டகம் என்பதே நாட்டிய சாஸ்திரம் என்பதன் இலக்கியப் பொருள் ஆகும். நாட்டியம் என்பது நடனம், நாடகம், இசை இவைகளை உள்ளடக்கியதே ஆகும்.

பெரும்பாலான தென்னிந்திய சிவன் கோயில்களில், கோயில் வளாகத்திற்குள் நடராஜ தெய்வத்திற்கென்று தனியாக ஒரு கோயில் உள்ளது. நாட்டிய நிகழ்வு நடைபெற நடராஜர் சன்னதிக்கு அடுத்தாற்போல் நாட்டிய மண்டபம் என்றழைக்கப்படும் தனியான கூடமும் இருக்கிறது. சிதம்பரம் கோயில் வழக்கமான சிவலிங்கத்தைப் பெறாமல் அதற்குப் பதிலாக நடராஜரையே பிரதான தெய்வமாகப் பெற்றிருக்கிறது.

நூற்றியெட்டு தாண்டவங்களையும் இறைவன் சிவனே தொடங்கி இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இவைகள் நூற்றியெட்டு கரணங்களாக வெளிப்படுத்தப்படுகின்றன. இவைகள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்திலும், சிதம்பரம் நடராஜர் கோயில் கோபுரத்திலும் காணப்படுகின்றன. கோயில் தேர்களில் பெரும்பாலும் மிகவும் புகழ் வாய்ந்த ஆனந்த தாண்டவம், ருத்திர தாண்டவம், ஊர்த்தவ தாண்டவம், சதுர் தாண்டவம் இவைகளே உள்ளன.

ஆனந்த தாண்டவம் எனும் நடனம் நடராஜப் பெருமானின் பேரின்ப நடனமாகி, தாண்டவங்களிலேயே மிகப்பெரிய வழக்கமாய் இருக்கிறது. இந்நிலையில் இறைவன் சிவன் நான்கு கைகளுடன் இருக்கிறார். வலது முன்கை அபயமுத்திரையுடனும், பின்கை தாமரை பிடித்த வண்ணமும் உள்ளது. இடது முன்கை பொதுவாக கஜஹஸ்தத்தையும், பின்கை அக்னியையும் வைத்திருக்கிறது. இடதுகால் குஞ்சிதபாதநிலையில் தூக்கிய நிலையிலும், வலதுகால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அபஸ்மரா என்ற அரக்கனை உறுதியாக மிதித்த வண்ணமும் இருக்கிறது. இறைவன் சிவன் நிறைந்த புன்னகையுடன் கொந்தளிப்பில்லாத அமைதியான முகத்துடனும் இருக்கிறார். சிவனுக்குப் பின்புறம் பறக்கும் பல வித்தியாதரர்களைக் காணலாம்.

ஒரு சில படங்களில் இறைவி பார்வதி, சிவகாமசுந்தரியாக இறைவன் சிவனுக்குப் பக்கத்தில் இருப்பதையும் காணலாம். பேரின்ப தாண்டவத்தில் சிவன் மனநிறைவுடன் இருக்கிறார். அவரே அனைத்துப் படைப்புகளுக்கும், துடிப்புகளுக்கும், இயக்கங்களுக்கும் மூலகர்த்தாவாக இருக்கிறார். டமரு இந்த கருத்தைப் பகர்கிறது. அபயமுத்திரையுடன் வலதுகை, உயிர்களின் வாழ்க்கை நிலைக்கவும், நீடிக்கவும் இறைவனது ஆசிகள் வழங்கப்படுவது போல் இருக்கிறது. பின்கையில் உள்ள அக்னி அல்லது தீ பழையனவற்றை எரித்து கழித்து புதியனவற்றை புகுத்துவது ஆகும். எந்த வலது கால் அபஸ்மராவை உறுதியாக உதைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டிருப்பதுவோ அது ஐம்பொறிகளையும் தான் என்கிற ஆணவத்தையும் இறைவன் அடக்குவதாக காட்டுகிறது. இறுதிதீர்ப்பு அல்லது மோட்சத்திற்கான கடைத்தேற்றத்தையே காட்டுவதாக தூக்கிய திருவடி இருக்கிறது. ஐம்பொறிகளை அடக்கி ஆணவத்தை நீக்கி அறியாமையாகிய தோற்றத்திலிருந்து விடுபட்டு உண்மையை அறிந்து இறைவனோடு இரண்டற கலக்க பக்தர்களுக்கு இறைவன் உபதேசிக்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஊர்த்தவ தாண்டவம்

கோயில் தேர்களில் சிவனின் ஊர்த்தவ தாண்டவமூர்த்தி மிகவும் பிரசித்தமாக இருக்கிறது. அது பொதுவாக குழுமமாக மற்ற இறைவன் இறைவி உருவங்களுடன் காணப்படுகிறது. இது குழுப்பட்டியலாக காணப்படுவதற்கு ஒரு வரலாற்று கதையே இருக்கிறது. ஒரு சமயம் சிவன், பார்வதி பக்தர்களுக்கிடையே இருவரில் சிறந்த ஆட வல்லவர் யார் என்ற விவாதம் எழுந்தது. எனவே இது பற்றி முடிவு செய்ய இறைவன் சிவனுக்கும், இறைவி பார்வதிக்கும் இடையே ஒரு போட்டி நடத்தப்பட்டது. மற்ற கடவுளர்கள் இந்த பெரிய நிகழ்ச்சியை காண அணிவகுத்தனர். நந்தி மிருதங்கம் வாசிப்பது போலவும், விஷ்ணு கைத்தாளம் போடுவது போலவும், சரஸ்வதி வீணை வாசிக்கவும், கணபதி தம்புரா இயக்கவும் பிரம்மன் ஒரு கம்பிக்கருவியை இயக்குவது போன்றும் அல்லது தீர்ப்பு வழங்குவது போலவும் காணப்படுகிறது. இதே குழுமப்பட்டியலில் பார்வதி காளி ரூபத்தில் ஆக்ரோஷமாக நடனமாடுவது போன்ற நிலையில் காணப்படுகிறாள். அவள் இறைவன் சிவனை அனைத்து தாண்டவங்களிலும் விஞ்சி விடக்கூடும் என சொல்லப் படுகிறது. கடைசியாக சிவன் ஊர்த்தவ தாண்டவம் ஆடுகிறார். ஊர்த்தவ என்பதன் இலக்கியப் பொருள் தூக்கிய என்பது. இந்த தாண்டவத்தில் சிவன் விண்ணை நோக்கியபடி பாதத்தை வைத்துக் கொண்டு தனது வலது காலை நேர்குத்தாக உயர்த்துவது போல் காணப்படுகிறது. சிவனின் இந்த உருவம் ஊர்த்தவ தாண்டவமூர்த்தி என அழைக்கப்படுகிறது. தனது இரு முன்கைகளால் அவர் டமருவை வாசிக்கிறார். சில குழுமப்பட்டியல் சிற்பங்களில் இடது காலை தூக்கிய வண்ணமும், இன்னும் ஒரு சில படங்களில் அபூர்வமாக இறைவன் சிவன் வலது காலை தூக்கிய வண்ணமும் அதற்குப் பக்கத்திலேயே இடது காலை தூக்கிய வண்ணமும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
காணப்படுகிறது. இறைவன் சிவன் நாற்கரங்களுடனும், சில சமயம் எட்டுக்கரங்களுடனும் காணப்படுகிறார். இரண்டு கைகள் டமரு வாசிக்கின்றன, மற்ற இரு கைகள் சுசி முத்திரையில் உள்ளன.

அதே சித்திர குழுமப் பலகையில் காளி நடனமாடும் நிலையில் எட்டு அல்லது பத்து கரங்களுடன் பல கைகளை கோர்த்தவண்ணம் காணப்படுகிறாள். சிலவற்றில், ஆடவர்களிடையே தன் கால்களை தூக்க விருப்பமின்றி இறைவனின் தலைமையை ஏற்றுக் கொள்வது போல் காணப்படுகிறாள். சிலவற்றில் இறைவன் சிவனின் காலடியில் கைகளை கோர்த்தவண்ணமாகவும், சிலவற்றில் கோபமாகவும், அச்சமூட்டும், திகைப்புடனும் சிவன் அவளை தந்திரம் செய்துவிட்டது போன்ற நினைப்புடனும், ஆடவர்கள் முன் அப்படிப்பட்ட எந்த செயலையும் செய்யக்கூடாது என்ற முடிவுடனும் காணப்படுவது போல் இருக்கிறாள்.

பொதுவாக பெண்கள், நாட்டியம் ஆடும்போது ஆண்களுக்கு அவ்வாறு ஆட அனுமதிக்கப்பட்ட நிலையில் தாங்கள் அம்முயற்சியில் ஈடுபடக்கூடாது என்று எச்சரிப்பது போல் இருக்கிறது. கேரளம் மற்றும் தமிழ்நாடு இப்பகுதிகளில் பாரம்பரிய ஜோடி நடனக்கலை, மணிப்புரி நடனம் மற்றும் மௌர்பஞ்சௌ நடனம் ஆகியவற்றில் இப்படிப்பட்ட தாண்டவங்கள் உண்மையில் வடிவமைக்கப்படுகின்றன.

ஊர்த்தவதாண்டவ குழுமப்பட்டியல் பலகையில் பிரம்மா, விஷ்ணு, நந்தி மற்றும் காளியும் உள்ளனர். சிவன் – பார்வதி இவர்களின் வாகனமாய் இருக்கிற நந்தி, ஊர்த்தவதாண்டவ குழுமப்பட்டியல் பலகையில் மிருதங்கம் வாசிப்பது போல் காணப்படுகிறார். கடவுளை மிருக வடிவில் அமைத்து, மனித உடலமைப்பும், காளையின் முகமும் உள்ளவாறு, ஒரு கையால் மிருதங்கத்தை தட்டுவது போல் அவர் காணப்படுகிறார். அவர் நந்திகேஸ்வரர் – ஈஸ்வரனின் (இறைவன் சிவன்) சக்தியுடன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூடிய நந்தி என்றும் அழைக்கப்படுகிறார். அபிநய தர்பணத்தின், அபிநயங்களின் சாஸ்திரம் கூறும் மிகப்பெரிய விளக்கப் பொழிப்புரையின் ஆசிரியர் அவரே ஆவார். சிறந்த இந்திய நடனக் கலைஞர்களால் இன்று வரை அபிநயம் பிடிக்க இதுவே பின்பற்றப்படுகிறது.

சில சமயம் பிரம்மா (முதல் முகம் புதைந்தவாறு) இசைக்கருவியை இசைக்கும் வண்ணமும், தாமரையின் மீது நீதிமானாக அமர்ந்த நிலையிலும் காணப்படுகிறார். அவைகளில் பெரும்பாலானவை இறைவி சரஸ்வதி தாமரையில் அமர்ந்து கொண்டு வீணை வாசிப்பது போன்று அருகிலேயே அமர்ந்தவண்ணம் காணப்படுகின்றன. விஷ்ணு கைத்தாளம் அல்லது ஜால்ரா அல்லது புல்லாங்குழல் வாசித்துக் கொண்டு இருவரது நடனப்போட்டியில் தாளத்தை நிர்வகிப்பது போல் காணப்படுகிறார். அதே குழுமப் பட்டியல் பலகையில் கணபதி சில மோன இசைக்கருவிகளை சில சமயம் வாசிப்பது போல் காணப்படுகிறார்.

அர்த்தநாரீஸ்வரர்

சிவனும் பார்வதியும் சேர்ந்த அர்த்தநாரீஸ்வரரின் தோற்றம் ஊர்த்தவ தாண்டவமூர்த்தி அமைப்பாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இருவரின் நடனப்போட்டிக்குப் பின் சிவனும் பார்வதியும் இணைந்த கோலத்தில் அர்த்தநாரீஸ்வரராக உருக்கொண்டனர். இவ்வுருவத்தில் வலப்பக்கபாதியாக சிவனும் இடப்பக்க பாதியாக பார்வதியும் இருக்கின்றனர். இருவரும் வேறல்ல, ஒன்றே என்பதை அது அறிவிக்கிறது. சிவனும் பார்வதியும் தனித்தனியாக இருக்கவில்லை. ஆனால் ஒன்றாய் இணைந்தேயுள்ளனர். சிவன் புருஷனாகவும், பார்வதி தேவியாகவும் இருக்கிறார். சிவன் மூலமாக உள்ள நிலையில், பார்வதி அனைத்து செயல்களுக்கான வேகம் தரும் சக்தியாக இருக்கிறார். எனவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அனைத்து செயல்களுக்கும், இயக்கங்களுக்கும், அதிர்வுகளுக்கும் சிவன், பார்வதி இருவருமே தேவையாகும்.

சதுர தாண்டவம்

புதுச்சேரியில் உள்ள வில்லியனூர் சிவன் கோயிலில் பிரத்யேகமான சிவதாண்டவத்தை விளக்கும் குழுமச் சித்திரங்களுடைய பலகை உள்ளது. இந்த சித்திரப்பலகையில் சிவன் அவனது ஆனந்த தாண்டவம், ஊர்த்தவ தாண்டவ வடிவத்தில் காணப்படுவதோடு அல்லாமல் ஐந்து தலைகள், பத்து கை முதல் தரமான சௌக நிலையுடன் சதுர தாண்டவ மூர்த்தியாக சதுர தாண்டவ வடிவத்தில் காணப்படுகிறார். சிற்பப் பலகையின் நடுவில் சிவன் எட்டு கரங்களுடன் ஊர்த்தவ தாண்டவ மூர்த்தியாகவும், நான்கு கரங்களுடன் ஆனந்த தாண்டவ மூர்த்தியாகவும் காணப்படுகிறார். நந்தி மிருதங்கத்தை இயக்கவும், சரஸ்வதி வீணை வாசித்துக் கொண்டும், விஷ்ணு சிறிய ஜால்ரா தட்டுவதுமாக காணப்படுகின்றனர்.

கஜாசுரசம்ஹார மூர்த்தி

இந்த ரூபத்தில் சிவன், யானைத்தலையுடன் கஜாசுரன் என்றழைக்கப்படுகிற அரக்கனின் தலையில் நடனமாடுவது போல் காணப்படுகிறார். அரக்கனின் யானை வடிவ உடலைக் கிழித்து எறிந்துவிட்டு தலையில் நடனமாடுவது எனக் கருதலாம். அவர் எட்டு கரங்களுடன், அதில் நான்கு கைகள் யானையின் வயிற்றை கிழித்து திறந்தும், ஒரு கை டமரு வாத்தியத்தை பிடித்துக்கொண்டும் மற்றொன்று அக்னியை ஏந்திக் கொண்டும் அவரது முண்டம் (உடல் பகுதி) மிகவும் வருந்தும் நிலையில் ஒரு கால் இடுப்பில் வளைந்த வண்ணம் முட்டியை மடக்கியும், மற்றொருகால் அசுரனை அவனது தலையில் அழுத்திய வண்ணமும் இருக்கிறது. பக்கவாட்டில் பார்வதி ஒரு குழந்தையை தூக்கி வைத்துக் கொண்டு இருப்பது போல் காணப்படுகிறாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவகணங்கள்

சிவகணங்களும், பூதகணங்களும் சிவனின் தொண்டர்கள். எனவே அவர்கள் கோயில் தேர்களில் நடனமாடுவது போன்று செதுக்கப்பட்டிருக்கின்றனர். ஒரு அழகிய சிவகணம் தனது மடியில் மிருதங்கத்துடன் அமர்ந்த நிலையில் வலது கையால் அதை அடித்துக் கொண்டும், இடது கையில் ஒரு மத்தளம் தட்டும் கோலுடன் அடுத்த பக்கத்தை தட்ட இருப்பது போன்றும் காணப்படுகிறது. சிவகணங்களுள் சில, பறையை அடிப்பது போன்று காணப்படுகின்றன. சில உடுக்கை, கம்பிக்கருவி இவைகளை இயக்குகின்றன. அவைகள் சில சமயங்களில் நான்கு கரங்களுடன் உள்ளன.

சிவனின் அபூர்வ வடிவங்கள்

அபூர்வமாக ஒரு குழுமச் சித்திரப் பலகையில் .சிவன் பல்வேறு வகைப்பட்ட ஆறு நடன வகைகளில் காணப்படுகிறார். முதல் உருவத்தில் அவர் அலங்கரிக்கப்பட்ட முக்காட்டுடன் வளைந்த ஊதுகொம்பை (எக்காளம்) ஊதிக் கொண்டுள்ளார். அவரது கழுத்தைச் சுற்றிக்கொண்டு பாம்பு உள்ளது. அவர் வைர கழுத்தணி அணிந்து கொண்டிருக்கிறார். இடக்கையை ஒரு தோரணையாக வைத்துக் கொண்டு, அந்த இடக்கையில் ஒரு சிவகணம் கத்தி மற்றும் குறுந்தடியுடன் அமர்ந்தும் காணப்படுகிறார். சிவன் கால்களை மடக்கி அமர்ந்தும், வலது பாதத்தில் ஒரு சிங்கக்குட்டியும், இடது பாதத்தில் ஒரு பெண்ணுடனும் காணப்படுகிறார்.

இறைவன் நிற்கும் வடிவில் ஒரு கத்தி மற்றும் கேடயத்துடன் இருப்பதாக இரண்டாவது உருவம் காட்டுகிறது. அவர் அணிகலன்கள் பதிந்த முக்காட்டை அணிந்து சண்டை நடனம் செய்வது போன்று காட்சியளிக்கிறார்.

மூன்றாவது உருவத்தில் சிவன் நான்கு கரங்களுடன் புராணத்தில் காணப்படும் விலங்கின் மேல் (மகரத்தை ஒத்த)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாம்பைப் பிடித்துக் கொண்டு இடது கையில் கேடயத்தையும், வலது கையில் விலங்கினுடைய வாயையும் பிடித்துக் கொண்டிருக்கிறார். அவர் யாளியின் மீது உறுதியாக அமர்ந்திருப்பது போன்று காணப்படுகிறார்.

நான்காவது உருவத்தில் அவர் அமைதி தவழும் முகத்துடன், பாம்பு கழுத்தை சுற்றியுள்ளபடி, பின்கை இரண்டிலும் இரு வித்தியாதரர்கள் பறந்தபடியும், முன்கை இரண்டும் பக்கவாட்டில் ஓய்வாக இருக்கும் வண்ணமும் காணப்படுகிறார். இறைவன் வலதுகால் விரல் மற்றும் இடது முட்டியின் மீது ஓய்வாக இருப்பது போல் காணப்படுகிறார்.

சிவனது ஐந்தாவது உருவம் விஷ்ணுவின் நரசிம்ம அவதாரத்தை ஒத்து காணப்படுகிறது. அவர் சிங்கமுக உருவத்துடன் பின்கைகளில் பட்டா கத்தி கேடயத்துடனும், வலது முன்கையில் கத்தியுடனும் இடது முன்கையில் பாம்புடனும் காணப்படுகிறார்.

குழுமப்பட்டி பலகையில் கடைசி உருவமாக சிவன் இரண்டு கைகளிலும் கதாயுதத்தை ஏந்தியபடி நடனமாடுவதாக காணப்படுகிறார். அவர் அலங்கரிக்கப்பட்ட முக்காட்டுடன், கழுத்தணி மற்றும் அலங்கரிக்கப்பட்ட மணிகளுடன் கூடிய வார்ப்பட்டை இடுப்பை சுற்றியபடியும், கழுத்தை சுற்றியபடி பாம்பையும், வலது தொடையில் உறுதியாக இருக்கும் ஒரு உடைவாளுடனும் காணப்படுகிறார்.

இறைவனின் பல்வேறு வகைகளை கலைஞன் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளான் என்பதை இந்த குழுமப் பட்டியல் சித்திரப் பலகையில் உள்ள ஆறு உருவங்களும் காட்டுகின்றன.

நிர்த்த கணபதி

சிவன், பார்வதி இவர்களின் மூத்த குமாரன் என்ற வகையில் கணேசன் ஒரு நடனக்கலை வல்லுனர், அவர் நடனமாடும் கணேசனாக காட்டப்படுவதால் நிர்த்த கணபதி அல்லது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நடனகணபதி என தமிழில் அழைக்கப்படுகிறார். இவ்வடிவில் அவர் எட்டு கரங்களைப் பெற்றிருக்கலாம். யானை அங்குசத்தையும் (தார்க்குச்சி) அடை போன்ற பலகாரத்தையும், சுருக்கு அல்லது கண்ணியையும், ஒரு கோடாரியையும் ஒரு வளையத்தையும், ஒரு மோதிரத்தையும் கரங்களில் ஏந்தியுள்ளார். குஞ்சித உருவில் கால்கள் வளைந்து ஒரு கை நடனமாடுகிறது. பெரும்பாலான இத்தகைய உருவங்கள் ஒற்றையாகவும், தனித்தும் இருக்கின்றன. சில அபூர்வ வடிவத்தில் அவர் 'பஞ்சமுக நடன கணபதி'யாக காட்சி அளிக்கிறார். அபூர்வமாக ஊர்த்தவ தாண்டவ குழும சித்திரப்பலகையில் இசைக்கருவிகளை வாசித்துக் கொண்டிருக்கும்படி காணப்படுகிறார். இறைவன் கணேசன் கணேச வந்தனத்தில் ஈடுபட்டு, கனக தாண்டவம் என்று சொல்லப்படுகிற சில குறிப்பிடும்படியான தாண்டவமாடுகிறார்.

விஷ்ணு - நடன தோரணைகள்

பாலமுரளிகிருஷ்ணன்: இந்த கிருஷ்ண அவதாரத்தில் இறைவன் விஷ்ணு பல நடன தோரணைகளுடன் காணப்படுகிறார். அவர் புல்லாங்குழலை வாசித்துக் கொண்டு, பசுக்களையும், கோபியர்களையும், பசுக்கூட்டத்தை மேய்ப்போரையும் மயக்குகிற பாலகிருஷ்ணனாக காணப்படுகிறார். கன்றுகள், பசுக்கள் இன்னும் மற்றோர் புடைசூழ உறுதியாக நின்ற நிலையில் புல்லாங்குழல் வாசிப்பதன் காரணமாய் அது அழகாக இருக்கிறது. இறைவன் கிருஷ்ணன் முரளீதரனாக கடம்ப மரத்தின் அடியில் முரளியை (புல்லாங்குழல்) வாசித்து, தனது மெல்லிய புல்லாங்குழல் இசையால் கோபியர்களை அழைக்கிறார். சில படிமங்களில் கிருஷ்ணர் ராதையுடனும், இருவிதமாக நடனமாடும் நிலையிலும், கிருஷ்ணர் புல்லாங்குழல் வாசிக்கும் நிலையிலும் காணப்படுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கலியதமனா

இறைவன் கிருஷ்ணன், அடங்காப்பிடாரியான பாம்பரசனாகிய காளிங்கன் (கலியா) என்பனுக்கு ஒரு பாடம் புகட்ட யமுனை நதியில் மிக்க ஆழத்தில் குதித்ததாக கூறப்படுகிறது. 'கலியா' பாம்பின் படத்தின் மீது நடனமாடுவதுபோல் காணப்படுகிறார். அதன் வாலை தனது இடக்கையில் பிடித்துக் கொண்டிருக்கிறார். பாம்பின் தலையில் தனது வலக்காலை உறுதியாக வைத்திருக்கிறார். இடது காலை சற்று வளைத்த வண்ணம், உடலை உறுதியான சிறந்த தோற்றத்தில் வைத்து, வலது கை அபயமுத்திரையுடன், தனது பாதுகாப்பை தேடுவோரை வாழ்த்தும் வண்ணம் உள்ளார். இரண்டு நாககன்னிகைகள் 'கலியா'வைக் கொல்லாமல் விட்டுவிட கைகூப்பி இறைஞ்சும் படியாக பக்கவாட்டில் உள்ளனர். இறைவன் கிருஷ்ணன் அனைத்து கெட்ட சக்திகளையும், கரியபாம்பென உருவகிக்கப்படும் நான் எனும் அகங்காரத்தையும் அழித்து ஒழிக்கிறார். தன்னை சரண் அடைந்தவர்களுக்கு பேரின்பத்திற்கான வழிகாட்டுகிறார்.

பக்தர்களின் களியாட்டம்

பல கோயில் தேர்களில் பக்தர்கள் தாடியுடன் காணப்படும் சாதுக்கள் உருவங்களில் இருகைகளிலும் சாமரத்தை பிடித்துக்கொண்டு ஆடுவது போல காட்டப்படுகிறது. சாமரத்தை தாங்குபவர்கள், துவாரபாலகர்கள் செம்மையான உறுதியான தோற்றத்துடன் கூடிய தோரணையில் காட்டப்படுகின்றனர்.

யாழ் வாசிப்போர்

அநேகமாக அனைத்து கோயில் தேர்களிலும் யாழ் வாசிப்போரின் உருவங்கள் உள்ளன. இரண்டு கால்களைப் பின்னிய வடிவில் நிமிர்ந்த தோற்றத்துடன் பொதுவாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர்கள் பெண்களாகவே உள்ளனர். கம்பிக்கருவியை வைத்துக்கொண்டு தன் இருகைகளாலும் அதை வாசிக்கின்றனர். அது தம்புராகவோ அல்லது வீணையாகவோ இருக்கக்கூடும்.

சரஸ்வதி, கங்கை மற்றும் பார்வதி

பொதுவாக சரஸ்வதி ஒரு உயர்ந்த மேடை மீதோ அன்றி தாமரையின் மீதோ அமர்ந்த நிலையில் காணப்படுகிறாள். தம்புரா அல்லது வீணை வாசிக்கும் நிலையில் காணப்படுகிறாள். ஊர்த்தவ தாண்டவ குழும சித்திரப் பட்டியல் பலகை எனில் அதில் பிரம்மாவுடனும், மற்றபடி தனித்த நிலையிலும் காணப்படுகிறாள். அவளுடைய பின்கை ஒரு தாமரையையோ அல்லது அபயமுத்திரையையோ அல்லது தாள்சுருளையோ ஏந்தியிருக்கும். கங்காதேவி பொதுவாக மகரா என்று அழைக்கப்படுகிற யாளி உருவத்தின் வாயிலிருந்து வருவது போல் காட்டப்படுகிறது. அவள் வீணையை வாசித்துக்கொண்டிருக்கிறாள். அவள் பொதுவாக இடுப்பிலும், கழுத்திலும் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறாள். சில சமயங்களில் சிவனாகிய கங்காதர மூர்த்தியின் தலைமுடிக்கற்றையிலிருந்து இறங்கி தரையில் ஊற்றுவது போல் காட்டப்படுகிறாள். இந்த தனிப்பட்ட சிற்ப பலகையில் ஒரு தேவி (பெரும்பாலும் இறைவி பார்வதி) செம்மையான சௌக தோரணையில் கோர்த்த கைகளை உயர்த்த எத்தனிப்பது போல் காணப்படுகிறாள். ஒடிசி நடனத்தில் ஒரு அம்சமாக எது புகழ் வாய்ந்ததாக இருக்கிறதோ அந்த தசாவதார சித்திர குழுமப்பலகையை நான் இதில் சேர்க்கவில்லை. மாற்றமின்றி விஷ்ணுகோயில் தேர்களில் விஷ்ணுவின் பத்து அவதாரங்களை அர்ப்பணித்து செதுக்கப்பட்ட சித்திரப்பலகைகள் இருக்கும். இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் போன்றவற்றின் கதைகள் பல்வேறுபட்ட நடன வகைகளாக அஷ்டநாயகி, சீதாசுயம்வரம், ராவணனை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வதைக்கும் இராமன், சூரியஷ்டகா, அஷ்டசம்பு என்று குறிப்பிடும்படியான சில செம்மையான நடனங்களுடன் காணப்படுகின்றன. இவைகள் எல்லாம் சித்திரப்பலகைகளில் வெளிப்படுத்தப்பட்டிருப்பினும், அவைகளை இந்த சிறிய படைப்பில் விளக்குவது நோக்கமல்ல.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திரிபுர தகனச் சருக்கம்

கபடநாடக சூத்திரதாரியாகிய திருமால் திரிபுரவாசிகளாகிய அந்தணர்களை எல்லாம் அவர்கள் மேற்கொண்டிருக்கிற சிவ சின்னங்களையும், சிவபூசையையும் விடுவித்துப் பாவிகளாக்க வேண்டி தனது மாயா சக்தியினால் தான் ஒரு புத்த மதகுருவாகி, நாரத முனிவரை அதற்குத் தகுந்த மாணவராக, கூட அழைத்துக் கொண்டு திரிபுரங்களில் பிரவேசித்து அப்புரவாசிகளுக்கு எல்லாம் சில அற்புத மகத்துவங்களைக் காட்டி வஞ்சித்து, தனது துர்போதனையினாலே திரிபுரவாசிகளை எல்லாம் பாவிகளாக்கினார். ஆனால், தலைவர்களாகிய தாரகாக்ஷன், மகராக்ஷன், வித்துவன்மாலி என்ற வைராக்கிய சிவபக்தர்கள் மூவரை மாத்திரம் அப்படியாக்குவதற்கு இயலவில்லை. மூவர்களை போதிப்பது முடியாவிடினும் குற்றமில்லை. முப்புரவாசிகள் எல்லாம் சன்மார்க்க நெறிதவறித் துன்மார்க்கர்களானதே போதும் என்று கருதி உடனே விஷ்ணு, இந்திராதி தேவர்களையும் கூட்டிக்கொண்டு போய், ஸ்ரீ கைலாயத்தை அடைந்து, அங்கே சுயம்புவாய் முதற்காவலராக விளங்கி நின்ற ஸ்ரீ நந்திதேவரைக் கண்டு துதி செய்து வணங்கி "சுவாமி! அடியேன்களெல்லாம் திரிபுராதிகள் செய்யும் கொடுமையை தவறாது சிவபிரானுக்குத் தெரிவிக்க வேண்டும்" என சொல்லி வேண்டிக் கொண்டார்கள்.

ஸ்ரீ நந்திதேவர் விஷ்ணு மற்றும் பிற தேவர்களை நோக்கி, "அன்பர்களே! நீங்கள் அஞ்ச வேண்டாம்! திரிபுராதிகளுக்கு காலம் குறுகி விட்டது. அதற்குத் தக்கபடியே இப்போது அவர்கள் சிவ பூசைகளை விட்டு மகா கொடுமைகளை செய்து வருகிறார்கள். இவைகளை எல்லாம் சுவாமிக்கு தெரிவித்து வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று அவர்களை எல்லாம் வாயிலின் வெளியே நிறுத்தி விட்டுப் போய் சிவபிரானை உருகி வணங்கி நின்று, திரிபுராதிகள் செய்யும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொடுமைகளையும் அவற்றைச் சகிக்க மாட்டாமல் விஷ்ணு முதலியோர் வந்து வாயிலில் வந்து காத்திருப்பதையும் பற்றிக் கூறினார்.

அது கேட்டு சிவபெருமான், "நல்லது, நாம் திரிபுர சம்ஹாரம் செய்வதற்கு வில் முதலானவற்றை ஆயத்தம் செய்து விஸ்வப் பிரம்மனை வரும்படி தேவர்களுக்குக் கட்டளையிடுக", என்று சொன்ன மாத்திரத்தில் நந்திதேவர் சந்தோஷமாய் பணிந்து விடை பெற்று வந்து விஷ்ணுவாதியர்களை நோக்கி, "நீங்கள் போய் சீக்கிரத்தில் சிவபெருமான் எழுந்தருளி வருவதற்குத் தக்க வில்லும் அம்பும் சேகரித்து வாருங்கள்", என்று பணித்த மாத்திரத்தில் விஷ்ணு முதலிய தேவர்களெல்லாம் மிகுந்த சந்தோஷமடைந்து ஸ்ரீ நந்தி தேவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு போய் விஸ்வகர்மாவிடம் ஒரு பெரிய விசித்திரமான ரதத்தை செய்யும்படி அகண்டாகார சொரூபியாகிய சிவபெருமானுக்கு நாம் கண்டிதமாகிய ஓர் இரதம் செய்து கொண்டு போவது கூடாதேயாயினும் அவன் அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு மகத்தாகவும் இருப்பவராதலாயினும், இப்போது கண்டிதங்களாகத் திரியும் திரிபுரங்களை அடக்க வேண்டித் தாமும் கண்டிதராகவே எழுந்தருளி வருங்கருத்தால் நம்மை இரதங்கொண்டு வரச்சொல்லி இருக்கின்றமையானும் ஒருவாறு அமைத்துக் கொண்டு போவோம் என்று தீர்மானித்து, துவாத சாதித்தரும் சந்திரனும், சூரியனும் சக்கரங்களாகவும், பூமியே அடிப்பீடமாகவும், சப்த கன்னிகைகள் (சப்த மாத்ரிகா) படிகளாகவும், அஷ்டகுல வெற்பும் தூண்களாகவும், இமயவரை கொடிஞ்சியாகவும், அஸ்தகிரி உதயகிரி கூம்பாகவும், நான்கு வேதங்களும் குதிரைகளாகவும், ஆறங்கம் புராண சாஸ்திராதிகள் மணிகளாகவும், பிரம்மா சாரதியாகவும், மகாமேரு கிரி வில்லாகவும், ஆதிசேடன் அந்த வில்லுக்கு நாணாகவும், சரஸ்வதி வில்லிற்றூங்கும் மணியாகவும், விஷ்ணு அம்பாகவும் இப்படி தேவாமிசங்களை எல்லாம் திரட்டி இரதமும் வில்லம்புமாக ஏற்படுத்திக் கொண்டு பிரம்ம

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விஷ்ணுக்களும் இந்திராதி தேவர்களும் கைலாசத்தையடைந்து திருநந்தி தேவரைத் தரிசித்துப் போற்றி வணங்கி, "சுவாமி! தங்கள் கட்டளைப்படியே சிவபிரானுக்கு இரதமும் வில்லும் கொண்டு வந்திருக்கின்றோம். இந்தச் செய்தியை ஸ்ரீ கைலாசபதிக்குத் தெரிவிக்க வேண்டும்", என்று கூறினார்கள். ஸ்ரீ நந்திதேவர் அப்படியே சுவாமிக்குத் தெரிவிக்க, சுவாமி "அவர்களை எல்லாம் இங்கே வர விடுக" என்று பணிந்தருளினார். ஸ்ரீ நந்திபிரான் வந்தோர் யாவரையும் சிவபிரான் திருமுன்பு விடுக்க, விஷ்ணுவாதியர்கள் சிவபிரானைத் துதிசெய்து வணங்கி, சுவாமி எங்கள் இடர் தீர்த்தருள வேண்டும் என்று பிரார்த்திக்க, சுவாமி திருவருள் கூர்ந்து எழுந்திருந்து பிரம்மதேவர் கைகளைப் பற்றிக்கொண்டு திருவாயிலைக் கடந்து பானுகம்பன் ஆயிர வாயாலும் சங்கத்தொனி பண்ணவும், வாணாசுரன் இரண்டாயிரங் கைகளாலும் குடமுழா முழக்கவும், தும்புரு நாரதர் யாழ்மீட்டி கீதம் பாடவும் எழுந்தருளி வந்து மேருவில்லைத் திருக்கரத்தில் வாங்கிக்கொண்டு, தேவர் தெய்வதாமிசங்களாற் சமைத்துக் கொண்டு வந்த இரதத்திலேறினார். இந்திராணி முதலிய தேவமாதர்கள் வாழ்த்தெடுப்ப, லட்சுமி சரஸ்வதி இருவரும் இருமருங்கிலும் வணங்கிக் கைலாகு கொடுத்து வர உமாதேவியாரும் எழுந்தருளி வந்து சிவபிரான் பக்கத்தில் அமர்ந்தருளினார். அநேகமாயிரம் சிவகணங்களும், பூதப்படைகளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் புடைசூழ விநாயகக் கடவுளும், சுப்பிரமணியக் கடவுளும், வீரபத்திரக் கடவுளும், தேவேந்திரனும் தத்தம் வாகனங்களில் ஆரோகணித்துக் கொண்டு வந்து இருபுடையும் நெருங்கினார்கள். பிரம்மதேவர் இரதத்தை நடத்தினார். சர்வ வாத்தியங்களும் முழங்க, சகல விருதுகளுடனும் இப்படியாகச் சிவபிரான் எழுந்தருளிய இரதம் தென்திசை நோக்கிச் சென்று திருவதிகாபுரியை அடைந்தது. திரிபுரங்களும் ஒன்றோடொன்று நெருங்கித் திருவதிகையின் தென் பாரிசத்திலிருந்தன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சர்வ சாமார்த்தியமுடைய சிவபெருமான் அந்த முப்புரங்களைக் கண்ணுற்று, இப்புரவாசிகளாகிய அடிமை அசுரர்களோ நமக்கோர் எதிரிகள்! இவர்கள்மேல் நாம் படையெடுத்துப் போதல் தகுதியன்றே என்று இரங்கி நின்றார். அப்போது தேவர்கள் நாமெல்லாம் இப்படி உபபலமாக வராவிட்டால் சிவபெருமான் திரிபுராதிகளை எப்படி வெல்வார் என்று தங்களுக்குள்ளே கொஞ்சம் கர்வம் கொண்டார்கள். அந்த குறிப்பை உணர்ந்த சிவபிரான் புன்னகை செய்து, தேவர்கள் கொணர்ந்த அந்த இரதத்தில் தாம் சற்று அழுந்தி உட்கார்ந்தார். உட்காரவே, இரதம் அச்சு வேறு ஆணி வேறாக சிதைந்தது. இரதம் சிதைந்ததைக் கண்ட திருமால் உடனே தாம் ஒரு ரிஷப வாகனமாகி, சிவபிரானையும் உமாதேவியாரையும் தாங்கிக் கொண்டார். அது முதலாகவே ரிஷபம் சிவபிரானுக்கு அதிசிரேஷ்டமான வாகனமாயிற்று.

இதனை,

கடகரியும் பரிமாவுந் தேரும் உகந்து ஏறாமே
இடபாகமுகந் தேறியவா றெனக்கரிய வியம்பேடி
தடமதில்கள் ஒருமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ.

என வரும் திருவாசகத்தில் காணலாம்.

சிவபிரான் தேவர்கள் மமதை அடங்கும்படியாகச் செய்த புன்னகையுடனே, சிவபூசை தவறாத் திரிபுரத் தலைவர்கள் மூவரும் உயிர்தப்பி உய்ந்திடற்கோர் தண்ணகையும், அப்பூசை தவறிய முப்புரவாசிகளெல்லாம் புரத்தோடு எரியும்படி வெந்நகையும் செய்தருளி வீர அட்டகாசம் பண்ணினார். அதனால் திருவதிகையில் சிவபிரானுக்கு அன்று முதல் வீரட்டேசுவரர் எனப் பெயராயிற்று.

முப்புரத் தலைவர்கள் மூவரும், அவர்கள் இருந்த இடமும் தவிர ஏனையோரிருந்த இடமெல்லாம் அக்கணமே அவர்களோடு முற்றிலும் எரிந்து அழிந்தது. சிவபெருமான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முப்புர தலைவர்கள் மூவருள் இருவரைத் துவார பாலகராகவும், ஒருவரைக் குடமுழா முழக்குபவராகவும் தமது அருகிலிருக்கும்படி கட்டளையிட்டருளி, தேவர்களுக்கெல்லாம் விடை கொடுத்தனுப்பி விட்டுத் தாம் மாயமாய் மறைந்தருளினார்.

தேரின் பிறப்பிடம் திருவதிகையை தவிர தரணியில் புகழ்பெற்ற இடம் வேறில்லை. அகண்டகாரனாகிய இறைவனுக்கு நாம் கண்டிதமாகிய ஓர் இரதம் சமைப்போம் என்ற வரிகள் திருவதிகை தல வரலாற்றில் உள்ளன.

மேலும் சிவபெருமான் திரிபுரங்களை அழிக்க வேண்டி தேவர்கள் இரதம் அமைத்தனர் என்பதையும் நூலின் வழி கண்ட உண்மையாகும். இத்திரிபுரங்கள் என்பது இங்கு திருவதிகை எனும் தலத்தையே குறிக்கின்றன, மட்டுமின்றி திரிபுரத் தகனத் தலமான வீரட்டேசுவரர் ஆலயம் உள்ள இடமும் இத்திருவதிகையேயாகும். இத்தலத்தில் திரிபுர தகன விழா ஒவ்வோராண்டும் சிறப்பாக நடைபெற்று வருவதும் அனைவரும் அறிந்த வரலாற்று உண்மையாகும்.

அவ்வமயம் திருவதிகையில் எழுந்தருளி உள்ள சரநாராயணப் பெருமாள் தேர்ச்சக்கரத்தின் அருகில் நிற்பார். தேரின் அச்சு முறிந்தபோது இடபமாகிப் பெருமானைத் தாங்கியிருக்கிறார் என்று ஐதீகம் கூறுகிறது. திரிபுரம் எரிக்கப்பட்ட பின் அதை எரித்த களைப்பு நீங்க திருமால் படுத்து அறிதுயில் கொண்ட காட்சியும் சரநாராயணப் பெருமாள் சன்னதியில் காணலாம்.

“தடமதில்கள் அவை மூன்றும் தழலெரித்த அந்நாளில் இடபமதாய் தாங்கினார்”. திரிபுரசம்ஹாரர் செல்லும் தேரினை இடபம் தொடர்ந்து வருவது போலவோ, தாங்குவது போலவோ அமைக்க வேண்டுமென்று கூறுகின்றன. இவை திருவதிகைச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிற்பத்தில் பின்பற்றப்படுகின்றன என்ற செய்தி ஸ்ரீ திரிபுராந்தகர் என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

மானுடவியல் நூலாளர்கள் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் வீரட்டேஸ்வரரே இந்திய தென் தீவுகளை எரியும்பால் எரித்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோவிலும், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலும், திரிபுர பல்லவர்களால் கட்டியதாக கூறப்பட்டு இருக்கிறது.

மேற்கண்ட வரலாற்று உண்மைகளிலிருந்து தேர் தோன்றிய இடம் திருவதிகையே என்னும் கூற்று தெள்ளத் தெளிவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்று அறியலாம்.

மூவெயில் செற்றஞான் றுயர்ந்த மூவரில்
இருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
யொருவநீ கரிகட ரங்காக
மனை நோக்கியோர் மாநட மகிழ
மணிம ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவரின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப்புன்கூ ருளானே.

– சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காளையார் கோவில் இரதம்

'நாம் சொல்வதைக் கூடவா, குப்பமுத்தாசாரி தட்டிக் கழிப்பார். நான் அப்படி நினைக்கவில்லை. தம்பி' - பெரிய மருதுபாண்டியர் தன்னம்பிக்கையுடன் கூறியது கேட்டு அரும்பிய புன்னகையுடன் அமர்ந்திருந்தார் மருதுபாண்டியர். அவருக்கென்னமோ, சிற்பி குப்பமுத்தாசாரி காளையார் கோவில் இரதம் உருவாக்க ஒப்புக்கொள்வார் என்ற நம்பிக்கை எள்ளளவும் இல்லை. குப்பமுத்தாசாரி அந்நாளில் கைதேர்ந்த சிற்பி என்கிற உண்மை ஊர் அறியும். சிற்பக்கலையின் மாணிக்கமாய் விளங்கி வந்தவர். தந்தையை விட மிக அற்புதமான கலைஞர்; நாடே கூறும். இவையெல்லாம் ஒரு பத்தாண்டுக்கு முன்னே, இப்போது அடங்கி ஒடுங்கி தம்மகத்தே ஆமைபோல அமைதி தேடிக் கொண்டிருந்தார். அவருக்கு தமது தந்தையின் இறப்புக்குப் பின்னர் கலை வாழ்வு வெறுத்து விட்டது. எனவே, குடிவழியில் தொடர்ந்து மற்றொரு தொழிலான சோதிடக் கலையைப் பிழைப்பாக மேற்கொள்ளலானார் குப்பமுத்தாசாரி.

அவர் சிற்பக்கலையில் வெறுப்படைந்ததற்கு முதல் காரணம் இதுதான். படைத்து வைக்கும் கலைப்பொருள்கள் அனைத்துமே பாவிகள் வெள்ளைப் பறங்கியர்களால் பாழாய்ப் போகின்றன. அப்படி இருக்க ஏன் படைக்க வேண்டும்? எதற்காகப் படைக்க வேண்டும்? படைத்தலைவன் நயினப்ப சேர்வை அரண்மனைக் கூடத்துள் நுழைந்தான். கடையாடி குப்பமுத்தாசாரியிடம் அவனைத்தான் தூது அனுப்பி இருந்தனர். 'பாண்டிய நாட்டுப் பூபதிகளுக்கு என் வணக்கம். குப்பமுத்தாசாரியரை ஒப்புக்கொள்ளச் செய்துவிட்டேன். இதோ அவரையும் அழைத்து வந்திருக்கிறேன்', என்றான் சேர்வை. அகமும் முகமும் மலர மருதுபாண்டியர்கள் இருவரும் எழுந்து சென்று வரவேற்றனர். இவர்கள் நாட்டுக்குக் காவலர்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்நாட்டை நாகரிகம் பெறச் செய்து வாழ வைக்கும் கலையின் காவலராயிற்றே குப்பமுத்தாசாரி.

'ஆசாரியவர்களே! காளையார் கோவிலின் கோபுரத்தைக் கட்டிமுடித்த மருதுவின் புகழ் ஒரு புகழல்ல. இதோ, மருத மரத்தால் காளீஸ்வரருக்குப் பெரிய ரதம் உருவாக்கப் போகும் தங்களுடைய புகழைத்தான் பெரும் புகழ் என்பேன். ஏனென்றால் என்னுடைய ஆயுள் மிகச் சொற்பம்! தாங்கள் படைக்கும் கலையின் ஆயுள் ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கும். ஏற்கனவே பறைசாற்றியபடி பல சிற்பிகள் வந்திருக்கின்றனர். மருத மரங்களும் ஏராளமாகக் குவிந்துவிட்டன. இனி தாங்கள் தலைமை தாங்கி உருவாக்க வேண்டியது தான். என் வேண்டுகோளை மறுக்காமல் ஒப்புக் கொண்டதற்கு மகிழ்ச்சி'. 'நன்றி மன்னவா! ஆனால்......' என்று தயங்கினார் குப்பமுத்தாசாரி. சின்னமருது முன்வந்து நெற்றியைச் சுளித்தார்; 'சொல்லுங்கள் சிற்பியாரே'.

'வெள்ளையர்களால் அழியப்போகும் இக்கலை உருவாக வேண்டுமா என்பது தான் என்னுடைய தாழ்மையான முதல் கேள்வி?' 'வெள்ளையர்களைத்தான் நாம் பூண்டோடு அழிக்கப் போகிறோமே?', 'கட்டபொம்ம வீரக்காளையின் கதியைக் கேள்விப்பட்ட பிறகு நாம் வெள்ளையரை அழிப்போம் என்பது கனவாகி விட்டதே அரசே! அடியேனின் கருத்து புறம்பானாலும் மன்னிக்கவும்'. மருது பாண்டியர்களுக்கு என்ன மறுமொழி கூறுவதென்றே புரியவில்லை மயக்கம் கொண்டனர் என்றாலும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு குப்பமுத்தாசாரியை நோக்கினார் பெரிய மருது. 'சிற்பியாரே! நாம் அழிந்தாலும் நம்முடைய கலையை அழிக்காமல் பாதுகாத்து விட்டுச் செல்வோம். துணிவாகச் செயலில் இறங்குங்கள். இந்த பெரிய மருதுவின் உயிரையே வெள்ளையன் தாங்கள் படைக்கும் இரதத்திற்கு காணிக்கையாகக் கேட்டாலும் தருவதற்குத் தயாராக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருக்கிறேன்'. 'போதும் அரசே போதும்! நாளையே நாள் பார்த்து இரதவேலையைத் தொடங்குகிறேன்'.

'சிற்பச்செல்வமே! என் சிந்தையெல்லாம் இனித்து விட்டது. காளையார் கோவிலின் கோபுரத்தை உருவாக்கிய போது கண்ட மகிழ்ச்சியை விட பெரு மகிழ்ச்சியடைகிறேன். இரதம் முடிவடைந்ததும் தாங்கள் எதைப் பரிசாகக் கேட்டாலும் தருவதற்குத் தயங்க மாட்டேன்'. பெரிய மருதுவின் அகன்ற கண்களில் மகிழ்ச்சி கரை புரண்டது. நாளும் கோளும் பார்த்து இரதத்தை உருவாக்கத் தொடங்கினார் குப்பமுத்தாசாரி. அவரிடம் நீண்ட நாளாய் ஓய்விலிருந்த கற்பனை ஒன்று கூடித் திரண்டது. இரதத்தின் சப்பர அளவை எடுத்து நடுப்பாகத்தை அளந்தார் குப்பமுத்தாசாரி. அந்த நடுப்பாகத்தில் சுண்ணாம்புக் கட்டியால் வலம்புரி வினாயகரை வரைந்து, வணங்கினார். அடுத்து உளியை கையிலெடுத்து நெற்றிக்கு நேரே நிறுத்திக் கொட்டாப்புளியால் ஊன்றினார். அரை நாழிகைப் பொழுதில் வினாயகருடைய முகம் மிக அழகிய முறையில் அமைந்தது. துதிக்கையைச் சற்றே நீட்டி வளைக்க வேண்டி உளியைச் சாய்த்துச் செதுக்கினார்.

ஆ..! கடக்! துதிக்கை சிதறியோடி அப்பால் விழுகிறது. அகன்ற ஆசாரியின் கண்கள் நடந்ததறிந்து நடுநடுங்கின. இடக்கையிலிருந்த உளியும் வலக்கரம் பற்றியிருந்த கொட்டாப்புளியும் நழுவிக் கிழே விழுந்து மெல்ல ஓசையெழுப்பின. நாடி, நரம்பு தளர்ந்து எழுந்தார் ஆசாரி. சோதிட நாடி பார்க்க அவருடைய நெஞ்சம் நாடியது. நேரத்தைக் கவனித்தார் - கணித்தால், ஒரு பூவின் நினைவு அவருக்குத் தோன்றியது. கணக்குப் போட்டுப்பெருக்கிக் கூட்டிக் கழித்துப் பார்த்ததில் ஒரு எண் மிகுதியாகக் கிடைத்தது. அதன்படி ஓலைச் சுவடியை விரித்துப் பார்த்தார். கேளப்பா....... என்று தொடங்கிய வரிகளைக் குறைந்தது பத்து தடவையேனும் படித்துப் பார்த்திருப்பார். அப்போதும் ஐயம் நீங்கியபாடில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சோதிடம் கூறிய அந்த உண்மை அவருடைய நெஞ்சத்தை ஓர் உலுக்கு உலுக்கியது. செயல்களுக்கெல்லாம் எலும்பில் காய்ச்சல் ஏற்பட்டது. சிந்தித்தார். மேலும் மேலும் சிந்தித்தார். சிந்தனை ஒருவாறு முடிவைக் கண்டது. எப்படியும் ரதத்தை உருவாக்கியே தீர வேண்டும். கொடுத்த வாக்கை இதுவரை அவரது மரபினர் மீறியதே கிடையாது. மேலும் நாடி சொன்ன செய்தியை அரசிடம் கூறுவது தகாத ஒன்று. அப்படிக் கூறினாலும் நம்புவோர் போக, நம்பாதவர்கள் 'செயல்பட ஒப்புக்கொண்டமைக்காகச் செப்படி வித்தைச் செய்கிறான் இந்த சிற்ப ஆசாரி' என ஊரறிய ஓலமிடுவார்கள். ஆகவே ரதத்தை எப்படியும் உருவாக்கியே தீர வேண்டும் என்று முடிவெடுத்தார்.

கலை வாழட்டும்! காளையார் கோவில் இரதம் மிக மிக அற்புதமான முறையில் உருவானது. மருத மரத்தின் மஞ்சள் நிறம், தங்கத்தால் ஆக்கப்பட்ட இரதமோ என வியக்கத்தக்க அளவுக்கு விளங்கியது. சிவகங்கைச் சீமை மக்கள் ஒருமுகமாக குப்பமுத்தாசாரியின் திறமைக்குப் புகழ் மாலை சூட்டினர். சீமையின் சீமான்களான மருதுபாண்டியர்கள் இரதத்தைப் பார்வையிட்டனர். அவர்களுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. காளீஸ்வரர் தான் பாக்கியம் செய்தாரா? அன்றி காளீஸ்வரர் அருளால் குப்பமுத்தாசாரி தான் பாக்கியம் பெறப் போகிறார் என்று மருது சகோதரர்கள் மனத்துள் வியந்து பாராட்டிக் கொண்டனர். வெள்ளோட்டத்திற்கு நாளும் குறிப்பிட்டாகி விட்டது. குறிப்பிட்ட நாளும் நெருங்கியது. குணதிசையில் கதிர்ச்செல்வனும் கனகனக்க எழுந்தான். மக்கள் கூட்டம் காளையர் கோவிலை நாடிக் கடல் போலத் திரண்டது. மருதுபாண்டியர்களும் அவர்களுடைய பரிவாரங்களும் அரச தோரணையில் பக்திக் கோலம் பூண்டிருந்த காட்சி அனைவரையும் மெய்ச்சிலிர்க்க வைத்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காளீசுவரர் கம்பீரமாக இரதத்தில் அமர்ந்தார். அடுத்து மருது சகோதரர்கள் இரதத்தில் ஏறி நின்றனர். பூசனைகள் முடிந்தன. 'சிற்பியாரே! இரதத்தைச் செலுத்தலாமல்லவா?', பெரிய மருதுவின் மலர்ந்த உதடுகள் அசைந்தன. ஆசாரியாரும் அமைதியாகத் தலையசைத்தார். மக்கள் குழாம் வடத்தைப் பிடித்து இரதத்தை இழுத்தது. அப்போது பெருத்த எழுச்சிக் குரல் கிளம்பி வானை அதிரச் செய்தது. அந்தக் குரலில் மருதய்யா, காளிசுவரா என்ற புகழ்ச் சொற்கள் மிதந்தன. பலம் கொண்ட வரையில் இரதத்தை இழுத்துப் பார்த்த மக்களுக்கு வியப்பே பெரிதும் மேலிட்டது. எவ்வளவு பலம் கொண்டு இழுத்தாலும் இரதம் ஓரங்குலம் கூட அசைந்தபாடில்லை. அதன் காரணம்? இரதம் இப்படி நகராமல் அடம் செய்வதைக் கண்ட பெரியமருது, ஆசாரியை வியந்த கண்களோடு நோக்கி காரணம் கேட்டார். ஆசாரியும் அந்த சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியவர் போல் கூறினார்.

'அரசே! சிற்பிக்கு செலுத்த வேண்டிய காணிக்கையை முதலில் கேட்டது இரதம்?' மருதுபாண்டியர்கள் தம்மை மறந்து நின்றனர். பெரிய மருது, சற்று திடம் கொண்டு மலர்ந்த முகத்துடன், 'கேளும் சிற்பியாரே! கேளும்! எதைக் கேட்டாலும் உம்முடைய கலைத்திறனுக்காக இக்கணமே தருவதற்குச் சித்தமாயிருக்கிறேன். நான் ஏற்கனவே வாக்களித்தபடி இது காளையர் அறிய நான் தரும் வாக்கு!' எனக் கூறி முடித்தார். கூட்டமெங்கும் ஒரே அமைதி. 'அரசே என்னுடைய வேண்டுதலை மன்னித்த பிறகே, கேட்பதை அளிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இரதம் பவனி வந்து கோயிலை அடையும் வரை நான் இந்த நாட்டு அரசனாக வேண்டும். இதுவே என் ஆசை. தங்களிடம் கோரும் காணிக்கை!' மக்கள், ஆசாரியின் பேராசையைக் கண்டு ஆகாகாரமிட்டனர். ஆனால் அரசர் மட்டும் அமைதியாக கையமர்த்தி இரதத்தை விட்டு இறங்கினார். தொடர்ந்து, சின்ன மருது இறங்கினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'கலையரசன் நீர், எனவே இரத பவனி வரும் வரை நீரே அரசராக இருக்கலாம். ஆசாரியரே இதோ மணிமுடி, மோதிரம், செங்கோல்!!', என்று மனநிறைவோடு குப்பமுத்து ஆசாரிக்கு மகுடம் சூட்டினார் பெரியமருது. குப்பமுத்து ஆசாரி – அல்ல, அல்ல, குப்பமுத்து பாண்டியர் வீறுகொண்ட தோரணையில் இரதத்தை நாடிச் சென்றார். சப்பரத்தின் பேரில் தயாராக இருந்த கொட்டாப்புளியை எடுத்தார். அச்சின் நடுப்பாகத்தில் ஏதோ முளையொன்றை ஓங்கி அடித்தார். ஒரு புல் தெரித்து கீழே விழுந்தது. அடுத்த தரம் சற்றே அசைந்து கொடுத்தது. அனைவரும் அகன்ற கண்களுடன் குப்பமுத்துப் பாண்டியரை விழுங்கும் மெய்ப்பாட்டில் கவனித்தனர்.

குப்பமுத்துப் பாண்டியர் காளீஸ்வரை வணங்கி, ரதத்தில் ஏறினார். இரதமும் புறப்பட்டு சிவகங்கைத் தெருக்களில் பவனி வந்து கொண்டிருந்தது. பொழுது சாயும் நேரம் இரதம் கோவிலை நாடி திரும்பிக் கொண்டிருந்தது. அப்போது வீதி இறக்கமாக இருந்ததால் இரதம் சற்று வேகமாக ஓடி வந்தது. கோவிலின் அருகில் இரதத்தை நிறுத்த வேண்டி சிலர் முட்டுக்கட்டைகளை சக்கரங்களில் பொறுத்த முயன்றனர். அப்படி `பொறுத்துவதற்கு அமைத்த இரண்டு முட்டுக்கட்டைகளில் ஒன்று வழுக்கி மற்றொன்றில் நிற்க நேர்ந்ததால் இரதம் கிடுகிடுக்கும்படி அசைந்து நின்றது. அச்சமயம் பலர் பீதிக் குரல் எழுப்பி அலறினர். அதற்கேற்றார்போல் இரதத்தின் மேல் இருந்து பலர் தரையில் விழுந்து உருண்டனர். அப்படி விழுந்தவர்களுள் குப்பமுத்து பாண்டியவரும் ஒருவர். எங்கே? எங்கே அவர்? இரண்டாம் முட்டுக்கட்டையை பொருத்தியதில் இடறிவிட்ட சக்கரத்தில் சிக்கிகொண்ட அவர் குருதி திரு முழுக்கிலாழ்ந்திருந்தார். கூட்டம் சூழ்ந்து கொண்டது. மீட்க முடியுமா அவரை? குற்றுயிரும் குலை உயிருமாக கிடந்த ஈடு இணையற்ற கலைஞர் குப்பமுத்து பாண்டியரை மீட்க முடியுமா அவர்களால்?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூட்டம் ஒரே நெருக்கமாகக் கூடிவிட்டது. மருது சகோதரர்கள் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தனர். அவர்களைக் கண்ட குப்பமுத்து பாண்டியர் மோதிரத்தைக் கழற்றிக் கொள்ளுமாறு கண்களால் சைகை காட்டினார். முத்திரை மோதிரம் கழற்றப்பட்டது. சிதறியோடியிருந்த மணிமுடியையும், செங்கோலையும் கொண்டு வந்து பெரியமருதுவிடம் நீட்டினான் படைத்தலைவன் நயினப்பச் சேர்வை பெரிய மருதும் கண்கலங்க அவற்றைப் பெற்றுக் கொண்டார். குப்பமுத்தாசாரியின் முகத்தில் தெய்வக்களை தாண்டவமாடியது. திணறி நெளிந்து மடியிலிருந்த கடிதத்தை எடுத்து அரசரிடம் நீட்டினார். அடுத்து இருகரம் கூப்பி வணங்க முயன்றார், முடியவில்லை. காளீஸ்வரர் அவரைத் தம்முடன் ஐக்கியமாக்கிக் கொண்டார். பெரிய மருது கண்களைத் துடைத்துக் கொண்டு கடிதத்தைப் பிரித்தார். அதில் குப்பமுத்தாசாரியின் இறுதிக்குரல் ஒலித்தது. ‘அரசே! என்னை மன்னியுங்கள். தங்களிடம் காணிக்கை கேட்கும் எண்ணம் எனக்குக் கொஞ்சம் கூட கிடையாது. தங்கள் நலமே என் நலம்; இரதத்தை தொடங்கினேன். தொடங்கியதில் முதலில் விநாயகர் சிலை உடைந்தது. அபசகுனம் கண்டு மனமுடைந்து போனேன். பிறகு நாடி போட்டுப் பார்த்தேன். அது கூறியதோ மிகவும் பயங்கரம். இரதம் முடிவுற்றதும் வெள்ளோட்ட நாளில் இந்த நாட்டு அரசனாய் இருப்பவன் உயிர்ச் சேதம் காண்பான். அந்த பலியை எந்த விதத்திலும் தடுக்க முடியாது. இதுபற்றி தங்களிடம் கூற அஞ்சினேன். ஆகவே நச்சுத்தேர்வு நடத்தத் தொடங்கினேன் - துணிந்தேன். அதனால் இரதத்தை ஓடாமல் செய்து, பிறகு காணிக்கையின் பேரில் ஒருபொழுது அரசனானேன். இரதத்தில் ஏறினேன். காளையர் திருவுள்ளம் எப்படி என்றுதான் பார்ப்போமே, காத்துவிட்டால் அவர் கருணை தான்! ஆனால் நாடி? அது ஒருபொழுதும் பொய்க்காது என்பது என்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கை,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒருவேளை அப்படி நேருமானால் என்னை மன்னித்து இறப்பிலே நான் அமைதி பெற என்னை வாழ்த்துங்கள்.'

- குப்பமுத்து ஆசாரி

பெரிய மருது குழந்தை போல் கேவிக் கேவி அழுதார்.

மருதுவந் தாலுமேதே ரோடாது அவன்
மச்சினன் வந்தாலும் ஓடாது;
தேருக்கு டையவன் குப்பமுத் தாசாரி
தேர்வடம் தொட்டாலே தேரோடும்!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குப்பமுத்து ஆசாரியின் கதை

'சவுந்திரவல்லி! இன்னும் புறப்படவில்லையா?' என்று 101-வது தடவையாக திண்ணையில் இருந்தபடி வீட்டுக்குள்ளே கேள்வி எழுப்பினான் குப்பமுத்து ஆசாரி. அன்று அவனுடைய சகோதரன் முத்துலிங்கம் ஆசாரி வீட்டில் திருமணம். அதற்குத்தான் காலையிலிருந்து தன் மனைவியை புறப்படச் சொல்லி துரிதப்படுத்திக் கொண்டிருந்தான் குப்பமுத்து. சிறுவன் காளீசன், திருமண வீட்டு விருந்துண்ணும் ஆவலை அடக்க முடியாமல், அப்போதிருந்தே திண்ணைக்கும் தெருவிற்குமாய் நடை போட்டுக் கொண்டிருந்தான். 'நேரமாகிக் கொண்டிருக்கிறது, சவுந்திரா! இன்னும் புறப்படாமல் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?', என்றபடி பொறுமையிழந்து உள்ளேயே வந்து விட்டான் குப்பமுத்து. ஏளனமாகச் சிரித்தபடி, ஒரு பழைய அலமாரியின் முன்னால் ஒரு பழைய பட்டுப்புடவையை கையில் வைத்தவாறு நின்று கொண்டு இருந்தாள் சவுந்திரவல்லி.

அவளுடைய திருமணத்தன்று, மஞ்சள் நீராடுதலுக்கு வாங்கிய மாம்பழ நிற புடவை ஒன்று தான் அவளிடம் இருக்கும் ஒரே நல்ல புடவை. அதையே இத்தனை ஆண்டுகளுக்கு திரும்பத் திரும்ப எல்லா விசேஷங்களுக்கும் உடுத்திக் கொண்டு போய், இப்போது அந்த மாம்பழ நிறப்பட்டு கட்டியிருக்கிறவள் தானே - அவள் சவுந்திரவல்லி தான் என்று முகத்தைப் பார்க்காமலே எல்லோரும் அடையாளம் சொல்லிவிடுகிறார்கள்!

அவளுக்கு நிறைய பட்டுப்புடவைகள், வாங்கிக் கொடுக்க, குப்பமுத்துவுக்கும் ஆசை தான். ஆனால், அந்த அளவுக்கு வருமானம் இல்லையே?.... அவன் என்ன கதவு, சன்னல் செய்கின்ற ஆசாரியா, அடிக்கடி வேலையும் வருமானமும் கிடைப்பதற்கு?...... கலைநயம் மிக்க வாகனங்களும், தேர்களும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

படைக்கும் சிற்பியாயிற்றே! அன்றாடம் வருமானம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அஞ்சறைப் பெட்டியும், காய்கறித்தட்டும் செய்யலாமா? இப்படிப்பட்ட சிக்கலான நிலைமைகளை சமாளிப்பதும் குப்பமுத்துவுக்கு கை வந்த கலை தான்.

'ஏன் யோசிக்கிறாய்? மாம்பழமாகச் சிவந்த உன் பொன்மேனிக்கு இந்த மாம்பழ வண்ணப்பட்டுத் தான் மிகவும் பொருத்தம். சவுந்தரா!_ யோசிக்காமல் அதை உடுத்திக் கொண்டு புறப்படு!' என்று மெல்லிய கரகரத்த குரலில் மென்மையான புன்னகை இழையோடப் பாராட்டினான் அந்த ரசிகன்! அவனுடைய பேச்சில் பெரிதும் கோபம் தணிந்தவளாய், அந்தப் பட்டுப்புடவையை மெல்ல உதறிப் பிரித்துக் கட்டிக் கொள்ளத் தொடங்கினாள் சவுந்திரவல்லி.

வெளியிலிருந்து, 'அம்மா நேரமாகிறது. வாருங்கள் சீக்கிரம். எனக்குப் பசிக்கிறது' என்று குரல் கொடுத்தான் மகன் காளீசன். திருமணமாகி இத்தனை நாட்களான பிறகும் பிள்ளை பெற்று இத்தனை ஆண்டுகளான பிறகும் பெண்களுக்கு பட்டுப்புடவை மேல் உள்ள ஆசை குறையவில்லையே என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தான் குப்பமுத்து. 'அப்படியில்லை, ஒரு பெண் நகை நட்டு, நல்ல புடவை அணிய வேண்டும் என்று நினைப்பது அவளுடைய ஆசைக்காக இல்லை. தன் கணவனுடைய பொருளாதார நிலையை நான்கு பேர் முன்னிலையில் வெளிக்காட்டிக் கொள்ளத்தான். கணவனிடம் இவ்வளவு பணம் இருக்கிறது என்று கூட்டத்தின் நடுவில் அள்ளிக் கொண்டு வந்து காட்ட முடியுமா? அவனுடைய செல்வத்தை அவனது மனைவியின் நகையும் உடையும் அலங்காரமும் தான் காட்டும்', என்று எடுத்துச் சொன்னாள் சவுந்திரவல்லி.

ஓகோ! பெண்களுடைய ஆசைகளுக்கு இப்படி ஒரு விளக்கமும் இருக்கிறதோ? என்று ஏளனமாகச் சிரித்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குப்பமுத்து, புடவை உடுத்திப் பூரண எழிலுடன் நிற்கும் தன் மனைவியை ஏற இறங்கப் பார்த்தப்படி, 'சவுந்திரா! இந்த ஏழை உடையிலும் நீ எப்படி அழகுச் செல்வியாகத் திகழ்கிறாய்? உன்னைப் பார்த்தால் ஒரு சிற்பியின் மனைவியாகத் தெரியவில்லை. ஒரு நாட்டின் அரசியாகத் தெரிகிறாய்', என்று மனப்பூர்வமாகச் சொன்னான். 'அத்தான், எங்கள் வீட்டுக்கு எதிரில் ஒரு சோதிடர் குடியிருந்தார் தெரியுமா?' 'தெரியும். பறம்பு மலை பழனிவேலு சோதிடர் தானே? புகழ்பெற்ற சோதிடர் ஆயிற்றே?' "அவர் என் சின்ன வயதிலே என் ஜாதகத்தைப் பார்த்து அடிக்கடி சொல்வார் – 'சவுந்திரா! நீ ஒரு நாளைக்கு ராணியாயிருக்கப் போகிறாய், பார்', என்று சொல்லிச் சிரிப்பார்." 'உண்மை தான் சவுந்திரா! நீ இந்த மாலகண்டான் கிராமத்தில் பிறக்காமல் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாதிரி ஏதாவது தலைநகரிலே பிறந்திருந்தால், உன் அழகைப் பார்த்து யாராவது ஒரு மன்னர் உன்னைத் திருமணம் செய்து கொண்டிருப்பார்', என்று சிரித்த குப்பமுத்து தொடர்ந்து 'ஓர் அரசரின் கண்ணில் பட்டால் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் அந்தப்புரத்தில் சேர்த்துவிடுவார்' என்று அவன் சொன்னதும், சட்டென்று கோபத்துடன் அவனது கன்னத்தில் இடித்து, 'ச்சீய்! என்ன அசிங்கமெல்லாம் பேசுகிறீர்கள், வாயை மூடுங்கள்', என்று சீறினாள் சவுந்திரவல்லி.

'சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன், ஆனாலும் ஒன்று – எப்படியாவது உன்னை ஒரு ராணியாக்கிப் பார்க்க வேண்டும் என்று எனக்குள் ஓர் ஆசை இருக்கிறது சவுந்திரா!', என்று அழுத்தமான குரலில் தெரிவித்தான். எப்படி என்று வாயால் கேட்காமல் நீண்ட விழிகளில் பார்வையால் கேட்டபடி புறப்பட்டாள் அவள். எந்த ராஜாவது உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு ராணியாக்காததினாலேயே, உன்னைக் கல்யாணம் செய்து கொண்டவன் தான் ராஜாவாகி உன்னை ராணியாக்க வேண்டும் என்று ஏதோ நினைப்பும், சொல்லும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குழம்பிப் போய் பேசிக் கொண்டிருந்த கணவனைப் பார்த்து சின்ன சின்ன சீனி வெடிச் சிரிப்பாக மெல்ல நகைத்தாள் அவள் 'என்ன அத்தான், பசி மயக்கத்தில் உளற ஆரம்பித்து விட்டீர்களா? போதும் உங்கள் பிதற்றல்... வாருங்கள் போகலாம்', என்று வாசற்பக்கம் அழகுத் தேராக நடந்து வந்தாள் சவுந்திரவல்லி. திண்ணையில் இருந்த காளீசன் துள்ளிக்குதித்தப்படி பெற்றோரோடு சேர்ந்து கொண்டான். அவர்கள் திருமண வீட்டிற்கு போய்ச் சேர்ந்து விருந்து உண்டுவிட்டு பேசிக்கொண்டிருந்தபோது, அந்த கிராமத்தில் திடீரென்று ஒரு பரபரப்பு ஏற்பட்டு பரவியது. மன்னர் வெள்ளை மருதுவும், சின்ன மருதுவும் பரிவாரங்கள் புடைசூழ அந்த ஊருக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். நான்கைந்து குதிரைவீரர்கள் தூசிபடையாக முன்னே வர ரதங்களில் மன்னர்கள், அமைச்சர், தளபதி ஆகியோர் வந்திருந்தார்கள்.

அப்போது குப்பமுத்து ஆசாரியைத் தேடிக்கொண்டு ஒரு குதிரை வீரன் திருமண வீட்டிற்கு வந்தான். உள்ளே நுழைந்து குப்பமுத்து யார் என்று விசாரித்துக் கொண்டு அவன் முன்னே நின்றான். 'ஐயா, தங்களைப் பார்க்க மன்னர்பிரான் தங்கள் வீட்டிற்கு விஜயம் செய்திருக்கிறார்கள். தாங்கள் உடனே வீட்டிற்கு வாருங்கள்', என்று சொல்லிக்கொண்டே முன்னால் நடந்தான் வீரன். குப்பமுத்துவும், சவுந்திரவல்லியும் திடுக்கிட்டு, பின்னர் காளீசனை திருமண வீட்டில் விட்டுவிட்டு வேகமாக வீட்டிற்குத் திரும்பினார்கள். அங்கே திண்ணையில் பெரிய மருதுவும், சின்ன மருதுவும் வீற்றிருக்க பக்கத்தில் அமைச்சர், தளபதி, படைவீரர்கள் சுற்றிலும் பணிவோடு நின்று கொண்டு இருந்தார்கள். மன்னரைப் பார்த்து குப்பமுத்துவும், சவுந்திரவல்லியும் கீழே விழுந்து கும்பிட்டு வணங்கி ஓரமாக நின்றார்கள். 'அரசே! வாழ்க நின் கொற்றம்! மன்னர் பிரான் இவ்வளவு தூரம் இந்த ஏழை வீட்டுக்கு விஜயம் செய்ய வேண்டுமா? ஒரு வீரனை அனுப்பியிருந்தால் நான் ஓடி வந்து மன்னனைத் தரிசித்திருப்பேனே?' என்று அடக்கத்துடன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொன்னான் குப்பமுத்து. 'அப்படியில்லை குப்பமுத்து, உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். நான் நாட்டுக்கு அரசன் என்றால், நீ கலைக்கு அரசன்; ஓர் அரசன் மற்றொரு அரசனை நேரில், சந்திப்பது தான் சம்பிரதாயம்', என்று மென்மையான புன்னகையோடு சொன்னார் வெள்ளை மருது. 'அரசே! ஒரு நாட்டின் மன்னரின் ஆதரவால் தான் ஒரு சிற்பி சிறப்படைய முடியும்', என்று பணிவுடன் சொன்ன குப்பமுத்துவின் தோளில் தட்டிக் கொடுத்தபடி, 'தஞ்சையில் ராஜராஜசோழ மன்னர், கோயில் சிற்பிக்குப் பின்னால் நின்று வெற்றிலை மடித்துக் கொடுத்ததைக் கேள்விப்பட்டிருப்பாயே. அத்தகைய மாண்பு, மரியாதை தான் ஒரு வரலாற்றுச் சாதனையை உருவாக்க முடியும். அதிகாரத்தால் கட்டளையிட்டு ஒரு சிற்பியை அம்மிக்கல் செய்ய வைக்கலாம் - சிலையை வடிக்கச் செய்ய முடியாது இல்லையா', என்றார் பெரிய மருது. 'மன்னர் பிரானே! மற்ற மன்னர்களுக்கும் தங்களுக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. மற்றவர்களெல்லோரும் தாங்கள் தவமிருந்து மன்னர்களாகப் பிறந்தவர்கள். நீங்கள் இந்த நாட்டு மண்ணையும், மக்களையும் நேசிக்கிறீர்கள் என்பதும், இந்த மண்ணும் மக்களும் தங்களிடம் எத்தனை அன்பு செலுத்துகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். தாங்கள் கட்டளையிடுங்கள் அரசே! தங்கள் ஆணையைத் தலைமேல் தாங்கி நிறைவேற்றுகிறேன்', என்று தலைதாழ்த்திப் பணிவுடன் நின்றான் சிற்பி.

வெள்ளை மருது சிறந்த சிவ பக்தர். அதிலும் காளையார் கோயில் காளீசப் பெருமான் மேல் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இக்கோயிலின் ராஜகோபுரம் இவர் காலத்தில் தான் சிறப்பாக கட்டிமுடிக்கப் பெற்றது. நாட்டில் அரசியல் ரீதியாக போரும், தகராறுகளும் குழப்பங்களும் நிலவிய சூழ்நிலையிலும் இவர் சிவத்தொண்டில் அளவற்ற ஆர்வமும், ஈடுபாடும் கொண்டு திருப்பணிகள் செய்து வந்தார். காளையார் கோயில் திருத்தலத்தில் ஸ்தாபக லிங்கமான சோமேசுவரர்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுயம்பு லிங்கமாகிய காளீசர், காரண லிங்கமாகிய சுந்தரேசர் ஆகிய மூன்று லிங்கங்கள் ஒரே இடத்தில் அமைந்த தனிச்சிறப்பு இருந்தது.

மூன்று லிங்கங்கள் ஒரே இடத்தில் அமைந்த வரலாற்றுச் சிறப்புப் போல, அங்கே மூன்று தேர்கள் இருக்க வேண்டும் என்று அவரது திருவுள்ளம் விரும்பியது. அதிலும் மூன்றாவதாகச் செய்யப்பெறும் தேர், மிகவும் பிரம்மாண்டமாகவும் - நிர்மாணிக்கப்பட வேண்டும் என்று நினைத்தார். அந்த விருப்பத்தை நிறைவேற்றும் திட்டத்துடன் தான் அவர் அந்த மாலகண்டான் கிராமத்திற்கு வருகை தந்திருந்தார். அந்த ஊரில் உள்ள சிற்பிகள் தேர் செய்யும் கலையில் வல்லவர்கள். ஏற்கனவே காளையார் கோயிலில் இருக்கும் இரண்டு தேர்களையும் செய்தவர் குப்பமுத்துவின் தந்தை வீரமுத்து ஆசாரி தான். அவர் தனது அந்திம காலத்தில் காளையார் கோயில் வந்திருந்து தேர்களைச் செய்யும் போது அவருக்குப் பெருந்துணையாக இருந்த குப்பமுத்துவின் திறமையை வெள்ளை மருது ஏற்கனவே தெரிந்து வைத்திருந்தார். 'குப்பமுத்து! காளையார் கோயிலுக்கு இன்னொரு தேர் செய்ய வேண்டும்', என்று தொடங்கினார் பெரிய மருது.

'ஏற்கனவே இரண்டு தேர்கள் - சுவாமிக்கு ஒன்றும், அம்மனுக்கு ஒன்றும் - இருக்கின்றனவே', என்றான் குப்பமுத்து. 'ஆமாம்! ஆனால் நீ செய்யப்போகும் மூன்றாவது தேர். அவற்றையெல்லாம் விட மிகப் பெரியதாக இதுவரை இப்படி ஒரு பிரம்மாண்டமான தேர் யாருமே செய்ததில்லை. இந்த நாட்டிலே மிகப் பெரிய தேர் காளையார் கோயிலில் தான் இருக்கிறது என்னும் வரலாற்றுச் சிறப்புடையதாக அமைய வேண்டும்', என்று உறுதியான குரலில் தெரிவித்தார் பெரிய மருது. 'அப்படியென்றால் - முழுத்தேர் தான் அமைக்க வேண்டும் அரசே!' 'அதற்கு என்ன பெயரோ? என்ன

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அளவோ எனக்குத் தெரியாது. ஆனால் அது மிகவும் பெரிய தேராக இருக்க வேண்டும். அது உன்னால் தான் செய்ய முடியும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீ என் வேண்டுகோளை ஏற்று காளையார் கோயில் வந்து தங்கி அந்தத் திருப்பணியை முடித்துத் தர வேண்டும். அடுத்த வாரத்தில் ஒரு நாள் பார்த்து நான் வண்டிகளை அனுப்பி வைக்கிறேன். நீயும் உன் உதவியாட்களும், குடும்பங்களோடு காளையார் கோயில் வந்து விட வேண்டும்.'

'தங்கள் கட்டளைப்படி நடக்கிறேன் அரசே!' என்று மனமகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டான் குப்பமுத்து. மன்னர் பக்கம் திரும்பியதும், அவர் குறிப்பறிந்து ஒரு தட்டில் பழங்கள், மலர், மங்கலப்பொருட்களுடன், பட்டு வேட்டி, துண்டு, பொற்காசுகள் ஆகியவற்றை வைத்து குப்பமுத்துவிடம் நீட்டினார். பணிவுடன் வணங்கி அத்தட்டை வாங்கிக் கொண்டான் சிற்பி. நாங்கள் வருகிறோம் என்று மன்னர் எழுந்தார். பரிவாரங்களும் எழுந்து புறப்பட்டார்கள். நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் கனவு போல் பார்த்து பிரமை பிடித்தவள் போல் நின்றாள் சவுந்திரவல்லி. 'சவுந்திரா காலையில் தானே பேசிக் கொண்டிருந்தோம் ராஜா, ராணி, அரண்மனை என்று இப்போது பார்த்தாயா, அரசரே நம்மைத் தேடி வந்துவிட்டார். இன்னும் ஒரு வாரத்தில் நாம் அரண்மனைப் பக்கம் போகப் போகிறோம். இப்போது மகிழ்ச்சி தானே சவுந்திரா. இந்த தட்டில் மன்னர் பொற்காசுகளை வைத்திருக்கிறாரே, இது தேர் செய்வதற்கான மொத்த கூலி அல்ல. முன்பணம் தான். இத்தனையும் உனக்குத் தான் சவுந்திரா. உன் அழகான உடலுக்கு பொருத்தமான வண்ண வண்ணப் பட்டுபுடவைகளும் நகைகளும் வாங்கிக் கொள்', என்று உள்ளமெல்லாம் மகிழ்ச்சி பொங்கச் சொன்னான் கணவன். மன்னர் வழங்கிய தட்டை அவளிடம் கொடுத்துவிட்டு உள்ளே தன் அறைக்குப் போய் தேர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்வதற்கு தந்தை சேர்த்து வைத்த குறிப்புகளை தேடி எடுத்துப் பார்க்கத் தொடங்கினான் சிற்பி.

ஒரு நல்ல நாளில் மருது மன்னர் அனுப்பிய பத்து மாட்டு வண்டிகள் வந்து குப்பமுத்துவின் வீட்டிற்கு முன்னால் நின்றன. ‘அத்தான் நாம் காளையார் கோவில் போக வண்டிகள் வந்துவிட்டன. புறப்படலாமா?’ என்று ஆர்வத்தோடு துள்ளியபடி வந்து கணவனிடம் கேட்டாள் சவுந்திரவல்லி. ஆனால் குப்பமுத்துவின் முகம் சோர்ந்து சுருங்கி இருப்பதைக் கண்டு அவள் திடுக்கிட்டுப் போனாள். ‘என்ன அத்தான் ஏன் இப்படி இருக்கிறீர்கள்?’ ‘சவுந்திரவல்லி நாம் காளையார் கோவிலுக்குப் போகவில்லை. நான் மட்டும் தான் போகிறேன்’, என்று தளர்ந்த குரலில் - ஆனால், அழுத்தமாகச் சொன்னான் அவன், ‘ஏன் நீங்கள் அங்கே தங்கியிருந்து தேர் செய்யப்போவதில்லையா?’, ‘இல்லை! நான் தேர் செய்யப்போவதில்லை’, என்று அவன் உறுதியாகத் தெரிவித்தான். ‘ஏன் அத்தான்?’, என்று ஏமாற்றம் பொங்கும் குரலில் கேட்டாள் அவள். ‘நான் தேர் செய்யப்போவதில்லை என்பது மட்டும் உனக்குத் தெரிந்தால் போதும். ஏன் செய்யவில்லை என்பதை மன்னனிடம் சொல்லத்தான் நேரில் போகிறேன்’, என்று கண்டிப்பான குரலில் கூறினான் சிற்பி.

‘தேர் செய்கிறேன் என்று ஒப்புக்கொண்டு மன்னரிடம் கை நீட்டி முன்பணம் வாங்கி செலவழித்துவிட்டோமே’, என்று கவலையுடன் கேட்டாள் சவுந்திரவல்லி. ‘அந்தப் பணத்திற்கு ஈடாக அரண்மனையில் ஏதாவது வேலைகள் செய்து கொடுத்து விட்டு வருகிறேன்’, என்று கூறிவிட்டு ஒரு வண்டியில் ஏறி அமர்ந்தான் அவன். அவன் தனியே போவதைப் பார்த்து அவள் திகைத்து நின்றது போலவே - காளையார் கோவிலில் அவன் தனியே வருவது கண்டு மன்னர்கள் திகைத்துப் போனார்கள். ‘குப்பமுத்து என்ன நீ மட்டும் தனியாக வருகிறாய்? தேர் செய்ய உனக்கு உதவியாட்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வரவில்லையா?', என்று பதட்டத்துடன் கேட்டார் வெள்ளை மருது. 'அரசே வாழ்க! நின் கொற்றம் வாழ்க! என்னை மன்னித்துவிடுங்கள். நீங்கள் சொல்வது போல் மிகப் பெரிய தேர், முழுத் தேர் என்னால் செய்ய முடியாது.' 'ஏன் குப்பமுத்து?' என்று அமைதியாக கேட்டார் பெரிய மருது. 'அரசே ஒரு முழுத் தேர் செய்வதற்கு என் தந்தை வைத்திருந்த குறிப்புகளையும், சாஸ்திரங்களையும் படித்துப் பார்த்தேன். அதற்குப் பிறகுதான் அப்படி தேர் செய்யக்கூடாது என்று முடிவு செய்தேன்.' 'ஏன் அப்படி ஒரு தேர் செய்யக் கூடாது?' 'அரசே! அந்தக் காரணத்தை மட்டும் தயவு செய்து கேட்காதீர்கள். நான் நன்றாக யோசித்து தான் அப்படி ஒரு பெரிய தேர் செய்யக்கூடாது என்று கூறுகிறேன்', என்று அழுத்தமாகத் தெரிவித்தான் சிற்பி. வெள்ளை மருது அவனை ஏற இறங்கப் பார்த்தார். 'குப்பமுத்து, நானும் நன்றாக யோசித்துதான் அப்படி ஒரு பெரிய தேர் செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறேன், புரிகிறதா? இந்த தேர் செய்யும் பணியை நான் உன்னிடம் ஒப்படைத்ததற்குக் காரணம், ஏற்கனவே இங்கே உள்ளே இரண்டு தேர்களை உன் தந்தை செய்திருக்கிறார் என்பது தான். அந்த வீரமுத்து ஆசாரியின் மகனும் ஒரு சிறந்த சிற்பி என்று நினைத்துத் தான் உன்னிடம் பேசினேன். நீ அப்படி இல்லையென்றால்?' என்று சொல்லிவிட்டு சற்றே நிறுத்தினார் வெள்ளை மருது.

அந்தச் சொற்கள் குப்பமுத்துவின் கலைத்திறனுக்கும், படைப்பாற்றலுக்கும் சவாலாய் எதிர்நின்று தோள் தட்டுவதைப் போல் உணர்ந்தான் அந்த இளம் சிற்பி. சில விநாடிகள் சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவன், தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்ததை அவனது இறுகிய முகத்தின் தசைகள் காட்டின. 'அரசே! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. உங்களுடைய லட்சியத் தேரை வேறு யாராவது ஒரு சிற்பி செய்வதை விட, நானே செய்து முடிக்க ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை', என்று அவன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூறியதும், மறுபடியும் அரசவையில், இருந்தவர்கள் கோபத்துடன் அவனை உற்று நோக்கினார்கள். 'மிக்க மகிழ்ச்சி. குப்பமுத்து! உன் நிபந்தனையை சொல்', என்று புன்னகைத்தவாறு கேட்டார் பெரிய மருது. 'தேர் செய்து முடிந்ததும் வழக்கம்போல் அதற்கு கூலி என்று நீங்கள் பொற்காசுகள் கொடுக்கக்கூடாது. நான் கேட்பதை சன்மானமாகக் கொடுக்க வேண்டும்', என்று உறுதியான குரலில் தெரிவித்தான் அவன். 'எனக்குத் தெரியும் குப்பமுத்து, தொழிலாளிக்குக் கொடுப்பது தான் கூலி. கலைஞனுக்கு கொடுப்பது சன்மானம் தான். திருப்பணி முடிந்ததும் நீ எதை வேண்டுமானாலும் சன்மானமாகக் கேள். நான் தர சம்மதிக்கிறேன்', என்று சிறிதும் யோசிக்காமல் மன்னர் அறிவித்ததைக் கேட்டு அவையினர் அனைவரும் திகைத்துப் போனார்கள். மறுநாள், மாலகண்டான் கிராமத்திற்கு மீண்டும் அரண்மனை வண்டிகள் போய் குப்பமுத்துவின் குடும்பத்தையும் அவனது உதவியாட்களையும் காளையார்கோவிலுக்கு அழைத்து வந்தனர்.

அடுத்து நல்ல முகூர்த்த நேரத்தில் திருப்பணி தொடங்கியது. பிரம்மாண்டமான அந்த தேர் சில மாதங்களில் குப்பமுத்துவின் கைவண்ணத்தில் நிறைவு பெற்றது. தேர் வெள்ளோட்டத்திற்கான நாள் குறிக்க வெள்ளை மருது அரசவையைக் கூட்டினார். ராஜ சோதிடர் நல்ல முகூர்த்த நாளையும் நேரத்தையும் குறித்துக் கொடுத்தார். தன் லட்சியத்தை நிறைவேற்றிவிட்ட மகிழ்ச்சியில் திளைத்திருந்த மன்னர், 'குப்பமுத்து நான் எதிர்பார்த்ததை விட மிக அருமையான தேரை செய்து முடித்திருக்கிறாய். தேர் உருவாக்குவதில் கை தேர்ந்த சிற்பியான உன் தந்தையையே மிஞ்சும் அளவிற்கு செய்திருக்கிறாய். ஒரு மகன் தந்தைக்கு செய்யும் நன்றி அது தான். உன்னை மனதார பாராட்டுகிறேன். இந்த மாபெரும் கலைப்படைப்பிற்காக என்னிடம் என்ன

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சன்மானத்தை எதிர்பார்க்கிறாய்?', என்று கேட்டார் அரசர். குப்பமுத்து தயக்கத்துடன் எழுந்து நின்றான்.

'அரசே! வாழ்க நின் கொற்றம். நான் விரும்பும் சன்மானத்திற்கு தாங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அதைக் கேட்பதற்காக என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும்', என்று தயங்கி தயங்கி சொல்லி முடித்தான். வெள்ளை மருது, கல கல என்று கம்பீரமாக சிரித்தார். 'கோபமாவது? மன்னிப்பாவது? குப்பமுத்து! நான் இப்போதும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன், நீ எதைக் கேட்டாலும் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன்', என்றார் அவர். குப்பமுத்து மெல்ல சுற்றிலும் தன் பார்வையை செலுத்திவிட்டு சட்டென்று வருவித்துக்கொண்ட துணிச்சலில் நிமிர்ந்து சொன்னான். 'அரசே! தேரின் வெள்ளோட்டத்தன்று காலையில் உங்கள் சிம்மாசனத்தில் என்னை அமர்த்தி அரசனாக முடிசூட்ட வேண்டும். அன்று ஒருநாள் முழுவதும் நான் அரசனாகவும், என் மனைவி அரசியாகவும், என் மகன் இளவரசனாகவும் இருக்க அனுமதிக்க வேண்டும்', என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் சின்னமருதுவும், தளபதியும் சீறி எழுந்தார்கள்.

'டேய் குப்பமுத்து என்ன சொன்னாய்? இந்த சிம்மாசனத்தில் நீயா?' என்று சிங்கமாகக் கர்ஜித்தார் சின்ன மருது. 'ஏய் இப்படி சொன்ன உன் நாக்கை இப்போதே அறுத்து எறிகிறேன் பார்', என்று தளபதி வாளை உருவிக்கொண்டு பொங்கினார். அவை முழுவதும் கோப அலை வெடித்தெழுந்து பரவியது. வெள்ளை மருது சட்டென்று எழுந்து அனைவரையும் அமைதிப் படுத்தினார். 'எல்லோரும் அமைதியாக இருங்கள். இது நாட்டின் அரசனுக்கும், கலையின் அரசனுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினை. இந்த சிற்பி கேட்கும் சன்மானத்தைக் கொடுப்பதாக நான் ஏற்கனவே வாக்களித்திருக்கிறேன் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். சொன்ன வார்த்தையை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சீரணிக்கிறவன் நான், வாந்தி எடுக்கிறவன் அல்ல. குப்பமுத்து சாதாரண கலைஞனாக இருந்தால், சன்மானமும் சாதாரணமாக கேட்டிருப்பான். ஆனால் அவன் ராஜ கலைஞன். ஆகவே, அவனுக்குரிய சன்மானமும் ராஜரீதியாகத் தான் இருக்கும்', என்று அவையில் உள்ளவர்களுக்கு விளக்கம் சொல்லிவிட்டு குப்பமுத்துவின் பக்கம் திரும்பினார்.

'குப்பமுத்து! மிக்க மகிழ்ச்சி. என்னுடைய உயிரான லட்சியத்தை நிறைவேற்றியவன் என்ற முறையில் நீ என் உயிரையே சன்மானமாகக் கேட்டிருக்கலாம். ஆனால் உன் அரசன் மேல் கொண்டிருக்கும் அன்பின் காரணமாக அவனுடைய சிம்மாசனத்தை மட்டும், அதுவும் ஒருநாள் மட்டும் கேட்டிருக்கிறாய். நான் நாள்தோறும் வழிபடும் சிவபெருமான் வீற்றிருந்து உலா வரப்போகும் இந்த அற்புதத் தேருக்காக என் உயிரையே கொடுக்கவும் நான் ஆயத்தமாகிறேன். ஆனால், நீ மிகக் குறைந்த சன்மானம் தான் கேட்கிறாய். மிக்க மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்கிறேன். ராஜசோதிடர் குறித்துள்ள வெள்ளோட்ட நாளன்று காலையில் நம் அரண்மனையில் உனக்கு முடிசூட்டு விழா நடக்கும். நம் ராஜபுரோகிதர் அதை நடத்தி வைப்பார். அன்று ஒருநாள் முழுவதும் நீ தான் இந்த நாட்டின் மன்னர்', என்று பிரகடனம் செய்தார் பெரிய மருது.

மன்னரின் பேச்சுக்குப் பிறகு அவையில் பரபரப்பு மெல்ல அடங்கி வெளியே அது விஸ்வரூபம் எடுத்து நாடெங்கும் பரவியது. இதைக் கேட்டதும் சவுந்திரவல்லி துடித்து போய் விட்டாள். 'அத்தான்! என்ன காரியம் செய்து விட்டீர்கள். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்து துரோகத்திற்கு ஆளாகி விட்டீர்களே? எப்பேர்ப்பட்ட மன்னரை நீங்கள் அவமானப்படுத்திவிட்டீர்கள்?', என்று கணவனிடம் கடுஞ்சினத்துடன் எதிர்த்துப் பேசினாள் அவள். 'சவுந்திரா! உன்னை ஒரு நாளாவது அரசியாக்கிப் பார்க்க வேண்டும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பது என் நெடுநாளைய லட்சியம். உனக்குத் தெரியும்', என்று அவன் விளக்கம் சொல்லத் தொடங்கிய போது, அவள் எரிமலையாய் வெடித்தாள். 'என்ன சொல்கிறீர்கள்? இந்த ராஜ சிம்மாசனத்திலே இந்தப் பெண்ணா? இல்லை. இது நடக்காது. தெய்வம் இருக்கும் பீடத்தில் தெரு நாயா? இல்லை. இதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். சம்மதிக்க மாட்டேன்.', என்று சீறிக் குமுறினாள். சரி. 'நீ அரசியாகச் சிம்மாசனத்தில் அமர மறுத்துவிட்டால், நம் மகன் காளீசனையாவது கொடு, அவனை ஒரு நாள் இளவரசனாக்கிப் பார்க்கிறேன்', என்றான்.

'இல்லை உங்களுடைய ராஜ துரோகத்திற்கு என் மகனை உடன்படுத்த மாட்டேன்', என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டாள் சவுந்திரவல்லி. குறிப்பிட்ட முகூர்த்த நாளில் காலைப் பொழுதில் அரண்மனையில் ராஜபுரோகிதர் குப்பமுத்துவை ராஜசிம்மாசனத்தில் அமர்த்தி முடிசூட்டு விழா நடத்தினார். முடிசூட்டிக்கொண்ட குப்பமுத்து, தேரின் முன்தட்டில் ஏறி அமர்ந்தான். மேலே நடுவில் உற்சவ விக்ரஹம் வைக்கும் இடத்தில் வெள்ளோட்டத்திற்கான பூரண கும்பங்கள் அலங்காரங்களுடன் வைக்கப்பட்டிருந்தது. தேரின் முன்னே தனது வாழ்க்கை லட்சியம் நிறைவேறிய மன நிறைவில் முகமெல்லாம் மகிழ்ச்சி பொங்க நின்று கொண்டிருந்தார் பெரியமருது. வெள்ளோட்டத்திற்கான பூஜைகளும், சடங்குகளும் நியமப்படி நடத்தப்பெற்றன. வழக்கம்போல் ஒரு கொழுத்த கருப்பு ஆடு, தேரின் முன்னால் பலி கொடுக்கப்பட்டு வெள்ளோட்டம் தொடங்கியது.

தாரை, தப்பட்டை, குரவை ஒலி முழக்கங்களுடன் திரளாகக் கூடியிருந்த மக்கள் வெள்ளம் ஆர்வத்துடன் வடங்களைத் தொட்டுத் தூக்கிப் பிடித்து இழுக்கத் தொடங்கினார்கள். வானத்தை தொடுவது போன்ற உயரத்துடன், வண்ணச் சீலைகள் அசைந்தாட உச்சிக் கலசம் கம்பீரமாக அழகை தன் இரு பெரிய கண்களாலும் பெருமையும், ஆனந்தமும் பொங்கப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பார்த்தபடி தேரின் பின்னால் நடந்து சென்று கொண்டிருந்தார் பெரிய மருது. பக்கத்தில் சின்ன மருது, அமைச்சர், தளபதி, புரோகிதர், சோதிடர் ஆகிய அரச பரிவாரங்கள் மாபெரும் தேர் காளையார் கோயிலின் ரத வீதிகளில் வருவதைப் பார்க்கும் மகிழ்ச்சியோடும் - அதே சமயம் தேரில் மருது மன்னர் வீற்றிருக்க வேண்டிய இடத்தில் ஒரு வெறும் சிற்பி உட்கார்ந்திருப்பதைப் பார்க்கும் வேதனையோடும், மௌனமாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள். மூன்று திசை வீதிகளிலும் சுற்றி விட்டு நான்காவதாக ஈசான்ய மூலையில் தேர் திரும்பும்போது, 'சரக்' என்று ஒரு குலுக்கலில் அதிர்ந்து அசைந்து குதித்தது. அந்த ஒரு வினாடிப் பொழுதில் - ஒரு எதிர்பாராத நிகழ்ச்சி நடந்து விட்டது. அந்த ஒரு வினாடிப் பொழுதில் தேர்த்தட்டிலிருந்த குப்பமுத்து திடீரென்று தூக்கியெறியப்பட்டது போல், தேரின் முன்னால் முன் சக்கரத்திற்குள் சிக்கிக் கொண்டு விட்டான்.

அனைவரும் திடுக்கிட்டுப் போய் வடங்களை விட்டுவிட்டு தேரின் முன்னால் ஓடி வந்து நின்றார்கள். திகைப்பில் அதிர்ந்து போன பெரிய மருது முன்னே ஓடி வந்து ரத்த வெள்ளத்தில் நசுங்கிக் கிடந்த குப்பமுத்துவை மீட்டுத் தன் மடியில் ஏந்திக் கொண்டார். 'குப்பமுத்து! குப்பமுத்து! எப்படி கீழே விழுந்தாய்? ஏன் இத்தனை கவனக் குறைவாய் இருந்துவிட்டாய்?', என்று துடித்து அழுதார் மன்னர். உடம்பின் பெரும்பகுதி தேர்ச்சக்கரத்தால் நொறுக்கப்பட்ட நிலையில் கடைசி மூச்சுக் காற்றின் அலைகளை வெளியிட்டுக் கொண்டிருந்த குப்பமுத்து திக்கித் திணறிப் பேசினான். 'அரசே! வாழ்க நின் கொற்றம்! என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் தேர் செய்ய எனக்குக் கட்டளையிட்டதும் என் தந்தை வைத்திருந்த தேர் பற்றிய சாஸ்திரங்களையும், குறிப்புகளையும் எடுத்துப் படித்தேன். இப்படி ஒரு பிரம்மாண்டமான முழுத் தேர் செய்தால் அந்தத் தேரின் வெள்ளோட்டத்தின் போது வழக்கமான முருகப்பலி மட்டுமல்ல நாட்டு மன்னரே பலியாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நேரிடும் என்று குறிப்பு இருந்தது. உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதற்காகவே நான் இந்தத் தேர் செய்ய மறுத்தேன். ஆனால் நீங்கள் உங்கள் லட்சியத்தின் மேல் கொண்டிருந்த தீவிரத்தில் இந்தத் தேர் செய்வதால் உயிர் இழக்க நேரிடும் என்று தெரிந்தாலும், நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்கள் என்பதையும், நான் மறுத்துவிட்டாலும் இன்னொரு சிற்பியை வைத்துச் செய்திடுவீர்கள் என்பதையும் புரிந்து கொண்டேன். அதனால் தான் நானே இந்தத் தேர் செய்ய ஒப்புக் கொண்டேன். தேர் செய்த பிறகு ஒரு வேளை அந்த சாஸ்திரக் குறிப்பு உண்மையாகிவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் உங்களுக்குப் பதிலாக நானே தேருக்கு பலியாவது என்று தீர்மானித்து இன்று ஒரு நாள் மட்டும் நான் அரசனாக இருக்க முடிசூட்டிக் கொண்டேன். நல்லவேளை நான் பயந்தபடியே நடந்துவிட்டதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்', என்று குப்பமுத்து சொன்னதும் வெள்ளை மருது கதறி துடித்தார். சுற்றி நின்ற எல்லோரும் அவனுடைய தியாகத்தைக் கண்டு மெய் சிலிர்த்தவர்களாய் அவனுக்கு அமைதியாக கண்ணீர் அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

வெள்ளை மருது கண்ணீரைத் துடைத்துக் கொண்டு குப்பமுத்துவின் பக்கத்தில் அழுது அரற்றிக் கொண்டிருந்த சவுந்திரவல்லியையும், காளீசனையும் பரிவோடு பார்த்தார். 'குப்பமுத்து என் லட்சியத்தை நிறைவேற்றுவதற்காகவும், என் உயிரைக் காப்பாற்றுவதற்காகவும், உன் வாழ்க்கையை தியாகம் செய்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்தாலும் போதாது. என் ராஜபரம்பரை காலம் மட்டுமல்ல. இந்த வரலாற்று சாதனையான தேர் நிற்கும் காலம் வரை உன் பெயரும், தியாகமும் நிலைத்து நிற்கும். குப்பமுத்து, உன் மனைவி இன்று ஒரு நாள் மட்டும் அரசி மட்டுமல்ல. வாழ்நாள் முழுவதும் மாலகண்டான் கிராமத்தில் அரசி மாதிரி என் தங்கையாக ராஜபோகத்துடன் வாழ்வாள். உன் மகன் இளவரசன் போல் வளர்க்கப்படுவான். இது ராஜ கட்டளை', என்று அரசர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிரகடனம் செய்து முடிப்பதற்கும் அந்த தியாகியின் ஆவி அவனுடைய பிரம்மாண்டமான கலைப் படைப்பின் உச்சக்கலசத்தை பெருமையுடன் தரிசித்து, கடந்து போய் விண்வெளியில் சங்கமிப்பதற்கும் சரியாக இருந்தது.

முடிவுரை

பல நூற்றாண்டுகள் சிறப்பு மிக்க தேர்க்கலை, தேர்த் திருவிழா, மிகச்சிறப்பாக போற்றப்பட்டும் வளர்க்கப்பட்டும் வருகிறது. மிகப்பெரிய அளவில் இரதங்களைப் பற்றி அலைசி ஆராய தற்போது போதிய அவகாசம் இல்லை. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் இந்த புத்தகத்தின் இரண்டாம் பாகம் வெளிவர உள்ளது.

இப்புத்தகத்திற்கு மக்கள் தரும் அன்பும் ஆதரவும் இரண்டாம் புத்தகத்திற்கு ஊக்கமாகவும் பேருதவியாகவும் இருக்கும் என உளமாற வேண்டுகிறேன்.

தேர்க்கலையானது தலைமுறை தலைமுறையாக ஸ்தபதிகளால் சிறப்பாக வளர்க்கப்பட்டு வருகிறது. இக்கலை மேலும் பல நூற்றாண்டுகள் தொடர இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

நன்றி! வாழ்க வளமுடன்!

வளர்க சிற்பக்கலை!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



தங்க இரதம்

தங்க இரத வரைபடத்தின் குறுக்குத் தோற்றம். பிரம்மா கையில் கடிவாளம் மற்றும் சாட்டையுடன் தேர் சாரதியாக அமர்ந்திருக்கிறார். கையில் விளக்கேந்திய பெண்ணின் சிற்பங்கள் முன். பின் பக்கங்களில் உள்ளன. மலரின் தோற்றத்தில் செதுக்கப்பட்ட தளம். தேரின் முன்னும் பின்னும் அலங்கரிக்கப்பட்ட திரைச்சீலைகள். அலங்கரிக்கப்பட்ட தூண்கள். இரண்டு அடுக்கு சிம்மாசனம் ஆகியவை காணப்படுகிறது. விநாயகப்பெருமான் தன் வாகனத்துடன் விமானத்தின் மேல் உளள தோற்றம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)



ஸ்தபதி திரு கே. இராஜாமணி அவர்கள்

கைலாசநாதர் வாகனம் (இராவணன்)
உருக்கொடுத்தவர் ஸ்தபதி திரு. ஆர். புவனசுந்தரம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)